உரோமிற்குள் சென்றார். ஆனால், பொம்பேயும் மற்றைய செனட் உறுப்பினர்களும் தப்பி ஓடிவிட்டனர். ஆனால், சீசர் பொம்பேயை எகிப்து வரைக்கும் கலைத்துச் சென்று கொலை செய்தார். கிளியோபாத்ராவின் ஆட்சியில் இருந்த எகிப்து உரோமின் நட்பு நாடாக மாறியது. ஜுலியசீசர் உரோமக் குடியரசை உண்மையான சர்வாதிகாரியாகத்தான் ஆட்சி செய்தார். ஆனால், குடியரசுப் பாரம்பரியத்திற்கும் அரசிற்கும் மரியாதை செலுத்தினார். ஸ்பெயின், ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் கிளர்ச்சிகளை அடக்கிய பின்பு பல சீர்திருத்தங்களுடன் தனது ஆட்சியை ஆரம்பித்தார். அவையாவன:

1. விவசாயத்தில் வளர்ச்சி
2. வரிக்குறைப்பு
3. ஊழலையும் அடக்குமுறை ஆளுநர்களையும் நீக்கினார்
4. கோ.ஃல் மற்றும் சிசிலி மக்களுக்குப் பிரஜா உரிமை வழங்கினார்
5. பொது நிலங்களைப் பகிர்ந்தார்
6. பொது வேலைத் திட்டங்களை ஆரம்பித்தார்
7. நாணய முறைகளை மேம்படுத்தினார்
8. ஜுலியன் கலண்டரை கி.மு. 45இல் அறிமுகம் செய்தார்

சட்டக்கோவை மற்றும் நூலகங்களை அறிமுகம் செய்வதற்கான திட்டங்கள் அவரிடம் காணப்பட்டாலும் துரதிஸ்டவசமாக அவற்றைச் செயற்படுத்துவதற்கு அவர் இல்லை. புறூட்டசின் தலைமையில் அவரின் எதிரிகள் அவரை கி.மு. 44இல் ஐட்ஸ் ஒப் Marchஇல் கொன்று விட்டனர். இதன்மூலம் உரோமில் உள்நாட்டுப் போர் உருவானது.

## 2.10. அகஸ்ரசின் பொற்காலம் – சீர்திருத்தக்காலம்

உரோம வரலாற்றில் அகஸ்ரசின் சகாப்தம் ஒரு பொற்காலம் என வர்ணிக்கப்படுகின்றது. இக்காலகட்டம் சமாதானத்திற்கும் வளர்ச்சிக்கும் உரிய காலமாகும். பல நிர்வாகப் பொருளாதார சீர்திருத்தங்களை அகஸ்ரஸ் அறிமுகப்படுத்தினார். நேர்மையான மற்றும் வாய்மையான ஆளுநர்களையும் மற்றைய ஊழியர்களையும் மாநிலங்களில் நியமித்து அவற்றின் நிலைமைகளை உயர்த்தினார். எல்லோருக்கும் மத்திய அரசினால் ஊதியம் வழங்கப்பட்டது. ஆளுநர்கள் சனத்தொகைக் கணக்கெடுப்பைக் குறிப்பிட்ட மாகாணங்களில் எடுத்தார்கள். அத்துடன், பிரசைகளின் சொத்துக்கள் பற்றிய விபரங்களும் திரட்டப்பட்டன. இச் சொத்துக் கணிப்பின்மூலம் வரிகள் சரியான முறையில் பங்கிடப்பட்டு அறவிடப்பட்டது. அரசன் வறுமையான மக்களுக்குப் பஞ்ச காலங்களில் உணவு வழங்கியபடியால் மக்கள் அவனைக் கடவுளாக மதித்தனர். வறிய மக்களின் வேலைவாய்ப்பிற்காகப் பொது வேலைத் திட்டங்களைப் பொறுப்பெடுத்துக் கொண்டான். அகஸ்ரஸ், பொதுவேலைத் திட்டங்களான பொதுக் கட்டடங்கள், தெருக்கள், பாலங்கள், திறந்த வெளி அரங்குகள் (Amphi theatre) மற்றும் நீர் ஊற்றுக்கள் என்பவற்றில் அதிக செலவு செய்தான். அவற்றுள் மிகவும் முக்கியமானவை கொலோசியம், மிகப் பெரிய திறந்த வெளியரங்குகள், குளியலறைகள் சிறப்பாக விளங்கின. மாகாணங்களில் இருந்து தலைநகரை அடையும் வழிகள் செப்பனிடப்பட்டன. ஏனெனில், வர்த்தக மற்றும் வியாபாரத்தைப் பெருக்குவதோடு அல்லாமல் அரசியல் கட்டுப்பாட்டையும் வைத்திருப்பதற்காகும். அதனால்தான் ‘‘எல்லாப் பாதைகளும் உரோமிற்கே செல்கின்றன’’ என்ற வாசகம் காணப்படுகின்றது. உரோம் நகரம் வர்த்தக வியாபார நடவடிக்கைகளுக்குச் சிறந்த மத்திய நிலையமாக விளங்கியது. ரைபர் நதிக்கரையில் உரோம் நகரம் சிறிய

கிராமமாக வளர்ச்சியடைந்தது. சில நூற்றாண்டுகளின் பின்பு உலகத் தலைநகரமாகியது. அகஸ்ரஸ் உரோம் நகரை நிறுவினான் என்பதைச் சந்தேகம் இல்லாமல், பெருமையுடன் கூறலாம். செங்கற்களால் கட்டப்பட்ட நகரம், பளிங்கு நகரமாக மாறியது. உரோம சாம்ராச்சிய அரசன் அகஸ்ரஸ் இராஜதந்திர மற்றும் வர்த்தக உறவுகளைச் சீனா, இந்தியா போன்ற நாடுகளுடன் வைத்திருந்தான். அவன் கலை, இலக்கியங்களை ஊக்கப்படுத்தினான். லிவி (Livy) என்ற உரோம வரலாற்று ஆசிரியர் உரோமின் வரலாற்றை எழுதினார் (Annals). வேர்ஜில் என்றவர் புராணக் கவிதையை எழுதினார் (Aeneid). உரோமில் பிரபல்ய எழுத்தாளர்களான ஒவிட், ஹொராஸ், பிளினி, யுவெனெல், ராசிற்றஸ் என்போர் இலத்தீன் இலக்கியங்களை மேம்படுத்தியவர்களாவர். "ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலவிய உரோம சமாதானத்தை (Pax Romans) ஏற்படுத்திய பெருமை அகஸ்ரஸையே சாரும்.

### (a) இயேசுவின் பிறப்பு (கி.மு. 4):

அவரின் புகழ் பூத்த ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வு ஜெரூசலேமிற்கு அருகாமையில் அமைந்த பெத்தல கேம் எனும் இடத்தில் இயேசுநாதரின் பிறப்பாகும் (4 B.C.). உரோம் தனது மாகாண மக்களுக்குப் பிரஜா உரிமையைக் கொடுத்தது.

### (b) அகஸ்ரசின் வாரிசுகள்:

அகஸ்ரசின் வாரிசாக அவனது மகன் ரைபிரியஸ் உரோமபுரி அரசனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான். குடியரசு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுத் தனிமனித சாம்ராச்சியம் உருவாக்கப்பட்டது. அது ஒரு நீண்ட வெற்றி தோல்விகளைக் கொண்ட வரலாறு. உரோம சாம்ராச்சியம், நல்ல மற்றும் தீய அரசர்களால் மாறி மாறி ஆட்சி செய்யப்பட்டது. தீய அரசர்களாகக் கலிகுழுவும் நீரோவும் இருந்தனர். நீரோ தனது

சொந்த மனைவி, தாய் உட்பட பல மக்களைக் கொன்றான். உரோமிற்குத் தீ வைத்ததாகக் கிறிஸ்தவர்களைக் குற்றம் சாட்டினான். நல்ல ஆட்சியாளர்களின் நீண்ட வரிசையில் ஸ்ரோயிக் தத்துவஞானியான மார்க்கஸ் அருளியஸ் காணப்பட்டார். இவர் “தியானம்” என்ற நூலை எழுதினார் (Meditations). அவரின் இறப்புடன் அன்ரோனியர்களின் யுகம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. மார்க்கஸ் அருளியசின் இறப்பிற்குப் பின் உரோம சாம்ராச்சியத்தின் வீழ்ச்சி ஆரம்பமானது. பின்பு சிறிது காலத்திற்கு டயோ கிளிசியன் மற்றும் கொன்ஸ்ரன்ரைனினால் உரோமின் வீழ்ச்சி நிறுத்தப்பட்டது. டயோகிளிசியன் சாம்ராச்சியத்தை இரண்டாகப் பிரித்தான். கிழக்கில் அதன் தலைநகர் பைசாந்தியமாகவும் மேற்கில் அதன் தலைநகர் உரோமாகவும் இருந்தது. கொன்ஸ்ரைன்ரைன் தனது எதிரியைத் (டயோகிளிசியன்) தோற்கடித்து, இரண்டிற்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தினான். சாம்ராச்சியத்தின் தலைநகரை உரோமில் இருந்து பைசாந்தியத்திற்கு மாற்றி அவருக்குப் பின்பு கொன்ஸ்தாந்திநோபிள் எனப் பெயரிடப்பட்டது. அவனின் இறப்பிற்குப் பின் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொரு அரசனின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது.

## 2.11. உரோமின் வீழ்ச்சி

கி.பி. 476இல் உரோம சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:

1. ஜேர்மானியப் பழங்குடிகள் மற்றும் ஹன்ஸ் போன்ற நாடோடிக் கும்பல்களின் தொடர்ந்த படையெடுப்பு

2. பலவீனமான, தகுதியற்ற அரசர்களின் ஆட்சி

3. பணக்காரர் மற்றும் ஏழைகளுக்கிடையில் பாரிய இடைவெளி காணப்பட்டது. ஏழை மக்கள் பல வரிச்சுமைகளுக்கு ஆளானார்கள்.

4. அடிமை முறை காணப்பட்டது.

5. உரோம இராணுவத்தில் தலைமைத்துவமும் ஒழுங்கும் காணப்படாமை.

6. கிறிஸ்தவ மதத்தின் தொடர்ந்த செல்வாக்கு

## சுருக்கம்

- புவியியற் காரணிகள் உரோம சாம்ராச்சிய வரலாற்று வளர்ச்சிக்குத் துணை போயின என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

- இந்தோ – ஐரோப்பிய நாடோடிப் பழங்குடிகள் (இலத்தீனர்கள்) இத்தாலியின் தெற்குப் புறத்தில் உள்ள ரைபர் ஆற்றங்கரையில் குடியேறி உரோமப் பேரரசை உருவாக்கியதை விளங்கிக் கொள்ள முடியும்.

- உரோமப் பேரரசின் ஆட்சி முறையையும் அதன் வளர்ச்சியையும் அறிய முடிகின்றது.

- அதன் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறியக் கூடியதாக இருக்கும்.

## திறவுச் சொற்கள்

உரோம், இலத்தீனர்கள், பிளிமியன்கள், குடியரசு, சர்வாதிகாரம், பொற்காலம், ஜுலியசீசர்

## உசாத்துணை நூல்கள்

பேடினன்ட், ஷெபீல், (1966), **ஐரோப்பிய வரலாறு**, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

Norman, F., (1968), **The Medieval World 300 – 1300 A.D.**, Oxford University Press, London.

Burns, E.M., Leerner, R.C. & Meacham Standish, (1980), **Western Civilization their History and Culture**, Norton and Company, New York.

## பயிற்சி வினாக்கள்

1. அகஸ்ரஸ்சீசரின் ஆட்சிக்காலம் வரை உரோம சாம்ராச்சியத்தின் வளர்ச்சியை ஆராய்க.

2. ஆரம்ப உரோம வரலாற்றில் புவியியற் காரணிகள் எவ்வாறு தாக்கம் செலுத்தின.

3. பின்வருவனவற்றிற்கு வரலாற்றுக் குறிப்பெழுதுக.

   (10 வசனங்களிற்கு மேற்படாமல்)

   (1) பிளிமியன்களும் பற்றீசியன்களும் மோதுதல்

   (2) உரோமில் கிறிஸ்தவ மதம்

   (3) பியூனிக் போர்கள்

# அத்தியாயம் – 3

# பைசாந்தியப் பேரரசு

## பொருளடக்கம்

3.1. அறிமுகம்
3.2. டயோகிளிசியனும் கொன்ஸ்டன்ரைனும்
3.3. கொன்ஸ்ரன்ரைனின் மதிப்பீடு
3.4. ஜஸ்ரீனியனின் யுகம்
3.5. ஜஸ்ரீனியனின் சட்டம்
3.6. பைசாந்திய சாம்ராச்சியத்தின் வீழ்ச்சி
3.7. பைசாந்திய நாகரிகத்தின் பங்களிப்பு
- (a) மதச் சார்பான அரசு
- (b) கலை மற்றும் கட்டடக்கலை
- (c) சட்டமும் இலக்கியமும்
- (d) கல்வி நிலையங்கள்
- (e) கிறிஸ்தவ மதத்தின் பரம்பல்
- (f) வியாபாரமும் வர்த்தகமும்

3.8. மதிப்பீடு

## அத்தியாயச் சுருக்கம்

உரோமானியப் பேரரசர் டயோக்கிளிசியன் 290 A.D.யில் எடுத்த முடிவினால் பைசாந்தியப் பேரரசு உருவாகியது. இப் பேரரசு கிழக்குப் பகுதி என்றும் மேற்குப் பகுதி என்றும் பிரிந்திருந்தன. டயோக்கிளிசியஸ் கிழக்குப் பகுதியை ஆட்சி செய்யும்பொழுது, அவனுடைய சக பேரரசன் மேற்குப் பகுதியை ஆட்சி செய்தான். இரு பகுதிக்கும் சரியான அரசுரிமையைக் கொண்டு வர நினைத்தபொழுது உள்நாட்டுப் போர் உருவாகியது. கொன்ஸ்ரன்ரைன் உரோமப்

பேரரசர் ஆகின்றான். உரோமில் இருந்து கிழக்குப் பகுதிக்குத் தலைநகராகப் பழைய கிரேக்க நகரமான பைசாந்தியத்தைத் தலைநகர் ஆக்குகின்றான். கொன்ஸ்ரன்ரைனிற்குப் பின்பு ஜஸ்ரீனியனின் ஆட்சி காணப்பட்டது. இவ் ஆட்சியில் ஜஸ்ரீனியன் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. மதச் சார்பான அரசு காணப்பட்டது. தேவாலயங்கள் வளர்ச்சி அடைந்தன. கலை, கட்டடக் கலைச் சிறப்புற்றுக் காணப்பட்டது. சட்டம், இலக்கியங்கள் பல்கலைக்கழகங்கள் வளர்ச்சியடைந்தன. கி.பி. 1453இல் இது துருக்கியர் வசமாகியது. இது மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.

## அத்தியாயத்தின் நோக்கம்

பைசாந்தியப் பேரரசு எவ்வாறு உரோம சாம்ராச்சியத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிழக்கு உரோமப் பேரரசு என அழைக்கப்பட்டது. பின்பு கொன்ஸ்ரன்ரைனின் ஆட்சியில் சிறப்புற்று விளங்கியதையும் அதன் பின்பு ஜஸ்ரீனியன் ஆட்சியில் சட்டங்கள் உருவாக்கப்பட்டன என்பதையும் கல்வி வளர்ச்சி, கலை, கட்டடக்கலையின் வளர்ச்சி, சட்டத்தொகுப்பு, வர்த்தகம் என்பனவற்றை விளக்குவதே இவ் அத்தியாயத்தின் பிரதான நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

- இவ் அத்தியாயத்தைக் கற்பதன் மூலம் உரோமப் பேரரசு இரண்டாகப் பிரிந்து பின்பு கிழக்குப் பகுதி பைசாந்தியப் பேரரசு என உருவாகி கிரேக்கப் பண்புகளைக் கொண்ட கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய அரசாக இருந்ததை மாணவர்கள் அறிந்து கொள்வர்.

- அத்துடன் பைசாந்திய நாகரிகம் உலகிற்கு அளித்தது பற்றி கலை, கட்டடக்கலை, சட்டம், இலக்கியம், உயர்கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, கிறிஸ்தவ சமயத்தின் பரம்பல், வர்த்தக வளர்ச்சி என்பவற்றை மாணவர்கள் அறியக் கூடியதாக இருக்கும்.

## 3.1. அறிமுகம்

டயோசிளிசியன் என்ற உரோமப் பேரரசனின் முடிவின்படி கி.பி. 293இல் பாரிய பேரரசை இராணுவ மற்றும் அரசியல் காரணங்களுக்காக இரண்டாகப் பிரித்ததில் பைசாந்தியப் பேரரசு உருவானது. அவன் கிழக்குப் பகுதியை ஆட்சி செய்து கொண்டிருக்கும்போது அவனுடன் சேர்ந்த இணைப் பேரரசனை மேற்குப் பகுதிக்குப் பொறுப்பாக அனுமதித்தான்.

## 3.2. டயோகிளிசியனும் கொன்ஸ்ரன்ரைனும்

உரோமப் பேரரசு எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்கு இதுதான் சரியான தீர்வு என நினைத்தான். அடுத்த பேரரசுப் பதவியை யார் ஏற்பது என்பதில் தோல்வியேற்பட்டுச் சாம்ராச்சியதில் உள்நாட்டுப் போர் உருவாகியது. கொன்ஸ்ரன்ரைன் இதில் வெற்றி பெற்று உரோமப் பேரரசர் ஆகினார். அவர் இறுதியாக இரு பகுதிகளையும் ஒற்றுமைப்படுத்தி வெற்றி கண்டார். எனினும், அவர் உரோமாபுரியில் இருந்த தலைநகரைக் கிழக்கிற்கு மாற்றியமைப்பது என்று முடிவு செய்தார். இதற்காக வேண்டி பழைய கிரேக்க நகரின் ஒரு பகுதியான பைசாந்தியத்தைத் (Byzantium) தெரிவு செய்தார் (பொஸ்பரஸ் பகுதி). இப்புதிய நகரம் அவர்களுக்குப் பின் அரசனுடைய பெயரில் கொன்ஸ்தாந்திநோபிள் என அழைக்கப்பட்டது. அது ஒரு கிறிஸ்தவ நகரமாகவும் சிறந்த துறைமுக நகராகவும் விளங்கியது. காலப்போக்கில் கொன்ஸ்தாந்தி நோபிள் "நகரங்களின் இளவரசி" (Queen of Cities) என அழைக்கப்பட்டது. அதன் சனத்தொகை ஒரு மில்லியனாக இருந்தது. அத்துடன் உலகத்திலேயே மிகவும் செழிப்பாக விருத்தியடைந்த வர்த்தகத்தைக் கொண்டிருந்தது. கொன்ஸ்ரன்ரைன் பேரரசனாவதற்கு முன்பு, கிறிஸ்தவ சிலுவையுடன் மில்வியன் பாலத்திற்குக் கீழ் நடந்த போரில்

வெற்றி பெற்றான். ஆகையால், அவன் கிறிஸ்தவ மதத்தில் அதிக நம்பிக்கை வைத்தான். அவன் கி.பி. 312இல் கிறிஸ்தவனாக மாறினான். கி.பி. 325இல் கிறிஸ்தவ மதத்தை அரச மதமாகப் பிரகடனப்படுத்தியதுடன் கன்னி மேரிக்கு கொன்ஸ்தாந்திநோபிளைச் சமர்ப்பணம் செய்தான்.

இப் பேரரசன் முழு அதிகாரத்தையும் தன்னுள்ளே வைத்திருந்தான். கொன்ஸ்தாந்தி நோபிளின் நகரத் தந்தையை நியமிப்பது மற்றும் மதப் போதகர்கள் போன்ற தேவாலய அலுவலர்களை நியமிப்பது என்பன. இவை எல்லாச் சாம்ராச்சியத்தின் நிர்வாகத்துடன் அதிகளவு தொடர்புடையது. பேரரசன் கடவுளின் பிரதிநிதி என மக்கள் நம்ப வைக்கப்பட்டார்கள். சாம்ராச்சிய மக்கள் எல்லோரும் கிரேக்கத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, கிழக்கு உரோமப் பேரரசு அல்லது பைசாந்தியப் பேரரசு கிரேக்கப் பண்பாட்டுத் தன்மையைக் கொண்டது. அரச மொழியாகக் கிரேக்கமும் கிரேக்க கிறிஸ்தவப் பாரம்பரிய மதம் அரச மதமாகவும் இருந்தது.

## 3.3. கொன்ஸ்ரன்ரைனின் மதிப்பீடு

மகா கொன்ஸ்ரன்ரைன் திறமையான படைத்தளபதியாகவும் சிறந்த நிர்வாகியாகவும் காணப்பட்டார். அவன் மிகவும் கடுமையான வரிக் கோட்பாடுகளை விதித்தான். அத்துடன் ஒரு நிலையான அரசையும் சமூகத்தையும் உருவாக்குவதற்கு முயற்சி செய்தான். கிறிஸ்தவ தேவாலயங்களை ஒற்றுமைப் படுத்தினான். அவனது ஆட்சியில் வெவ்வேறு பிரதேசங்களில் அரசியல் மற்றும் சமயம் சார்ந்த பிணக்குகள் உருவாகிய போதும் அவன் வெகுவிரைவில் அவற்றைத் தீர்த்து வைத்தான். அவரின் இறப்பிற்குப் பின்பு A.D. 337இல் அவனது சாம்ராச்சியம் அவனது இரு மகன்களுக்கும் இரண்டாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. கி.பி. 353இலும் 363இலும் மீண்டும்

இரு பகுதிகளும் இணைந்துகொண்டன. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் உரோமபுரியின் மேற்குப் பகுதிகள் அடிக்கடி பழங்குடிகளினால் தாக்குதலுக்குள்ளானது. இத்தாலியில் இருக்கும் ஜேர்மன் பழங்குடிகள் ஒடேசியரைத் தமது அரசனாகத் தெரிவு செய்யும்போது கி.பி. 476இல் இது முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. ஒடேசர் மேற்கு உரோம சாம்ராச்சியத்தின் இறுதிப் பேரரசனான றொமூலஸ் அகஸ்ரலஸ் ஐப் பதவி நீக்கம் செய்தான்.

## 3.4. ஜஸ்ரீனியனின் யுகம்

மேற்கு உரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்தவுடன் கிழக்கு உரோமானியப் பேரரசு அல்லது பைசாந்தியப் பேரரசு அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு நிலைத்திருந்தது. upto 1453 அரசருடைய நீண்ட ஆட்சிக் காலத்தில் பல எதிரிகளான பாரசீகர்கள் கோதஸ் ஆவாஸ்கள் அரேபியர்கள் மற்றும் துருக்கியர்கள் காணப்பட்டனர். மகா ஜஸ்ரீனியனின் ஆடசிக் காலத்தில் (482 – 565 A.D.) இச் சாம்சராச்சியம் புகழின் உச்சியில் இருந்தது. அவன் ஒரு சிறந்த படைத்தளபதி, திறமையான நிர்வாகி அத்துடன் புகழ் பெற்ற ஆட்சியாளர் (Builder) அவர் தனது படைத்தளபதியான பெலிசாரியசையும் மற்றைய தளபதிகளையும் மேற்கில் இழந்த மற்றைய உரோமப் பிரதேசங்களை மீளக் கைப்பற்றுவதற்காக அனுப்பினான். படைத்தளபதிகள் பல தடவைகள் போரிட்ட பின் மீண்டும் இத்தாலி, வட ஆபிரிக்கா மற்றும் தென் ஸ்பெயின் பிரதேசங்களைக் கைப்பற்றினர். ஒஸ்ரகோஸ்துடனான நீண்ட போரிற்குப் பின் இத்தாலியைக் கைப்பற்றக் கூடியதாக இருந்தது. இப் போரின் மூலம் அதிகளவு பணம் இழக்கப்பட்டது. (கஜானாவில் பணம் இல்லை) துரதிஸ்டவசமாக, ஜஸ்ரீனியனால், கிழக்கு எல்லைகளில் படையெடுத்த பாரசீகர்களை வெற்றி கொள்ள முடியவில்லை. பாரசீக அரசனான முதலாம் கொஸ்றுவிற்கு

(Khosru) வற்புறுத்தலினால் கப்பம் கட்டினான். மேலும் முதலாம் கொஸ்று சிரியா, பாலஸ்தீன் ஆகிய நாடுகளை வெற்றி கொண்டான்.

ஜஸ்ரீனியன் பாப்பரசருடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தி, கிறிஸ்தவ மதத்திற்கு எதிரானவர்களை அடக்கினான். அவன் பல தேவாலயங்களைக் கட்டி, மதக் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினான். அவன் கட்டிய தேவாலயங்களுள் மிகவும் பிரபல்யமானது கொன்ஸ்தாந்தி நோபிளில் உள்ள புனித சோபியா தேவாலயமாகும். இது கிழக்குச் சாம்ராச்சியத்தில் மிகவும் புகழ் பெற்றது. தீயினால் அழிந்த நகரத்தின் ஒரு பகுதியை மீண்டும் கட்டி எழுப்பினான். கொன்ஸ்தாந்திநோபிள் விரிவாக்கம் செய்யப்பட்டு அழகு படுத்தப்பட்டது. இவன் வரி முறைகளை மறுசீரமைத்தான்.

## 3.5. ஜஸ்ரீனியன் சட்டம்

அவனின் அழியாப் புகழுக்குக் காரணம் அவனின் சட்டங்களாகும். சகல அரசக் கட்டளைகளையும் சேகரித்து, பொதுச்சட்டங்களையும் நான்காகப் பிரித்து, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துச் சிவில் சட்டம் (Corpus Juris Civilis) ஒன்றை உருவாக்குவதற்கு ஆணைக்குழுவை அமைத்தான். இது பிற்காலத்தில் ‘‘ஜஸ்ரீனியன் சட்டம்’’ என அழைக்கப்பட்டது. அந்த நான்கு பிரிவுகளாவன:

1. சட்டம் (Code)
2. செய்திச் சுருக்கம் (Digest)
3. நிறுவனங்கள் (Institutions)
4. மேலதிகத் தகவல்கள் (Supplement)

ஜஸ்ரீனியன் சட்டமானது, பல நாகரிகமடைந்த ஐரோப்பிய நாடுகளின் சட்ட முறைமைக்கு முன்மாதிரியாக (Model) அமைந்தது. நெப்போலியனின் சட்டங்கள் (Code and Napoleon) பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் மறுசீரமைக்கப்பட்டன.

## 3.6. பைசாந்திய சாம்ராச்சியத்தின் வீழ்ச்சி

ஜஸ்ரீனியன் இறந்த பின்பு இப் பேரரசு பண்புகளிலும் உணர்வுகளிலும் கிரேக்கர் தன்மை வாய்ந்ததாகக் காணப்பட்டது. இலத்தினிற்குப் பதிலாகக் கிரேக்க மொழி அரச மொழியாகியது. சாம்ராச்சியம் ஒவ்வொன்றாக வெளிநாட்ட வர்களினால் கைப்பற்றப்பட்டுப் பரப்பளவில் சிறியதாகியது. லொம்பாட்ஸ் (Lombards) இத்தாலியைக் கைப்பற்றினார்கள். சிலாவ்ஸ்கள் (Slavs) பல்கன் மாகாணங்களைக் கைப்பாற்றினர். அரேபியர்கள் வட ஆபிரிக்காவையும் ஸ்பெயினையும் கைப்பற்றினர். பாரசீகர்கள் ஆசியமைனர் பிரதேசத்தைக் கைப்பற்றி, கொன்ஸ்தாந்தி நோபிளிற்கு அச்சுறுத்தலாக இருந்தனர். ஜஸ்ரீனியனின் வெற்றியாளர்கள் கைது செய்ய முயற்சி செய்தும் முடியவில்லை. பைசாந்திய இராச்சியம், மெசடோனியர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வரும்போது பழைய புகழ் மீண்டும் குறுகிய காலத்திற்கு இருந்தது. இஸ்லாமியர்கள் தோற்கடிக்கப்பட்டு, இராச்சியத்தின் எல்லைகள் 9, 10, 11ஆம் நூற்றாண்டுகளில் விரிவடைந்தன.

இக்காலத்தில் கிறிஸ்தவ சமயம், உரோமன் கத்தோலிக்க (Roman Catholic) கிறிஸ்தவ சமயமாகவும் கிரேக்கப் பாரம்பரிய (Greek Orthodic) கிறிஸ்தவ சமயமாகவும் இரண்டாகப் பிரிந்தது. இறுதியாக உதுமானியத் துருக்கியர்கள் கொன்ஸ்தாந்திநோபிளை 1453A.D.யில் கைப்பற்றியபோது பைசாந்தியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

## 3.7. பைசாந்திய நாகரிகத்தின் பங்களிப்பு

### (a) மதச் சார்பான அரசு (Theocratic State):

பைசாந்திய அரசர்கள், ஐரோப்பாவின் மேற்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் சகல கிறிஸ்தவ சமயத்தினரையும் ஒன்றிணைத்து, ஒற்றுமையை ஏற்படுத்தி ஒரு பேரரசை உருவாக்க நினைத்தனர். அவர்கள் தம்மைக் கடவுளின் பிரதிநிதிகள் என்று கூறிச் சில நிர்வாகத் திணைக்களங்களுக்குத் தேவாலய ஊழியர்களை வேலைக்கு அமர்த்தினர்.

### (b) கலை மற்றும் கட்டடக்கலை:

கலை மற்றும் கட்டடக்கலைத் துறையில் பைசாந்திய நாகரிகம் விசேட பங்களிப்பைச் செய்தது. புனித சோபியாத் தேவாலயம் அதன் பெரிய மத்திய கூம்பு எல்லோரையும் கவர்ந்த ஒரு நினைவுச் சின்னம் (31 மீற்றர் விட்டம் 100 அடி). தேவாலயத்தின் உட்சுவர்கள் மிகவும் கவர்ச்சியான வர்ணப் பூச்சுகளைக் கொண்டிருந்தன. அல்லது பல நிற கிளாஸ் துண்டுகளை ஒன்றிணைத்த வடிவம் கொண்டன. உரோமில் உள்ள புனித பீற்ரேஸ் தேவாலயம் மாத்திரம் இதனை விடச் சிறப்புடையது. பைசாந்தியர்கள் மிகவும் அழகான ஆபரணங்கள் செய்வதில் புகழ் பெற்றவர்கள். அவர்களின் கையெழுத்துப் பிரதிகளும் வர்ணப் பூச்சைக் கொண்டிருந்தன.

### (c) சட்டமும் இலக்கியமும்:

பைசாந்தியப் பேரரசின் சிறந்த சாதனையாக விளங்கியது ஜஸ்ரீனியனின் சட்டங்களாகும். ஜஸ்ரீனியப் பேரரசன் சட்ட வல்லுனர்களை நியமித்து எல்லா உரோமச் சட்டங்களையும் இணைத்துத் தொகுத்தார். இச் சட்டம் பிரதானமாக அக் காலத்தில் நடைமுறையில் இருந்த அரச கட்டளைகளை (ஆணை) உள்ளடக்கியிருந்தது. "சட்டத்தைத் திறனாய்வு

செய்தல்'' (A Critical Analysis of Law) என்ற நிறுவனம் காணப்பட்டது. செய்திச் சுருக்கம் (Digest) என்ற அமைப்பில், நீதிபதிகள் மற்றும் சட்ட வல்லுனர்களின் (Juris's) கருத்துக்கள் தொகுத்துக் காணப்பட்டன. மேலதிகத் தகவல்களில் (Supplements / Novels) சட்டத்தின் மாற்றங்கள் அல்லது சேர்க்கைகள் காணப்பட்டன. ஒழுங்கான முறையில் ஜஸ்ரீனியன் சட்டம் எல்லாச் சட்டங்களையும் இறுதி வரைக்கும் ஒருங்கமைத்தது. இது சட்டத்தரணிகளுக்குச் சட்டப் பிரச்சினைகளை இலகுவாக்கி, விரைவான முடிவிற்கு வர உதவியது. இச் சட்டத்தின் சாராம்சத்தில் தான் அரசும் நாட்டின் சட்டங்களும் செயற்பட்டன. சந்தேகத்திற்கு இடமில்லாமல் இச்சட்டம் ஐரோப்பிய நாடுகளின் பல சட்ட முறைகளுக்கு முன்னோடியாக அமைந்தது.

உரோமப் பேரரசைப் பழங்குடிகள் (Barbarians) அழித்தபோது ''செம்மொழிக் கற்கைகளுக்கான பொக்கிசமாக பைசாந்தியம் திகழ்ந்தது''. அதன் எழுத்தாளர்கள் ஒன்றுகூடி கடுமையாக உழைத்து ''பழைய அறிவின் கலைக்களஞ்சியத்தை'' உருவாக்கினர். அத்துடன் கிரேக்க தத்துவஞானிகளான அரிஸ்டோட்டல், பிளாட்டோவின் நூல்களை ஆராய்ந்து விமர்சனங்கள் எழுதினர். வரலாற்றாசிரியர்கள் பைசாந்தியப் பேரரசின் வரலாற்றை எழுதி அவர்களின் வாழ்க்கை, சாதனைகள் என்பவற்றை எழுதிப் பொக்கிசமாக்கினர்.

### (d) கல்வி நிலையங்கள்:

பைசாந்தியப் பேரரசு, கொன்ஸ்தாந்தி நோபிள், அலெக்சாந்திரியா, ஏதென்ஸ் அன்ரியோக் போன்ற புகழ் பெற்ற பாரிய கல்வி நிலையங்களை உருவாக்கியது. பொது, தனியார் நூலகங்கள் பல கல்வியாளர்களைக் கவர்ந்தது. அவர்கள், கணிதம், மருத்துவம், அறுவைச் சிகிச்சை, இராசாயனம், கேத்திர கணிதம், வானசாஸ்திரம் போன்ற

துறைகளில் உயர்கல்வி பெற்று ஆய்வு செய்வதற்காகச் சென்றனர். அக்காலத்தில் மிகவும் புகழ் பெற்றவர் சலோனிக்காவின் லியோ (Leo) ஆவார். சிறந்த கணிதவியலாளர் வானசாஸ்திரத்திலும் எண்கணிதத்திலும் உருவாகிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கொடுத்தார். உதுமானியத் துருக்கியர்கள் 1453 A.D.யில் கொன்ஸ்தாந்தி நோபிளைக் கைப்பற்றியபோது கிரேக்க அறிஞர்கள் நகரத்தை விட்டு இத்தாலிக்கும் வேறு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றனர். செம்மொழி இலக்கியங்களை மீளப் பெறுதலை நோக்காக் கொண்டு பிற்கால ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குத் தூண்டுதலாக அமைந்தது.

### (e) கிறிஸ்தவ மதத்தின் பரம்பல்:

பைசாந்தியப் பேரரசர்கள், கிறிஸ்தவ மதத்தைச் சிலாவ்ஸ் என்ற ரஸ்சியர்கள் பல்கேரியர்கள் மற்றும் சேர்பியர்கள் என்போரிடையே பரப்புவதில் பாரிய சேவை செய்தார்கள். எல்லோரும் கிரேக்கப் பாரம்பரிய தேவாலயக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டனர். கிரேக்க மாதிரியில் எழுத்துக்களை விருத்தி செய்தனர். எழாம் நூற்றாண்டில் இருந்து பதினோராம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை உரோமாபுரி போப்பாண்டவரிற்கும் (ரோமன் கத்தோலிக்க தேவாலயம்) பைசாந்தியப் பேரரசிற்கும் இடையில் விக்கிரக வழிபாடுகள் பற்றி (Iconoclastic) முரண்பாடுகள் தோன்றின. ஆனால், பைசாந்தியப் பேரரசரும் கொன்ஸ்தாந்தி நோபிள் தலைவரும் (Patriarch) கொன்ஸ்தாந்தி நோபிளின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளவில்லை. கிரேக்கப் பாரம்பரியத் தேவாலயம் தனித்தியங்க ஆரம்பித்தது. கிரேக்கத் தேவாலயம் இயேசுநாதரின் உடல் சார்ந்த விடயங்களை விட ஆன்மா அல்லது உளம் சார்ந்த (Metaphysical) விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. அத்துடன் அவர்களாகவே (Liturgical) நடைமுறைப்படுத்தினர்.

கிறிஸ்மஸ் தினத்தை விட (நத்தார்) ஈஸ்ரர் தினமே (உயிர்த்தெழுந்த ஞாயிறு) புனித நாளாகக் கருதப்படுகின்றது.

**(f) வியாபாரமும் வர்த்தகமும்:**

கொன்ஸ்தாந்திநோபிள் கிழக்கு, மேற்கு நாடுகளின் மத்தியில் அமைந்திருப்பதால் வியாபார வர்த்தகங்களுக்குப் பாரிய மையமாக அமைந்தது. கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் அமைந்த வர்த்தகப் பாதைகள் எல்லாம் கொன்ஸ்தாந்தி நோபிளைத் தொட்டே சென்றன. மேற்கின் உற்பத்திகளுக்கும் கிழக்கின் உற்பத்திகளுக்கும் சேவை புரிந்தன. அவர்களின் வர்த்தகக் கப்பல்கள் ஐரோப்பாவின் எல்லாத் துறைமுகங்களையும் அடைந்தன. கொன்ஸ்தாந்திநோபிளை 1453AD.இல் இரண்டாம் முகம்மதின் தலைமையின் கீழ் துருக்கியர்கள் கைப்பற்றியவுடன் கிழக்கு, மேற்கிற்குமிடையிலான வர்த்தகம் தடைப்பட்டது. நகரம் வீழ்ச்சியடைந்தவுடன் பைசாந்தியப் பேரரசு முடிவிற்கு வந்தது. கீழைத்தேய நாடுகளுக்கான நிலப்பாதை துருக்கியர்களினால் தடைப்பட்ட படியால், ஆசியப் பொருட்களைப் பெறுவதற்காக ஐரோப்பிய நாடுகள் புதிய கடற்பாதைகளைத் தேட வேண்டியிருந்தது.

## 3.8. மதிப்பீடு

மேற்கூறியதுபோல், பைசாந்தியப் பேரரசின் ஆதிக்கமும் செல்வாக்கும் பாரிய அளவில் இருந்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் காட்டு மிராண்டிகளின் படையெடுப்புகளுக்கு உள்ளாகியிருந்த காலத்தில் பைசாந்தியப் பேரரசு, கிரேக்க – உரோம நாகரிகத்தைப் பேணிப் பாதுகாத்து வந்தது. நாகரிகமடையாத சிலர் மக்களிடையே கிறிஸ்தவ மதத்தைப் பரப்பினர். அவர்களின் சமயக் குழுக்களில் இரு சகோதரர்களான சிறில் மற்றும் மெதோடியஸ் என்போர் கிறிஸ்தவ மதத்தைச் சிலாப் மக்களிடையே பிரபல்யமாக்கினர்.

கலை மற்றும் கட்டடக்கலையில் பைசாந்தியரின் தாக்கம் மறுமலர்ச்சிக் காலப் பகுதியில் ஐரோப்பிய நாடுகள் முழுக்க செல்வாக்குச் செலுத்தியமை இன்றும் பிரசித்தமாக உள்ளது. துருக்கியரிடம் கொன்ஸ்தாந்தி நோபிள் வீழ்ச்சியடைந்தவுடன் பைசாந்திய அறிஞர்கள் இத்தாலிக்கும் மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கும் புராதன உரோம, கிரேக்க செம்மொழி இலக்கியங்களைத் தம்முடன் எடுத்துச் சென்றனர். ஆகையால் மறுமலர்ச்சி ஏற்பட அவர்கள் காரணமாயினர்.

## சுருக்கம்

- இடைக்கால ஐரோப்பாவில் ஒரு சிறந்த பேரரசாக இது உருவாகிய விதம் பற்றி அறியக்கூடியதாக உள்ளது.

- பைசாந்தியப் பேரரசர்கள் எவ்வாறு இப் பேரரசை உருவாக்கினர் என்பதையும் உள்நாட்டுப் போரின் மூலம் கொன்ஸ்டன்ரைன் பேரரசனாக வரலாற்றில் உருவானதைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

- ஜஸ்ரீனியனின் சட்டங்கள், உயர்கல்வி நிலையங்கள், கலை, கட்டடக்கலைகள் வளர்ச்சி பெற்றன.

- ஐரோப்பா எங்கும் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது.

## திறவுச் சொற்கள்

பைசாந்தியம், கொன்ஸ்டன்ரைன், கிறிஸ்தவ மதம், போப்பாண்டவர், மகா ஜஸ்ரீனியன், மறுமலர்ச்சி

## உசாத்துணை நூல்கள்

Rao, B.V., (2014), **World History from Early Times to A.D. 2011**, Sterling Publications (P) Ltd., New Delhi.

பேர்டினன்ட் ஷெபீல், (1966), **ஐரோப்பிய வரலாறு**, இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

## பயிற்சி வினாக்கள்

1. பைசாந்தியப் பேரரசின் தோற்றம் பற்றி விளக்குக.
2. ஜஸ்ரீனியனின் சட்டம் பற்றி ஆராய்க.
3. கொன்ஸ்தாந்திநோபிளின் முக்கியத்துவத்தை விளக்குக.
4. பைசாந்திய வர்த்தகம் பற்றிக் குறிப்பெழுதுக.

# அத்தியாயம் – 4

# சார்ளமேனும் கரோலிஞ்சியப் பேரரசும்

## பொருளடக்கம்

4.1. அறிமுகம்

4.2. கரோலிஞ்சியப் பேரரசு (குலம்)

(a) சார்ளமேனும் அவனின் படையெடுப்புகளும்

(b) நிர்வாகம்

(c) கற்றல்

(d) சட்டங்கள்

## அத்தியாயச் சுருக்கம்

ஆரம்ப இடைக்கால ஐரோப்பா பிராங்குகளினால் ஆட்சி செய்யப்பட்டது. கரோலிஞ்சியப் பேரரசின் சனத்தொகை 10 – 20 மில்லியன் மக்களைக் கொண்டிருந்தது. பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் நாடுகளை இது உள்ளடக்கியிருந்தது. கரோலிஞ்சியன் போப்பாண்டவர் மூன்றாம் லியோவினால் கி.பி. 800இல் முடி சூடப்பட்டதுடன் கரோலிஞ்சிய யுகம் ஆரம்பித்து, சார்ள்ஸ் த பாற்றின் இறப்புடன் இது முடிவடைகின்றது. சார்ளமேன் மேற்கு ஐரோப்பாவில் பல நாடுகளைக் கைப்பற்றி, தேவாலய நிர்வாகங்களுடன் தொடர்பு வைத்திருந்தான். கல்விக்கு முன்னுரிமை கொடுத்தான். சட்ட நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தான்.

## அத்தியாயத்தின் நோக்கம்

இவ் அத்தியாயத்தில் ஆரம்ப, இடைக்கால, மத்திய ஐரோப்பாவின் பிராங்கிஸ் பிரபுக்கள் குடும்பத்தினரான கரோலிஞ்சியக்

குலத்தினுடைய பேரரசன் சார்ளமைனின் ஆட்சியைப் பற்றியும் அவன் போப்பாண்டவர்களுடன் வைத்திருந்த உறவுகளைப் பற்றியும் அவனின் நிர்வாகத்தைப் பற்றியும் அறிதலே இவ் அத்தியாயத்தின் நோக்கம்.

## கற்றல் பெறுபேறுகள்

- ஆரம்ப, இடைக்கால ஐரோப்பாவில் கரோலிஞ்சியப் பேரரசின் தோற்றம் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வர்.

- சார்ளமேன் எவ்வாறு நாடுகளைக் கைப்பற்றி எல்லைகளை விரிவாக்கினான் என அறிய முடியும்.

- சார்ளமேன் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்ததையும் சட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தும் முறைகளைப் பற்றியும் அறிய முடியும்.

## 4.1. அறிமுகம்

ஆரம்ப இடைக்கால, மத்திய ஐரோப்பாவின் பிராங்கிஸ் பிரபுக்கள் குடும்பத்தினராக கரோலிஞ்சியன் கி.பி. 800இல் உரோமப் பேரரசனாக முடிசூட்டப்படுகின்றன. இதன்மூலம் புனித உரோமானியப் பேரரசை நிறுவ முடிந்தது. கரோலிஞ்சியப் பேரரசர்கள் மத்திய ஐரோப்பாவின் அரசியலில் ஆதிக்கம் செலுத்தினார்கள். ஆனால், பல சவால்களைத் தமது ஆட்சியில் எதிர்கொண்டனர். அதிகாரத்தின் உச்சியில் இருந்தாலும் 9ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கரோலிஞ்சியக் குலம் அரச பதவிக்குரிய பிணக்குகள் உள்நாட்டுப் போர், எல்லைப் பிளவுகள் போன்ற பிரச்சினைகளுக்குள்ளானது. இவ் எல்லைப் பிரிவுகள் மூலம் புனித உரோமானியப் பேரரசு நவீன பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளுக்கு அரசியல் அடிப்படையைக்

கொடுத்தது. கரோலிஞ்சிய ஆட்சியில் எல்லைகள் விரிவடைதல், கொள்கைகள், இடைக்காலத் தேவாலயத்துடனான உறவு என்பன நவீன ஐரோப்பாவின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன.

## 4.2. கரோலிஞ்சியப் பேரரசு (குலம்)

சார்ள்ஸ் மாற்றல் (Charles Martel) (Charles the Hammar) என்பவர் இக் குடும்பத்தில் பாரிய புகழ் அடைந்தவர். தனது எல்லா எதிரிகளையும் வெற்றி கொண்டு, தனது சிறந்த தலைமைத்துவத்தின் மூலம் இராச்சியத்தை ஒன்றிணைத்தார். அவர் கி.பி. 732இல் நடைபெற்ற ரூர்ஸ் (Tours) என்ற மிக மோசமான போரில் அரேபியர்களைத் தோற்கடித்ததற்காக அவரை விசேடமாக நினைவு கூருகின்றனர். அத்துடன், அரேபியர்களை ஐரோப்பாவிற்குள் முன்னேற விடாமல் தடுத்து நிறுத்தினார். பாப்பரசரின் நிர்வாகத்துடன் சிறந்த அரசியல் உறவை வைத்துக் கொண்டபடியால் அவரது குலத்திற்கு உதவியாக இருந்தது. சார்ள்ஸ் மாற்றலுடைய மகன் பெப்பின், தன்னை அரசனாகப் பிரகடனப்படுத்தும்போது மரோவிஞ்சியன் குலம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. போப்பாண்டவரும் இதற்கு உடனடியாக அனுமதி வழங்கினார். ஏனெனில், உரோமாபுரிக்கு அதிக அச்சுறுத்தல் விடுத்த லொம்பாட்சுக்களைப் பெப்பினின் உதவியுடன் வெளியேற்ற வேண்டியிருந்தது. பெப்பின் படையெடுப்பாளர்களை வெளியேற்றுவதற்குப் போப்பாண்டவரிற்கு உதவி செய்தான். அதைத் தொடர்ந்து அவர்கள் வெளியேறிய இடத்தைப் பரிசாகைக் கொடுத்தார். அதிலிருந்து இத்தாலியில் தேவாலய அரசிற்கு அடித்தளமிடப்பட்டது.

### (a) சார்ளமேனும் அவனின் படையெடுப்புகளும்:

கரோலிஞ்சியர்களுள் மிகவும் சிறந்தவளாகப் பெப்பினின் மகன் சார்ளமேன் (768 – 814) ஆவான். அவன் கிட்டத்தட்ட ஐம்பது

போர்களுக்குக் குறையாமல் எதிரிகளுடன் போரிட்டுப் பாரிய சாம்ராச்சியத்தைக் கட்டியெழுப்பினான். அவனின் போர்கள் அநேகமாக எல்லாம் அவனுக்குப் பிரச்சினைகளைக் கொடுத்த சக்சன்களுக்கு (Saxons) எதிரானதாகும். அவர்களை வெற்றி கொண்டதன் பின்பு, கிறிஸ்தவ மதத்திற்கு மாறும்படி வற்புறுத்தினான். அதற்கு மறுத்தவர்கள் எல்லாம் இரக்கமற்றுக் கொல்லப்பட்டார்கள். வட இத்தாலியில் லொம்பார்ட்டுகளை வென்று பவேரிய அரசனை வீழ்த்தினான். பவேரியா அவனது இராச்சியத்திற்குள் அமைந்த பிரதேசமாகியது. ஸ்பெயினில் மூர்களுடன் சண்டை போட்டார். அங்கு பிரனீசின் (Pyranees) தெற்குப் பகுதியைப் பெற்றுக் கொண்டார். அவர் போரிட்டது தனது இராச்சியங்களை விரிவாக்குவதற்கும் அங்கு காணப்பட்ட செல்வங்களைச் சூறையாடுவதற்கும் ஆகும். அவரது இறுதி ஆட்சிக் காலத்தில் பிரான்களைத் தவிர்த்து மற்றைய எல்லா வழிகளிலும் பெல்சியம், சுவிஸ்சலாந்து ஹொலண்ட் வட ஸ்பெயின், மேற்கு ஜேர்மனி மற்றும் வட இத்தாலி ஆகிய நாடுகளைக் கைப்பற்றினான். முதலாம் அட்றிப் போப்பாண்டவருடன் நல்ல நட்புறவை வைத்திருந்தான். போப்பாண்டவரின் வேண்டுகோளிற்கிணங்க அவன் உரோமை அச்சுறுத்திய லம்பாட்சுக்களை வெளியேற்றியபடியால், "புனிதக் கடலை"க் (Holly Sea) காப்பாற்றியவர் எனப்பட்டார். கி.பி. 800இல் கிறிஸ்மஸ் தினத்தில் போப்பாண்டவர் மூன்றாம் லியோ, பேரரசன் என்ற பட்டத்தைச் சார்ளமேனுக்குச் சூட்டுகின்றார். ஆகையால், இயற்கையாக வெற்றியடைந்து அழிந்துபோன உரோமப் பேரரசின் பேரரசன் ஆகினான். அதனால், புனித உரோமானியப் பேரரசு அதன் ஆரம்பத்தைக் கொண்டிருந்தது. மதம் சார்ந்த அதிகாரத் தலைவனான போப்பாண்டவருக்கும் உலோகாயுத அதிகாரங்களைக் கொண்ட அரசனுக்கும் இடையில் சிறந்த நட்புறவு நிலைநாட்டப்பட்டது.

### (b) நிர்வாகம்:

நிலமானிய முறையில்தான் சார்ளமேன் தனது சாம்ராச்சியத்தின் நிர்வாகத்தை ஒழுங்கமைத்தான். அவன் எல்லா நிலங்களின் சொந்தக்காரன் என்றும் அந்நிலத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து நம்பிக்கை வைத்த நண்பர்களுக்கு கொடுத்தான். இவ்வாறாகப் பிரிக்கப்பட்ட நிலம் கவுன்ரிகள், டச்சீஸ் மற்றும் மார்ச்சஸ் ஆகும். அவை முறையே கவுன்ற்ஸ், டியூக்ஸ், மார்க்கியூசஸ் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டது.

- Counties - Counts
- Duchies - Dukes
- Marches - Marquises

அவர்கள் பேரரசனின் விருப்பத்திற்கேற்ப அதிகாரங்களை வைத்திருந்தனர். அவன் தனது தலைநகரான ‘‘ஆச்சனில்’’ வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடாத்தினான். அதற்கு எல்லாப் பிரிவு உறுப்பினர்களும் பங்குபற்றினர். ஹரூன்-அல்-ரசீட் என்ற பெரிய காலி.்.ப் பரிசுப் பொருளான யானையை சார்ளமேனின் அரண்மனைக்கு அனுப்பி வைத்தான்.

### (c) கற்றல்:

மகா சார்ளமேனிற்கு எழுத, வாசிக்க நேரமில்லை. இவ்வாறான பின்னடைவு (Handicap) இருந்தாலும் கற்றலுக்குப் பாரிய ஆதரவைக் கொடுத்தான். அவன் தனது அரண்மனைக்குப் பெரிய அறிஞர்களான நொதம்பிரியாவைச் சார்ந்த அல்குயின் (Alcuin) மற்றும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த தியோடோல்ப்[f] (Theadulf) என்பவர்களைத் தனது அரண்மனையில் தனது சொந்தப் பிள்ளைகளும் பிரபுக்களின் பிள்ளைகளும் படிப்பதற்குப் பள்ளி கட்டுவித்தான். அங்கு கிரேக்க, இலத்தீன் மொழிகள் கற்பதற்கு ஊக்குவித்தான். அவனது சாம்ராச்சியத்தின் ஒவ்வொரு தேவாலயத்திலும்

பள்ளிக்கூடங்கள் அமைந்திருந்தன. அங்கு பாதிரிமார், வாசிப்பு, எழுத்து, கணிதம் என்பவற்றை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தனர்.

### (d) சட்டங்கள்:

சார்ளமேனின் சட்டத்தொடர், "Capitularies" என அழைக்கப்பட்டது. இச்சட்டங்கள் பிரபுக்கள் எல்லோராலும் நம்பிக்கையுடனும் நேர்மையாகவும் பின்பற்றப்பட்டது. அவர் 'மிசி டொமின்சி' (Missi dominci) மாகாணங்களிலும் தான் வேலைக்கு அமைர்த்தியவர்கள் விசுவாசமாகத் தனது கட்டளைகளை நிறைவேற்றுகின்றார்களா என அறிந்து கொண்டார்.

பைசாந்தியப் பேரரசர் இவரை மேற்கு ஐரோப்பியப் பேரரசர் என அழைத்தபடியால் இவர் பைசாந்தியப் பேரரசருடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்தார். அவரின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் (814 A.D.) சார்ளமேன் எல்லா ஜேர்மானியர்களையும் ஒன்றுபடுத்தி எல்லாக் கிறிஸ்தவர்களையும் ஒரே அரசு, ஒரே தேவாலயத்திற்குள் கொண்டு வந்தார். அவரின் இறப்பிற்குப் பின் அவரின் மகன் லூயி வெற்றி பெற்றார். அவர் தனது மக்களைச் சரியான முறையில் அரசனாக வழிநடாத்த முடியவில்லை. குடும்பப் பிணக்குகளும் அதிகாரம் மிக்கத் தேவாலயங்களும் சேர்ந்து சாம்ராச்சியத்தில் குழப்பங்களை உருவாக்கியது. வெளிநாட்டவர்களான அரேபியர்கள், பிறிற்றோன்ஸ், நோர்மன்கள் மற்றும் வைக்கிங்குகள் இவரின் சாம்ராச்சியத்தை அடிக்கடி தாக்கினர். அவரது இறப்பிற்குப் பின்பு உடனடியாக, 843 A.D.யில் செய்யப்பட்ட வேர்டன் (Verdon) உடன்படிக்கையின்படி, சாம்ராச்சியம் மூன்று பகுதிகளாகப் பிரிந்தது. லூயியினுடைய மகளான சார்ள்ஸ் த போல்ட் (the Bold) பிரான்சைப் பெற்றுக் கொண்டாள். மூத்த லொதையர் (Lothair the Eldest) வட இந்தாலியைப் பெற்றுக்

கொண்டான். லூயி ஜேர்மனியின் அனேக பாகங்கள் ஐரோப்பாவின் பக்கத்திலுள்ள பிரதேசங்களைப் பெற்றுக் கொண்டான். லொதையர் பேரரசன் என்ற பட்டத்தை அனுபவித்தான். கி.பி. 887இல் இப் பேரரசு மறைந்து விட்டது. மகா ஒட்டோ (Otto the Great 912 – 973) ஆச்சனில் ஜேர்மன் அரசனாகப் (936 A.D.யில் பதவிக்கு வருமுன் மத்திய ஐரோப்பாவை ஒற்றுமைப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. கி.பி. 962இல் மகா ஒட்டோ போப்பாண்டவரினால் புனித உரோமப் பேரரசன் எனப் பட்டம் சூட்டப்பட்டான். ஆயிரம் வருடங்களுக்கு நிலைத்திருந்த இப்பேரரசு அடிக்கடி பதவியிலிருந்த போப்பாண்டவர்களுடன் தொடர்பைக் கொண்டிருந்தது. எல்லாப் புனித உரோமானியப் பேரரசர்களும் பிறப்பால் ஜேர்மனியர்கள்.

## சுருக்கம்

- கரோலிஞ்சியப் பேரரசு ஆரம்ப இடைக்கால ஐரோப்பாவின் ஒரு சிறந்த பேரரசாக நூற்றாண்டு காலம் நீடித்தது.

- சார்ளமேனின் முடிசூட்டு விழாவைப் போப்பாண்டவர் மூன்றாம் லியோ நடாத்தி வைத்தார். அவர் வெற்றி பெற்ற பிரதேச மக்களைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றினார்.

- ஐம்பது போர்களுக்குக் குறையாமல் எதிரிகளுடன் போரிட்டு வென்ற நாடுகளைத் தனது சாம்ராச்சியத்தில் சேர்த்துக் கொண்டார்.
- நிலங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

- சட்டத் தொகுப்பைத் தயாரித்து நடைமுறைப்படுத்தினான்.

## திறவுச் சொற்கள்

கரோலிஞ்சியன், சார்ளமேன், மதச்சார்பு, போப்பாண்டவர் மூன்றாம் லீயோலெம்பாட்ஸ்.

## உசாத்துணை நூல்கள்

Fisher, HAL., (1949), **A History of Europe,** Edward Arnold and Co., London.

GRIFFITH, MICHAEL, (18 May, 2021), **கரோலிஞ்சியன் டைனாஸ்ரி**, உலக வரலாற்றுக் கலைக் களஞ்சியம்.

## பயிற்சி வினாக்கள்

1. புனித உரோமானியப் பேரரசின் வளர்ச்சி பற்றி விபரிக்குக.
2. சார்ளமேன் கைப்பற்றிய பிரதேசங்களைச் சுருக்கமாகத் தருக.
3. கி.பி. 843 வேர்டன் உடன்படிக்கை பற்றிச் சிறு குறிப்பெழுதுக.

# அத்தியாயம் – 5

# திருச்சபையும் இடைக்காலத் தேவாலயங்களும்

## பொருளடக்கம்

5.1. அறிமுகம்
5.2. இயேசு கிறிஸ்து நாதரின் பிறப்பு
(அ) இயேசுநாதரின் பண்புகள்
(ஆ) இயேசுநாதர் மரித்தெழல்
(இ) இயேசுநாதரின் போதனைகள்
(ஈ) புனிதர் போல்
5.3. ஐரோப்பாவில் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு
கிறிஸ்தவம் அரசமாதல்
5.3.1. கிறிஸ்தவம் அரச மதமாதல்
5.4. கிறிஸ்தவ மதமும் திருச்சபையும்
5.5. மடாலய முறைமை
கிறிஸ்தவ மதமும் பெண்களும்
புனிதர் ஜெரோம்
புனிதர் அம்புரோஸ்
புனிதர் ஒகஸ்ரின்
போதியஸ்
பாப்பரசர் முதலாம் கிரெகறி

## அத்தியாயச் சுருக்கம்

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் கிறிஸ்தவ மதத்தின் முக்கியத்துவமும் அதன் நிறுவனங்களின் செயற்பாடுகளும் பல்வேறு சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. உரோமானியப் பேரரசில் வாழ்ந்த மக்கள் பல இன்னல்களை அனுபவித்தனர். கிறிஸ்தவ மதத்தின் வருகையின் பின் கிரேக்க,

உரோம, கிறிஸ்தவ, ஜேர்மானியப் பண்புகள் கலந்த ஒரு நாகரிகம் வளர்ச்சியடைந்து கல்வி, பண்பாடுகளில் சிறந்து விளங்கியது. மடாலயங்களின் பங்களிப்புகள் சிறப்பானவையாக இருந்தன. கரோலிஞ்சியப் பேரரசின் வீழ்ச்சியுடன் அந்நியப் படையெடுப்புகள் ஐரோப்பிய, நாகரிகத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்தன.

## அத்தியாயத்தின் நோக்கம்

ஐரோப்பிய வரலாற்றில், கிறிஸ்தவ மதத்தின் முக்கியத்துவம் அந்நிறுவனங்களின் செயற்பாடுகள் சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன. உரோமானியப் பேரரசில் கிறிஸ்தவ மதத்தின் முக்கியத்துவம் அறியப்படும். மடாலய முறைகள் பற்றியும் பல பேராயர்களின் பங்களிப்புபையும் இறையியலைப் பற்றியும் கல்வி வளர்ச்சி, கரோலிஞ்சியப் பேரரசு ஆகியனவற்றையும் விளங்கிக் கொள்வதே இதன் நோக்கம்.

## கற்றல் பெறுபேறுகள்

1. இவ் அத்தியாயத்தை மாணவர்கள் கற்கும்போது இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில், கிறிஸ்தவ மதம் பெற்றுக்கொண்ட முக்கியத்துவம்.

2. கிறிஸ்தவ மத நிறுவனங்களின் செயற்பாடுகள், சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகள் பற்றி அறிய முடியும்.

3. மடாலயங்கள், இறையியல், கல்வி வளர்ச்சி என்பவற்றிற்குப் பங்காற்றியதை அறிய முடியும்.

4. அந்நியப் படையெடுப்புக்கள் மூலம் ஐரோப்பியப் பேரரசுகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததை விளங்கிக்கொள்ள முடியும்.

## 5.1. அறிமுகம்

ஐரோப்பிய நாகரிகத்தின் பிரதான மூலங்களில் கிறிஸ்தவ மதமும் அதனுடன் இணைந்து செயற்பட்ட நிறுவன அமைப்புக்களும் முக்கியமானவையாக விளங்குகின்றன. உரோமப் பேரரசின் காலத்தில் அடக்குமுறைக்கும் துன்பங்களுக்கும் உள்ளான கிறிஸ்தவர்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் சுதந்திரமாகச் செயற்படும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர். அக்காலத்திலிருந்து இன்றுவரை ஐரோப்பிய நாகரிகத்தின் அனைத்துத் துறைகளிலும் கிறிஸ்தவ மதமும் அதனைச் சார்ந்த அமைப்புக்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சிறப்பாக இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் அதன் பாதிப்பு, தாக்கம் பெருமளவினதாகும். இக்கால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் அதன் பங்களிப்பு மகத்தானதாகும். ஐரோப்பாவில் கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, ஜேர்மனியப் பண்புகள் எல்லாம் கலந்த ஒரு நாகரிகத்தை வளர்ச்சிப்படுத்தி நிரந்தரப்படுத்தியதில் கிறிஸ்தவ மதத்தின் பங்கு அளவிடற்கரியது.

## 5.2. இயேசு கிறிஸ்துநாதரின் பிறப்பு

உலகின் மிகப் பெரும்பான்மையோரினால் பின்பற்றப்படும் கிறிஸ்தவ மதத்தின் தாபகர் யூதேயா நாட்டில் உள்ள பெத்தலகேம் என்ற சிறு நகரில் பிறந்த நசரேத்தின் யேசு (Jesus of Nazareth) என்னும் அவதார புருஷர் ஆவர். இவரது பிறப்பு கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்ப வருடங்களில் இடம்பெற்றிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது (சரியாக கி.பி. முதலாம் ஆண்டு என்பது சந்தேகத்திற்கிடமானது). கிறிஸ்து நாதரின் பிறப்பு மிக எளிமையான சூழ்நிலையில் இடம்பெற்றதாகவும் அவரது வாழ்நாள் முழுவதும் உரோம நாகரிகத்தின் எல்லைப் பரப்புக்குள் இடம்பெற்றதாகவும்

அறிகிறோம். அப்போது இந்த யூதேயா நாடு உரோமப் பேரரசின் கிழக்கு மாகாணத்தில் உள்ளடங்கி இருந்தது. அதனாலே உரோம நாகரிகத்தின் மீதான கிறிஸ்தவ செல்வாக்கும் கிறிஸ்தவம் மீதான உரோம நாகரிகத்தின் செல்வாக்கும் பரஸ்பர வலிமை கொண்டதாகக் காணப்படுகின்றது. யூதேய நாட்டில் வழக்கில் இருந்த ஹீப்ரு மதப் பாரம்பரியங்களும் உரோம அரசாங்க மரபுகளும் கிறிஸ்தவத்தின் அபிவிருத்தியில் ஆரம்ப செல்வாக்கை ஏற்படுத்தியிருந்தன. யூதேயா நாட்டு மக்கள் ஏக தெய்வக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவராகவும் கடவுளின் ஆவியான ஜெகோவாவை (Jahveh) உலகத்தின் படைப்பாளியாக, அகிலத்தின் ஆட்சியாளனாகக் கருதியும் வந்தனர்.

### (அ) இயேசு கிறிஸ்துநாதரின் பண்புகள்:

கிறிஸ்து நாதர் பிறந்த காலம் மத உணர்வுகள் தீவிரமடைந்த காலமாகவும் அரசியல் கொந்தளிப்புக்கள் நிரம்பிய ஒரு காலமாகவும் விளங்கியது. யூத மத நம்பிக்கையின்படி உரோம ஆதிக்கத்திலிருந்து தங்களை மீட்பதற்காக ஒரு மீட்பர் வருவார் என்ற நம்பிக்கையும் காணப்பட்டது. வேறு சிலரோ ஆயுத வலிமை காரணமாக உரோம ஆட்சியை அகற்ற விருப்பம் கொண்டிருந்தனர். இத்தகைய சூழ்நிலையில் கிறிஸ்துநாதரின் ஆரம்ப வாழ்க்கை பற்றிக் குறிப்பாகத் தகவல் எதனையும் பெற முடியாதவர்களாகவே நாம் உள்ளோம். ஏறத்தாள அவரது முப்பது வயதளவில் அவர் தெய்வீக அனுபவங்களைப் பெற்றதாகவும் பல அற்புதச் செயல்களை மேற்கொண்டதாகவும் அறிகிறோம். புதிய ஏற்பாட்டின்படி வருத்தம் உள்ளோரைக் குணப்படுத்தியதாகவும் பேய் பிடித்தோரிடம் இருந்து பேய்களை விரட்டியதாகவும் பார்வை அற்றோருக்குப் பார்வை அளித்ததாகவும் இறந்தோரை உயிர்ப்பித்ததாகவும் பல தகவல்களைப் பெறுகின்றோம். எப்படியிருந்த போதிலும் கிறிஸ்துநாதரின்

போதனைகள் அன்பு, இரக்கம், கருணை, தன்னலமின்மை, மன்னிப்பு, மனிதாபிமானம், உதவி செய்யும் மனப்பாங்கு போன்ற பல அரிய நற்பண்புகளைக் கொண்டிருந்ததாக அறியப்படுகின்றது. அவரது போதனைகளும் ஏனைய நடவடிக்கைகளும் பழமைக்குள் மூழ்கிக் கிடந்த யூத மதத்தின் பிரதான தலைவர்களுடன் முரண்பாட்டினை ஏற்படுத்துவதாக அமைந்தது. மதச் சடங்குகள், ஆடம்பர நடவடிக்கைகள் பொறுத்துக் கிறிஸ்து நாதரின் மறுப்புக்கள் இவர்களை அச்சமுற வைத்தன. மனித குலத்தைப் பாவத்திலிருந்தும் பிழைகளிலிருந்தும் மீட்பதாகப் போதித்ததும் இவர்களுக்குப் பிடிக்காதிருந்தது. அரசியல் சிந்தனை அடிப்படையிலும் உரோமப் பேரரசுத் தத்துவத்திற்கும் முரணானதாக இவரின் போதனைகள் காணப்பட்டன. இதுவரை பேரரசர் லௌகீகம் (உலோக வாழ்க்கை), ஆன்மீகம் ஆகிய இரண்டு துறைகளுக்கும் தலைவராக இருந்தார். கிறிஸ்துநாதரின் போதனைகளோ ஆன்மீகத் துறையில் பேரரசனுக்கு இதுவரை இருந்த ஆதிக்கத்தை அகற்றும் தன்மை கொண்டதாக இருந்தது. இதனால் அமைதிக்கும் மத நம்பிக்கைகளுக்கும் பங்கம் விளைவித்தார் என்று குற்றஞ்சாட்டி, ஜெரூசலேமில் உயர்நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு, யூதர்களின் மன்னனாகத் தன்னை ஆக்குவதற்கு முயற்சித்ததாகக் கருதி, உரோம தேசாதிபதியாகிய பொன்ரியஸ் பிலேத்தினால் (Pontius Pilate) மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றார். ஜெரூசலேமின் வெளிப்புறத்தில் இருந்த கொல்கொதா (Golgotha) (மண்டை ஓடுகள்) மலைச்சரிவில் சிலுவையில் அறையப்பட்டுப் பல மணித்தியால கடும் வேதனையின் பின்னர் அவர் இறந்ததாக அறிகிறோம். மனிதகுலத்தின் பாவ விமோசனத்திற்காகத் தன்னை இத்தகைய நிலைக்கு ஆளாக்கியதாகக் கிறிஸ்தவ நம்பிக்கைகளில் இருந்து அறியமுடிகின்றது.

### (ஆ) இயேசுநாதர் மரித்தெழல்:

கிறிஸ்தவ மத வரலாற்றில் கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்பட்ட சம்பவமானது மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால், அவர் மரித்து எழுந்ததும் அவரது நம்பிக்கைக்குரிய சீடர்கள் நேரில் கண்டதாகக் கூறிய சம்பவங்களும் அற்புதச் செயல்களும் அவரது ஆதரவாளர்களுக்குப் புத்தூக்கத்தை அளித்து அவரது வழியில் தொண்டாற்ற ஊக்கமளித்தது. இச்சம்பவங்கள் அவரைத் தெய்வாம்சம் பொருந்தியவராக, தேவதூதனாக மாற்றி விட்டன. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவரது ஆதரவாளர் சிறு குழுவினராகச் சேர்ந்து யேசுக்கிறிஸ்துநாதர் பெயரில் அவர் போதனைகளைச் செயற்படுத்த முற்பட்டனர். இந்த முயற்சி காலப்போக்கில் உரோமப் பேரரசு முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச மதமாகக் கிறிஸ்தவம் அந்தஸ்துப் பெற்றுக்கொண்டது.

### (இ) இயேசுநாதரின் போதனைகள்:

இயேசு கிறிஸ்துநாதரின் உண்மையான போதனைகள் இவை தான் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாத அளவிற்குக் கிறிஸ்தவர்கள் இடையே அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. இருந்தாலும் அவரது நான்கு சீடர்களின் எழுத்துக்கள் கிறிஸ்துவின் அடுத்த தலைமுறைக் காலத்தில் எழுதப்பட்டவையாக, நம்பத்தகுந்தவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவரை நம்பும் பழைமைவாத ஆதரவாளர்கள் கிறிஸ்து நாதரைத் ‘‘தேவ குமாரனாக’’ (கடவுளின் மைந்தன்) மனிதகுலத்தின் பாவங்களை நீக்கவும் வேதனைகளை அனுபவிக்கவும் பூமிக்கு அனுப்பப்பட்டவராக நம்புகின்றனர். அவர்கள் கிறிஸ்துநாதரை மூன்று நாட்கள் கல்லறையில் கிடந்த பின்னர் மரித்து எழுந்தவராகவும் சொர்க்கத்திற்குச் சென்ற பின்பு மீண்டும் உலகிற்கு வருவார் என்றும் நம்புகின்றனர். அவருடைய அடிப்படைப் போதனைகளில் கடவுளின் தந்தைப் பண்பு, மனித

சகோதரத்துவம், நல்லாட்சி, மன்னிப்பு அளித்தல், பகைவனுக்கும் அன்பு காட்டல், தீமைக்கும் நன்மை செய்தல், தன்னலமற்ற பண்பு, சுய ஒறுப்பு, ஆடம்பர வழ்விற்கு எதிர்ப்பு, சடங்கு, கிரியைகளை மதத்தின் சாரமாக நடத்துவதற்கு எதிர்ப்பு, சொர்க்க இராச்சியம் என்பன காணப்படுகின்றன.

**(ஈ) புனிதர் போல்:**

கிறிஸ்தவ மதத்தின் இறையியல் வளர்ச்சிக்கு அவரது ஆதரவாளர் சிலர் ஒழுங்கான வடிவத்தை அளித்தனர். அவர்களுள் சின்னாசியாவைச் சேர்ந்த புனிதர்போல் (St. Paul – 10? – 67A.D.) முக்கியமானவராவார். ஒரு யூதராக இருந்து பின்னர் கிறிஸ்து மார்க்கத்திற்கு மாறித் தூர கிழக்கு முழுவதிலும் இம்மதத்தைப் பரப்புவதில் அளப்பரிய சேவை செய்தவராக விளங்குகின்றார். கிறிஸ்துநாதரை வெறுமனே, யூதர்களை மீட்க வந்தவர் என்ற எல்லைக்குள் வைக்காது, ஒரு சர்வதேச மதமாக அதனை மாற்றிய பெருமை இவரைச் சார்ந்தது. கிறிஸ்தவ திருச்சபை அமைப்பை ஏற்படுத்தி, அதனைக் கிறிஸ்தவ மதத்தின் மத்திய நிறுவனமாகப் பின்னாளில் வளர வித்திட்ட பெருமை இவரைச் சார்ந்ததாகும். கிறிஸ்தவ மரபுகளைக் கிரேக்க, ஹீப்ரு மரபுகளுடன் இணைத்து உரோம உலகம் முழுவதும் பரப்ப முயற்சி எடுத்தவராக இவர் காணப்படுகின்றார். சிறப்பாகக் குறிப்பிட்டால் கிரேக்க தத்துவார்த்த மரபுகளினால் கவரப்பட்ட கல்வி கற்ற உள்ளங்கள் இடையில் கிறிஸ்தவ இறையியலை வெற்றிகரமாக விளக்கிச் செல்வாக்குப் படுத்தியவர் புனிதர்போல் ஆவார்.

கிறிஸ்து சகாப்தத்தின் முதலிரு நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ மதமானது, மெதுவாக ஆனால், உறுதியான முறையில் வளர்ச்சி கண்டது. ஆரம்ப காலத்தில் பேரரசர் தத்துவத்தை (God – Emperor Concept) அது கேள்விக்கிடமாக்கியதால் உரோமப் பேரரசர் அதற்கெதிராகப் பல கடுமையான

நடவடிக்கைகளை எடுத்திருந்தார். அவற்றுக்கிடையிலும் அதன் அமைப்புமுறை காரணமாக இரகசியமான முறையிலே வளர்ச்சி கண்டது. ஆனால், கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் பேரரசில் ஏற்பட்ட குழப்ப நிலைமைகளினால் இவ்வுலக வாழ்வு பற்றிப் பல கேள்விகள் தத்துவவாதிகளால் கிளப்பப்பட்டன. தீவிர அரசியல் குழப்பங்களும் பொருளாதாரக் கஷ்டங்களும் இவ்வுலக வாழ்க்கை மீதான ஒரு மாயையை மக்களிடையே ஏற்படுத்தியிருந்தது. இத்தகைய சூழ்நிலை கிறிஸ்தவ மதத்தின் வளர்ச்சிக்கும் அதன் கோட்பாடுகள் செல்வாக்குப் பெறுவதற்கும், ஆன்மா, மறுவுலகம், சொர்க்கம் பற்றிய நம்பிக்கைகள் பலமடைவதற்கும் வழிவகுத்தன.

## 5.3. ஐரோப்பாவில் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு

உரோமப் பேரரசின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதம் மித்ரேயிசம் (Mithraism) புலமைவாதம் (Gnosticism – கிரேக்க – கீழைத்தேய தத்துவம் கலந்த வழிபாட்டு முறை, நம்பிக்கையிலும் பார்க்க அறிவைத் தெய்வமாகக் கொள்வது. கிறிஸ்தவத்திற்கும் – பாகன் Paganism பண்பாட்டிற்கும் இடைப்பட்டது. கி.பி. 1 – 6 நூற்றாண்டு காலப்பகுதி) மற்றும் கிரேக்க, உரோம வழிபாட்டு முறைகள், பாகன் பண்பாடும் இவற்றுடன் ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது. ஆனால், கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் மற்றைய மத வழிபாட்டு முறைகளிலும் பார்க்கக் கிறிஸ்தவம் செல்வாக்குப் பெற்றமைக்குப் பல காரணங்கள் வழிவகுத்தன. பழைய மதங்களான யூதேயம், சொறாஸ்திரியம் (Zorastriam) புலமைவாதம் போன்றவற்றில் இருந்து மூலங்களைக் கிறிஸ்தவ மதம் பெற்றுக்கொண்டாலும் புதிய உத்வேகம் இங்கே இடம்பெற்றிருந்தது. அத்துடன் கிறிஸ்தவத்தின் விடுதலை, தீமை பற்றிய இறையியல் தத்துவம், அதன் சமூகப் பரிமாணம், பேரரசு அமைப்பு முறையினை ஒத்த நிறுவன

ஒழுங்கமைப்பு என்பன கிறிஸ்தவ மதம் பரவுவதற்கு வழி கோலின. மற்றைய போட்டி மதங்கள் மறுவுலகு பற்றிப் பேசினாலும் கிறிஸ்தவ மதம் தொடர்பான கோட்பாடு மிகச் சிறப்பானதாக, மக்களைக் கவரக் கூடியதாகக் காணப்பட்டது. அதன் ஆரம்பம் முதலே கிறிஸ்தவ மதம் சமூகத்தின் கீழ் வகுப்பு மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. உதாரணமாக மர வேலை செய்வோர், மீனவர், கூடாரம் செய்வோர் என்பவர்களுடன் நெருங்கிய வகையிலே தொடர்பு கொண்டதாகக் கிறிஸ்துநாதரின் வாழ்க்கை காணப்பட்டது. ஒரு சில மேல் வகுப்பு மக்களை இது கவர்ந்தபோதும் அதனுடைய பலம் சமூகத்தின் கீழ், மத்திய வகுப்பு மக்களிடையே தான் தங்கியிருந்தது. இவர்களே உரோமப் பேரரசில் அதிக தொகையினராகக் காணப்பட்டனர். மேலும், கிறிஸ்தவ மதம் பெண்கள் குருமார்களாக வருவதற்கோ, மத, தத்துவ நம்பிக்கைகளை விவாதிப்பதற்கோ தடை விதித்திருந்தாலும் வழிபாட்டு உரிமைகளை வழங்கியதுடன், ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பாவம், இறப்பிலிருந்து விடுதலை பெறுவதற்கான சம வாய்ப்பையும் வழங்கியிருந்தது. சிறப்பாக மித்ரேயிசம் பெண்களைப் பூரணமாக ஒதுக்கியே வைத்திருந்தது. அத்துடன் மற்றைய மதங்களிலும் பார்க்க கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில் ஒரு வளர்ச்சியுற்ற நிறுவன அமைப்பைக் கிறிஸ்தவம் பெற்றிருந்தது. குருமார்களைப் படிமுறையாகக் கொண்ட ஒழுங்கமைப்பு (பாப்பாண்டவர், பேராயர், ஆயர், குருமார்) பேரரசு நிர்வாக முறையைப் பின்பற்றியதாக அமைக்கப்பட்டிருந்தது. தங்களது தன்னலமற்ற சேவைகள் மூலமாகச் சமூகத்தை இறுக்கமான வகையிலே இணைத்துக் கொண்ட அமைப்பாக அது மாறியிருந்தது.

### 5.3.1. கிறிஸ்தவம் அரச மதமாதல்

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட நான்காம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் ஆட்சியாளர்களின் கொள்கை எப்படியிருந்த போதிலும் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுவோர்களின் எண்ணிக்கை பேரரசில் அதிகரித்திருந்தமையால் ஏதோ ஒரு வடிவிலான அங்கீகாரம் வழங்கப்பட்டாக வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாகியது. இப்பின்னணியில்தான் பேரரசர் கொன்ஸ்ரான்ரைன் (Constantine) காலத்தில் கி.பி. 313 மிலான் கட்டளையின்படி கிறிஸ்தவம் மற்றைய மதங்களுடன் ஒத்த சம உரிமையையும் சட்ட ரீதியாகப் பேரரசில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற அந்தஸ்தையும் பெற்றுக்கொண்டது. ஆனால், இப்பேரரசின் பின்னர் ஆட்சிக்கு வந்த யூலியன் (Julian) மன்னனின் காலத்தில் (361 – 63) திரும்பவும் இம்மதத்திற்கு எதிராகப் பாகன் பண்பாடு தலை தூக்க முயற்சித்த போதும் அது வெற்றி பெறவில்லை. இறுதியில் பேரரசன் தியோடோசியஸ் (Theodosius) ஆட்சியில் கி.பி. 395இல் பேரரசின் உத்தியோகபூர்வ மதமாகக் கிறிஸ்தவம் அங்கீகரிக்கப்பட்டு, ஏனைய மத நம்பிக்கைகள் தடை செய்யப்பட்டன. இவ்வாறு உரோமப் பேரரசின் உத்தியோகபூர்வ மதமாகக் கிறிஸ்தவம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது.

உரோமப் பேரரசு சிதைந்து போவதற்கு முன்பாகவே வலிமைமிக்க தத்துவமாகக் கிறிஸ்தவம் ஏற்றுக்கொள்ளப் பட்டதனைத் தொடர்ந்து சிந்தனைத் துறையிலும் அமைப்பு முறையிலும் நடத்தை முறையிலும் பிரதான அபிவிருத்திகள் ஏற்படலாயின. இவற்றால் டியோகிளிசன்ஸ், கலிறியஸ் (Diocletian, Galerius) மன்னர் காலத்தில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட கிறிஸ்தவத்திலும் பார்க்க மிகவும் வித்தியாசமான கிறிஸ்தவமாக நான்காம் நூற்றாண்டின் இறுதியில் விளங்கியது. கிறிஸ்தவ மதமும் திருச்சபை

அமைப்பும் வளர்ச்சியடைந்த காலத்தில் அவற்றை முக்கியமான இறையியல் பிரச்சினைகள் பாதிக்கலாயின. அநேகமான இப்பிரச்சினைகள் கிறிஸ்தவத்தின் திரித்துவக் கோட்பாடு, (Father – Son, Holy Ghost – பிதா, மதன், பரிசுத்த ஆவி) தெய்வீகத் தன்மை தொடர்பாகவே ஏற்பட்டன. இதனால், இரு பெரும் பிரிவுகள் – அரியன்ஸ் (Arius) அத்தனாசியஸ் (Athanasius) ஏற்பட்டுப் பிரச்சினை வலுவடைந்தபோது இதனைத் தீர்க்கும் நோக்குடன் பேரரசன் கொன்ஸ்ரான்ரைன் ஆதரவில் அவர் தலைமையில் கி.பி. 325இல் நிசேயா (Nicaea) என்ற இடத்தில் கிறிஸ்தவ உலகின் பேராயர், ஆயர், மடாலயத் தலைவர் கொண்ட முதலாவது மகாநாடு கூட்டப்பட்டுத் திரித்துவக் கோட்பாட்டின் பழமைவாதக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அரியனிசம் கண்டனத்திற்கு உள்ளாயிற்று. இருந்தாலும் அரியனிசம் தொடர்ந்தும் சில காலமாக ஜேர்மனியப் பிரதேசங்களில் செல்வாக்குப் பெற்று விளங்கியது. கோட்பாட்டு அடிப்படையிலான பிரச்சினைகள் பிராந்தியப் பகைமையினையும் திருச்சபையின் விவகாரங்களில் லௌகீகத் தலையீடுகள் ஏற்படுவதனையும் தூண்டிவிட்டன. இம்முரண்பாடுகள் கிழக்கு, மேற்குப் பேரரசுப் பிராந்தியங்களில் பொருளாதார, நிர்வாக, அரசியற் காரணங்களை முன்னிட்டு மேலும் வலிமை பெறலாயின.

நிசேயா மகாநாடு கூட்டப்பட்டதனைத் தொடர்ந்து கிழக்கு உரோமப் பேரரசில் கிறிஸ்தவ மத இறையியல் விவகாரங்களில் பேரரசனின் முதன்மை வலுவடையலாயிற்று. மேற்கிலும் பார்க்கக் கிழக்கில் மத ரீதியான பிரச்சினைகள் அதிகமாகக் காணப்பட்டதுடன் முரண்படும் பிரிவினர் பேரரசனைத் தமக்குச் சார்பாக இருக்குமாறு வேண்டிக் கொண்டனர். கி.பி. 476இல் உரோமப் பேரரசு மேற்கில் முற்றாக வீழ்ச்சியுற்றுப் போகக் கிழக்கில் தொடர்ந்து பேரரசு வலிமையான ஒரு நிலையில் இருந்தது. இக்

காரணங்களினால் கிழக்கு உரோமப் பேரரசன் கிறிஸ்தவ மதம் தொடர்பான அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் வலுவாகவே பெற்றிருந்தான். ஆனால், மேற்கில் அத்தகைய ஒரு வலுவான நிலை இன்மையால் அரசு – திருச்சபை உறவுகள் பலமானவையாக அமைய முடியாமற் போயிற்று.

## 5.4. கிறிஸ்தவ மதமும் திருச்சபையும்

கிறிஸ்தவ மதத்தைப் பொறுத்து அதன் திருச்சபை அமைப்பு முறை மிகப் பிரதான இடத்தைப் பெற்றுள்ளது. அரசியல் விவகாரங்களில் சிக்கல்கள் ஏற்பட்ட போதும் திருச்சபை அமைப்பு முறையில் உள்@ர் நிர்வாக அமைப்பு படிப்படியாக வலுப்பெற்று வந்துள்ளது. இந்த அமைப்பின் வளர்ச்சியில் உரோம அரச நிறுவனங்களின் பண்பினைக் காணலாம். புனிதர் போலின் பின்பாகக் கிறிஸ்தவ குருமாருக்கும் கிறிஸ்தவ மக்களுக்கும் (Clergy, Laity) இடையிலான தெளிவான வேறுபாடு ஏற்படுத்தப்பட்டு விட்டது. அதனைத் தொடர்ந்து குருவாயத்தில் படிமுறைத் தன்மை கொண்ட அதிகார அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தப் படிமுறை அதிகார அமைப்பிலே (Hierarchial Organization), பேராயர்களின் மேலாதிக்கம் (Bishop), குருமார் (Priest) பொறுத்து ஏற்படுத்தப்பட்டது. இக் கிறிஸ்தவ அமைப்பு முறைமை முக்கியமான நகரங்களில் பேராயர்களை அதிகாரத்துவத் தலைவர்களாக மாற்றியது. பேராயர், ஆயர் இடையே கூடப் பதவி வழியான தர வேறுபாடுகள் ஏற்படுத்தப்பட்டன. பிஷப்பாண்டவரின் அதிகார எல்லைப் பரப்புக்கள் உரோம நிர்வாக அலகை ஒத்தனவாக ஏற்படுத்தப்பட்டு, மிகவும் மத்தியமயமான நிர்வாக அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. இவ்வகையில் ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உரோம், எருசலேம், கொன்ஸ்தாந்திநோபிள், அன்ரியொச், அலெக்சாந்திரியா

போன்ற பெரு நகரங்களில் பேராயர்கள் அதிகாரம் செலுத்தலாயினர்.

இந்த வளர்ச்சியின் உச்ச நிலையாக அமைவது பாப்பரச முறையின் தோற்றமாகும். பாப்பரச முறைமை என்பதே உரோம் நகரில் உள்ள பேராயரின் தனி முதன்மை வளர்ச்சிப் படுத்தப்பட்டமையாகும். திருச்சபையின் ஏனைய நிர்வாக அலகுகளிலும் பார்க்க உரோமில் உள்ள பேராயர் பல காரணங்களினால் தனி முதன்மை மிக்கவராக விளங்கினார். கிறிஸ்தவ மரபுகளின்படி இந்நகரம் புனிதர் பீற்றர், புனிதர் போல் ஆகியோரின் கிறிஸ்தவ மத நடவடிக்கைகள் இடம்பெற்ற தலமாகப் புனிதம் பெற்றது. கிறிஸ்தவ மரபுகள், புனிதர் பீற்றராலே உரோமப் பேராயர் ஆளுகைப் பிரதேசம் ஏற்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. அவரின் பின் பதவி பெற்ற அனைத்துப் பேராயர்களும் அவரின் வாரிசாகப் பெருமையைப் பெற்றுக்கொண்டனர். அத்துடன் கிறிஸ்து நாதராலே பூமியில் தனது உயர் அதிகார பீடமாக உரோம் தெரியப்பட்டு, மக்களின் பாவங்களுக்குத் தண்டனை வழங்கவும், கழுவவும் அதிகாரம் கொண்ட சொர்க்க இராச்சியத்தின் திறப்புக்கள் புனிதர் பீற்றரிடம் கொடுக்கப்பட்டதாகவும் மரபுகள் குறிப்பிடுகின்றன. (Doctrine of the – Petrine Succession) இக்கோட்பாடு உரோமபுரியின் பேராயர் ஏனைய திருச்சபை மீதான மேலாதிக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அடிப்படையாக அமைந்தது. அத்துடன் பேரரசின் தலைநகர் உரோமிலிருந்து கொன்ஸ்தாந்திநோபிளுக்கு மாற்றப்பட்டமை பேரரசனின் இறைமையை மேற்கில் வலுவாகப் பேண முடியாதுபோக வழி வகுத்தது. இதனால் உரோமின் பேராயர் தம் தனித்துவத்தைப் பேணி, அந்த அமைப்பை உள்@ர் ஜேர்மானிய ஆட்சியாளரின் உதவி கொண்டு வலுப்படுத்த வாய்ப்பைக் கொடுத்தது.

கிறிஸ்தவ அமைப்பு முறையில் ஏற்பட்ட இந்த அபிவிருத்திகள் நான்காம் நூற்றாண்டில் இந்த அமைப்பு உரோம உலகையே வெல்வதற்கு உதவி செய்தன. இதே காலத்தில்தான் எல்லைப் புறங்களில் வாழ்ந்து பல்வேறு அளவுகளில் உரோம மயமாக்கப்பட்ட ஜேர்மானிய இனக்குழுவினர் ஆயிரக் கணக்கில் சமாதான முறையிலே பேரரசுக்குள் ஊடுருவுகின்றனர். மிக விரைவிலேயே இவர்கள் பேரரசின் பலவீனத்தையும் பொருளாதார வீழ்ச்சியையும் நன்கு பயன்படுத்திக் கொண்டு மேற்கு ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் தங்கள் அரசியல் இருக்கைகளைத் தாபித்துக் கொண்டனர். நாகரிகத்தில் பின்தங்கியிருந்த, ஒழுங்கான மதம் இல்லாதிருந்த, நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி வாழும் வழக்கம் இல்லாத இம்மக்களை நாகரிகப்படுத்தி, ஒழுங்கான மதத்தைப் போதித்து, அரசியல் அமைப்புமுறை, ஆட்சி நிர்வாகத்தைச் சொல்லிக் கொடுத்தவர்களாக வளர்ச்சியடைந்திருந்த கிறிஸ்தவ அமைப்பினர் செல்வாக்குப் பெற்றனர். மேற்கில் அரசியல் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டு இருந்தமையை நன்கு பயன்படுத்திக் கொண்டு, இப்புதிய ஆட்சியாளர்களைத் தமக்குப் பாதுகாவலனாக மாற்றித் தம் அதிகார எல்லையை மேலும் வளர்த்துக் கொண்டனர். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் உரோமப் பேரரசு மேற்கில் வீழ்ச்சியுற்றதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை, ஏற்கனவே உரோம நிர்வாக அமைப்பைப் பின்பற்றி வளர்ச்சி அடைந்திருந்த கிறிஸ்தவ மத அமைப்புக்கள் நிரப்பிக் கொண்டன. ஒவ்வொரு பிரதான நகரங்களிலும் வளர்ச்சியுற்றிருந்த இந்த அமைப்புக்கள் ஜேர்மானியப் படையெடுப்புக்களினால் ஏற்பட்ட குழப்ப நிலையிலும் அரசின் பல பணிகளைச் செய்து மக்களுக்குச் சிறந்த சேவையாற்றின. இப்புதிய சூழ்நிலையில் கிறிஸ்துநாதரினதும் அவர் சீடர்களினதும் கருத்துக்கள், நம்பிக்கைகளில் இருந்து விலகும் தன்மை கொண்ட, கூடியளவு உலகியல் அம்சங்களுடன் தொடர்புடைய

நடவடிக்கைகளைத் தவிர்க்க முடியாதவகையில் எடுக்க வேண்டியதாயிற்று.

## 5.5. மடாலய முறைமை

இத்தகைய வெளிப்பாட்டின் விளைவாகத்தான் ஐரோப்பாவில் மடாலய முறைமை தோற்றம் பெற்றது. கிறிஸ்து சகாப்த ஆரம்ப நூற்றாண்டுகளில் மதகுருமார் கீழைத்தேச மதங்களின் செல்வாக்கின் விளைவாகக் கடுமையான துறவற வாழ்க்கை முறையை மேற்கொண்டதுடன், சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்ந்து இறைவழிபாட்டிலும் கடுமையான நோன்பு நோற்றலிலும் ஈடுபட்டிருந்தனர். உடலை இவ்வாறு வருத்துவதன் மூலம் மேலான நிலையை அடையலாம் என்ற நம்பிக்கையும் இவர்களிடையே வேரூன்றியிருந்தது. இத்தகைய ஒரு மனப்பாங்கு கி.பி. நான்காம் நூற்றாண்டில் வேறொரு வடிவத்தைப் பெற்றுக்கொண்டது. முன்னர் போலச் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழாமல், சமூகத்திற்கு நன்மைகள் செய்யும் நோக்குக் கொண்டதாகத் துறவறமுறைமை மடாலய முறைமையாக மாற்றம் கண்டது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் இருந்து இன்றுவரை கிறிஸ்தவ மதத்தின் சிறப்பிற்கு முக்கியமான ஒரு அம்சமாக இந்த மடாலய முறைமை விளங்கி வருகின்றது. கிறிஸ்தவ மடாலய முறைமையின் தந்தையாகத் தீபஸின் புனித அந்தோனி (200 A.D.) என்பவர் விளங்குகின்றார். இம்முறையின் அடிப்படைப் பிரமாணங்களாக எளிமை, ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன காணப்பட்டன.

மடாலய முறைமை ஆரம்பத்தில் பைசாந்தியப் பேரரசில்தான் தோற்றம் பெற்றது. இத்தகைய அமைப்பு முறையொன்றை வெற்றிகரமாக உருவாக்கியவர்களுள் புனிதர் பசில் (St. Basil – 330 – 379 A.D.) என்பவர் சிறப்பிடம் பெறுகின்றார். துறவிகள் ஒன்றாக வாழ்ந்து கடுமையான நோன்பு நோற்பதிலும்

பார்க்கத் தங்கள் உழைப்பைச் சமூகத்திற்குப் பயன்படுத்தும்படி உபயோகப் படுத்துவதில் அக்கறை கொண்டவராக இவர் விளங்கினார். இம்மடாலய முறைமைக்கான கோட்பாடுகள், சட்டதிட்டங்களை உருவாக்கியவராகவும் இவர் காணப்பட்டார். ஒழுக்கமும், கட்டுப்பாடும், எளிய வாழ்வும், கிறிஸ்தவ வாழ்வில் சிறப்பிடம் பெறப் பாடுபட்டவராகவும் விளங்கினார். மேற்கில் துறவற முறைமை ஆரம்பத்தில் அதிக செல்வாக்கைப் பெறாத காரணத்தால் மடாலய முறைமை காலந்தாழ்த்தியே இங்கு வளர்ச்சியுறலாயிற்று. இவ்வகையில் ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த புனிதர் பெனடிக்ற் (St. Benedict – 480 – 547 A.D.) மேற்கில் இம்மடாலய முறைமையை வளர்ச்சிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். புனிதர் பசிலைப் போலவே மேற்கில் இம்முறைமையின் சட்டதிட்டங்களை வகுத்தவராக இவர் விளங்கினார். பசிலிக்கன் முறைமையிலும் பார்க்கக் கடுமை குறைந்ததாக, நெகிழ்வுத் தன்மையும் மிதமான பண்பு கொண்டதாக பெனடிக்ரைன் மடாலய முறைமை காணப்பட்டது. இதனால் மேற்கில் பெனடிக்ரைன் மடாலயங்கள் ஆழமான மத உணர்வை வளம்படுத்தும் மையங்களாக வளர்ச்சிகண்டன.

மேலைத்தேச நாகரிகத்தின் வளர்ச்சிக்குப் பெனடிக்ரைன் மடாலயத் துறவிகள் பெருமளவு தொண்டினை ஆற்றியுள்ளனர். இத்துறவிகளின் தன்னலமற்ற சேவைகளினாலே இங்கிலாந்தும் ஜேர்மனியின் பெரும்பகுதியும் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டன. இச்சேவைகள் இப்பகுதிகளில் கிறிஸ்தவ நம்பிக்கையைப் பரப்பியதுடன் நில்லாது மேற்கு ஐரோப்பாவில் கலாசார, ஒற்றுமையுணர்வை வலுப்படுத்தவும் உதவி புரிந்தன. பெனடிக்ரைன் துறவிகளின் மற்றுமோர் சாதனை வேலை (Work) தொடர்பாக அவர்கள் கொண்டிருந்த மனப்பாங்கு ஆகும். புனிதர் பெனடிக்ற் ஆத்மாவின் பகைவனைச்

சோம்பலைக் கருதித் தனது துறவிகள் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கான வழிமுறைகளை உருவாக்கியிருந்தார். அதனால் துறவிகள் குறிப்பிட்ட நேரகாலம் சரீர உழைப்பில் ஈடுபட வேண்டுமென்று கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தார். இதன் பின்னணியில் இத்துறவிகள் கடுமையான உடல் உழைப்பை மேற்கொண்டதுடன், வேலையின் மகத்துவத்தை மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டியிருந்தனர். இன்று இந்த எண்ணக்கரு மேலைத்தேய கலாசாரத்தின் ஒரு முக்கிய பண்பாக வளர்ச்சி அடைந்துள்ளமையை அவதானிக்கலாம். இத்துறவிகள் மந்தை மேய்த்தல், பால் கறத்தல், தேனீ வளர்த்தல், அறுவடை செய்தல், உழுதல், சூடடித்தல், பட்டறைகளில் வேலை செய்தல், கம்பளி நெசவு செய்தல், வைன் தயாரித்தல் போன்ற தொழில்களைச் செய்து தம் மடாலயங்களின் செல்வச் செழிப்பிற்கு உதவியதுடன், மற்றையோருக்கு நல்ல உதாரண புருடர்களாகவும் திகழ்ந்தனர். பெனடிக்ரைன் மடாலயத்தினர் ஐரோப்பாவில் விவசாய நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டதுடன், மாற்றுப் பயிர்ச்செய்கை போன்ற புதிய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்தியவர்களாக விளங்கினர். அத்துடன் பிற்பட்ட காலத்தில் பெருந்தோட்ட முகாமைத்துவத்திலும் சிறப்புப் பெற்றவர்களாக விளங்கினர்.

‘‘இருண்ட காலம்’’ என்று வர்ணிக்கப்படுகின்ற இக்காலப் பகுதியில் அறிவுத் துறையையும் இலக்கியத்தையும் பேணிப் பாதுகாத்தவர்களாக இம்மடாலயத்தவரே விளங்கினர். நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக லௌகீக உலகு இவற்றை மறந்திருந்த நேரத்தில் இம்மடாலயங்கள் ஆன்மீகத்தைப் பேணி வந்தன. புனிதர் பெனடிக்ற் பண்டைய இலக்கியங்களில் ஆர்வலராக இல்லாதபோதும் துறவிகள் தங்கள் வழிபாட்டை மேற்கொள்வதற்கு நன்கு படித்திருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவராக இருந்தார். அத்துடன் இளமையிலே

துறவு வாழ்க்கை மேற்கொள்பவர்கள் சிறிய அளவிலாவது மடாலயங்களில் கல்வி கற்க வேண்டியது அவசியமாயிருந்தது. அதனால் எழுத்து, வாசிப்பு என்பன அவசியமாக இவர்களுக்குத் தேவைப்பட்டது. இப் பின்னணியில் இத்துறவிகளில் சிலர் பண்டைய இலக்கியங்களில் ஈடுபாடு காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவ்வாறு சிறப்புப் பெற்ற மடாலயச் சிந்தனையாளராகக் கஸியோடோரஸ் (Cassiodorus – 477? – 570? A.D.) விளங்குகின்றார். புனிதர் ஒகஸ்ரினால் (St. Augustine) கவரப்பட்டவரான இவர் கிறிஸ்தவ வேதாகமமான பைபிளை ஒழுங்காக விளங்கிக் கொள்வதற்கு ஓரளவு அடிப்படையாகப் பண்டைய இலக்கிய அறிவு அவசியம் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். இவ்வகையில் துறவிகளுக்குப் பண்டைய இலக்கியம் கற்பிக்க வேண்டியது நியாயப்படுத்தப்பட்டது. மேலும், கஸியோடோரஸ் துறவிகள் கடுமையான வேலைகளை வயல்களில் செய்வதிலும் பார்க்கப் பண்டைய இலக்கியங்கள் மற்றும் பழைய ஏட்டுச் சுவடிகளைப் பிரதி பண்ணுதல் பொருத்தமான சரீர உழைப்பாகத் துறவிகளுக்கு அமையும் என்று தெரிவித்திருந்தார். இதனை ஏற்றுக் கொண்டதனைத் தொடர்ந்து பெனடிக்ரைன் மடாலயங்கள் பல நூற்றாண்டுகளாகப் போட்டியாளர்களே இல்லாத அறிவுத்துறை மையங்களாகப் பிரதி பண்ணும் நிலையங்களாக விளங்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டன. பிற்காலத்தில் ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களின் தோற்றத்திற்கும் நூல் நிலையங்களின் செயற்பாட்டிற்கும் இவ் வகையில் வழிவகுத்தவர்களாகப் பெனடிக்ரைன் மடாலயத் துறவிகள் விளங்கினர்.

## கிறிஸ்தவ மதமும் பெண்களும்

பெண்கள் பொறுத்துக் கிறிஸ்தவ மனப்பாங்கு கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் மாற்றம் பெறுகின்றதெனலாம். மற்றைய

மதங்களுடன் ஒப்பிடுகையில் கிறிஸ்தவமானது பெண்கள் பொறுத்துச் சாதகமான கருத்துக் கொண்டதாகவே விளங்குகின்றது. அம்மதம் கடவுளின் பார்வையில் பெண் ஆத்மாக்களும் ஆண் ஆத்மாக்களும் சமமாகவே கணிக்கப்படுகின்றன என்று குறிப்பிடுகின்றது. ஆரம்ப காலக் கிறிஸ்தவர்கள் ஏனைய பழைய மதங்களைப் போலவே பெண்களைத் தலைமைத்துவத்திலிருந்தும் கொள்கை வகுப்பதிலிருந்தும் விலக்கியே வைத்திருந்தனர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் துறவற இயக்கம் வளர்ச்சி பெற்றபோது பெண்கள் நிலைமை மேலும் மோசமாகியது. ஆரம்பகாலத் துறவிகள் பெண்களிடமிருந்து விலகியிருக்கும் நோக்குடன்தான் காடுகளுக்கும் வனாந்தரங்களுக்கும் துறவறம் மேற்கொண்டு சென்றதாக அறிகின்றோம். பொதுப்படக் கிறிஸ்தவமானது பூமியில் பெண்ணின் பிரதான நோக்கம் தாயாக விளங்குவதே என்ற பழைய கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

உரோமப் பேரரசுக்குள் இருந்து கிறிஸ்தவம் அப்பேரரசை வெற்றி கொண்டிருந்த அதே சமயம் பேரரசின் வெளியிலிருந்து இன்னொரு சக்தியான ஜேர்மானிய இனக் குழுக்கள் பேரரசை அச்சுறுத்திக் கொண்டிருந்தன. இதே காலப்பகுதியில்தான் மேலைத்தேச கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள் கடவுள், உலகு பற்றிய சிந்தனைப் போக்கை உருவாக்கிக் கொண்டிருந்தனர். இது அடுத்து வருகின்ற 800 ஆண்டுகளில் மேலைத்தேச கிறிஸ்தவச் சிந்தனைகளுக்கு வழிகாட்டியாக அமைந்ததெனலாம். மேற்கில் அரசியல் தளர்வு நிலைமை இறையியல் சிந்தனை வளர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாயிற்று. ஏறத்தாழ சமகாலப் பகுதியில் வாழ்ந்த முப்பெரும் சிந்தனையாளர்கள் இப்பணியினைச் செய்தனர் எனலாம். அவர்கள் புனிதர் ஜெரோம் (St. Jerome – 340? – 420 A.D.) புனிதர் அம்புறோஸ், (St. Ambrose 340? – 397 A.D.) புனிதர் ஒகஸ்ரின் (St. Augustine 354 – 430 A.D.) ஆவர்.

இவர்கள் மேலைத்தேச லத்தீன் திருச்சபையின் நாற்பெரும் குருமாருள் மூவராவர். மற்றவர் புனிதர் மகா கிரெகறி ஆவர்.

## புனிதர் ஜெரோம்

புனிதர் ஜெரோமின் பெரிய அளவிலான பங்களிப்பு ஹீப்ரு, கிரேக்க மொழிகளில் இருந்த பைபிளை லத்தீன் மொழிக்கு மொழிபெயர்த்தமையாகும். இது இடைக்காலம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட லத்தீன் பைபிளாக வழக்கத்தில் இருந்தது. சிறிய திருத்தங்களுடன் இது உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினால் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இக்காலப் பகுதியின் மிகச் சிறந்த எழுத்தாளராக விளங்கும் இவரின் படைப்பில் அடிக்கடி பேச்சுவழக்கிலான உரை நடையும் இடைக்கிடை மிகச் சிறந்த இலக்கிய நடையும் கலந்து காணப்படுகின்றது. இவர் கிறிஸ்தவ நோக்கங்களை மீறாத வகையில், பண்டைய இலக்கியங்களைக் கையாளலாம் என்ற கருத்தையும் கொண்டிருந்தார். அத்துடன் தீவிர துறவற அமைப்பை ஆதரித்தவராகவும் விளங்கினர்.

## புனிதர் அம்புறோஸ்

புனிதர் அம்புறோஸ் மிலான் நகரில் பேராயராகக் கடமையாற்றியவர். பாப்பாண்டவரிலும் பார்க்க மேற்கில் மிகச் செல்வாக்குப் பெற்ற திருச்சபை அதிகாரியாக விளங்கியவர். அவர் எழுதிய தத்துவ நூலான “On the Duties of Ministers” என்பது மரபு வழியான கிரேக்க, உரோம சிந்தனைகளில் இருந்து வேறுபட்டு நிற்கின்றது. புனிதர் அம்புறோசின் நடவடிக்கைகள் அரசியல் முக்கியத்துவமுடையது பேரரசன் தியோடோசியஸ் மேற்கொண்ட பெரிய அளவிலான அப்பாவி மக்களின் படுகொலைகளைக் கண்டித்தது முரண்பட்ட செயலாகும். பேரரசன் தெய்வீகக் கட்டளைகளை மீறி விட்டார்

என்றும் அதனால் திருச்சபையின் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கு உடன்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். இந்நிலையில் இறைமையுள்ள பேரரசன் அக்கோரிக்கைக்குச் சம்மதித்துத் தண்டனையை ஏற்றுக்கொண்டார். இது முதல் தடவையாகத் திருச்சபையின் ஒழுக்க விடயம் தொடர்பாக உரோமப் பேரரசின் இலௌகீக அதிகாரத்தைக் கண்டித்து, மேலாண்மை பெற்றதனைக் காட்டியது. இவ்வகையில் மேற்கில் திருச்சபை தன்னாதிக்கத்தையும் ஒழுக்க மேலாண்மையையும் பெற்று வளரக் கிழக்கின் திருச்சபை அவ்வாறு செயற்பட முடியாத நிலை காணப்பட்டது.

## புனிதர் ஒகஸ்ரின்

புனிதர் அம்புறோசின் மாணவரான புனிதர் ஒகஸ்ரின் அனைத்து இலத்தீன் குருமார்களிலும் பார்க்கச் சிறப்புடையவராக, இதுவரை வாழ்ந்த மிகவும் வல்லமை கொண்ட கிறிஸ்தவ புத்திஜீவிகளுள் ஒருவராகக் கருதப்படுகின்றார். இடைக்காலத் திருச்சபை மீதான புனிதர் ஒகஸ்ரினின் செல்வாக்குக் கணிப்பிட முடியாததாகும். இடைக் காலத்தின் பின்னரும்கூட அவரது இறையியல் கருத்துக்கள் புரட்டஸ்தாந்து மதத்தின் அபிவிருத்தியில் கணிசமான செல்வாக்கினைச் செலுத்தி உள்ளன. இருபதாம் நூற்றாண்டிலே பல பிரபல்யம் பெற்றுள்ள கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள் தங்களை நியோ – ஒகஸ்ரினியன்ஸ் (New – Augustinians) என்று அழைத்துக் கொள்வதிலிருந்து அவரது முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். இப்புலமை மிக்க கிறிஸ்தவ தத்துவஞானி தனது தத்துவங்களின் பெரும் பகுதியை நியோ – பிளாட்டோனிசத்திலிருந்து (New – Platonism) பெற்றவராகக் குறிப்பிடப்படுகின்றார். இவரது இறையியல் கருத்துக்கள் இறைவனின் வரம்பில்லா அதிகாரத்தையும் மனித குலத்தின் பாவச் செயல்களையும் சுற்றியே காணப்படுகின்றன. புனிதர்

ஒகஸ்ரின் தனது (City of God) என்ற பிரதான நூலில் இறையியல் பண்பு கொண்ட வரலாற்றுக்கான வரைவிலக்கணத்தைக் கொடுக்க முற்பட்டுள்ளார். இந்நூலில் முழு மனித குலமும் அதன் படைப்பிலிருந்து இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் நாள்வரை புவி நகரத்தவர் (City of Earth), கடவுள் நகரத்தவர் (City of God) என இரு சண்டையிடும் சமூகங்களாகச் செயற்படுகின்றனர் என்றும் இறுதித் தீர்ப்பு வழங்கும் நாளன்று முன்னவர் தண்டிக்கப்படப் பின்னவர் அழியாநிலை பெறுவர் என்றும் குறிப்பிடுகின்றார். இக்கருத்து இடைக்காலம் முழுவதும் கேள்விக்கிடமாக்கப்படாத நம்பிக்கையாகக் கிறிஸ்தவ இறையியலில் இருந்து வந்தது.

கிறிஸ்தவ இறையியலில் புதிய அம்சங்களை முதன் முதலாகப் புகுத்தியவாராகப் **புனிதர் ஒகஸ்ரின்** விளங்குகின்றார். பைபிளில் தான் கண்ட உண்மைகளை ஒன்றிணைத்துக் கொடுத்தவராக அவர் விளங்குகின்றார். பைபிளில் அனைத்து ஞானமும் இருப்பதாகவும் அவற்றை விளங்கிக் கொள்வதற்குக் குறிப்பிடத்தக்களவு கல்வி அறிவு அவசியமென்றும் அந்த நோக்குடன் பண்டைய கிரேக்க, உரோம அறிவுத்துறை பற்றிக் கற்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். பண்டைய உலகம் தாராளக் கலைகள் (Liberal Arts) என்ற ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்கியிருந்தது. அது உலகியல் வாழ்வில் வெற்றியையும் பகுத்தறிவு வளர்ச்சியையும் சுதந்திர மனிதன் பெறும் வகையில் அமைந்திருந்தது. இக்கல்வியின் அடிப்படைப் பண்புகளைக் கற்றுக்கொள்வதன் மூலம் பைபிளை நன்கு விளங்கிக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டு, இதுவரை புறக்கணிக்கப் பட்டு வந்த பண்டைய கிரேக்க, உரோம கலாசாரத்திற்குப் புத்துயிர் அளிக்க வழி கோலினார். தாராளக் கலைகள் என்ற கல்வித் திட்டம் அவர் காலத்தில் மதச் சார்பற்ற பாடசாலைகளிலேதான் போதிக்கப்பட்டு வந்தது. இவற்றில் கிறிஸ்தவ புத்திஜீவிகளையும் கற்க ஒகஸ்ரின்

அனுமதித்திருந்தார். இப்பாடசாலைகள் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைமைகளினால் அழிந்துபோன ஒரு கட்டத்தில் அப்பணியை மடாலயங்களும் கதீட்ரல்களும் மேற்கொண்டு கல்விச் செயற்பாட்டில் ஒரு தொடர்ச்சியைப் பேணுவதற்கு ஒகஸ்ரின் கொண்டிருந்த கொள்கை வழிவகுத்தது. இதனால்தான் அழியாதிருந்த பல பண்டைய கிரேக்க, உரோம அறிவுத்துறைப் படைப்புகள் மடாலயங்கள் கதீட்ரல்களில் பேணிப் பாதுகாக்கப்பட்டுப் பிற்கால உலகிற்குக் கிடைப்பதற்கு வழி வகுக்கப்பட்டது. இவ்வகையில் ஒகஸ்ரினின் நடவடிக்கைகள் ஒரு காலத்தில் புறக்கணிக்கப்பட்ட பண்டைய அறிவு கிறிஸ்தவ நிறுவனங்களாலே பாதுகாக்கப்பட்டுப் பிற்கால உலகிற்கு வழங்கப்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்ததுடன் அந்த அறிவை மேலும் வளர்ச்சிப்படுத்தவும் உதவியது.

## போதியஸ்

புனிதர் ஒகஸ்ரினைப் பின்பற்றியவர்களுள் மிகவும் செல்வாக்குப் பெற்றவர் கி.பி. 480 – 524 வரை வாழ்ந்த உரோம உயர் குடியினரான போதியஸ் (Boethius) ஆவார். இவர் பண்டைய தத்துவஞானத்தில் அளவிலாத ஈடுபாடு கொண்டவராகவும் கிறிஸ்தவ நோக்கங்களுக்காகப் பண்டைய அறிவு பயன்பட வேண்டும் என்பதில் ஒகஸ்ரினைப் போலவே நம்பிக்கை கொண்டவராகவும் விளங்குகின்றார். ஒகஸ்ரின் வாழ்ந்த காலத்திலும் பார்க்க ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னர் போதியஸ் வாழ்ந்தமையினால் பண்டைய உலகு ஒரு முடிவுக்கு வருவதனைத் தெளிவாகக் கண்டவராக விளங்கினார். பண்டைய கிரேக்க, உரோம உலகின் அறிவுத்துறைச் சாதனைகளை நன்கு விளங்கிக் கொண்ட போதியஸ் தனது முதற் கடமை அவற்றை அழியாமல் பாதுகாத்துக் கொள்வது எனக் கருதி அம்முயற்சியில் ஈடுபட்டார். அதனால் இவை தொடர்பான கைநூல்கள்,

மொழிபெயர்ப்புக்கள், உரைகள் போன்ற பல வடிவங்களில் எழுதிப் பிற்பட்ட உலகிற்கு வழங்கியுள்ளார். அக்காலத்தில் வழக்கில் இருந்த இலக்கணம், அணியிலக்கணம், தர்க்கம், எண்கணிதம், கேத்திர கணிதம், வானியல், சங்கீதம் ஆகிய தாராளக் கலைக்கல்வி அமைப்பை ஏற்றுக்கொண்டு எண்கணிதம், சங்கீதம் ஆகியவற்றில் கைநூல்களை எழுதியுள்ளார். அவர் தியோடொறிக் (Theodoric) மன்னனால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படாதிருந்தால், மற்றைய பாடங்களிலும் கைநூல்களை எழுதியிருப்பார். இச்சுருக்க நூல்களின் நோக்கம் கிறிஸ்தவர்களுக்குத் தேவைப்பட்ட அனைத்துப் பாடங்களின் அடிப்படை இயல்புகளை எடுத்துக் காட்டுவதாகும். அவரது ஈடுபாடு அதிகம் தர்க்கம் பொறுத்து இருந்தமையினால் மிகச் சிறப்புப்பெற்ற அரிஸ்டோட்டலின் சில தர்க்கக் கோட்பாடுகளைக் கிரேக்க மொழியிலிருந்து லத்தீன் மொழிக்கு மொழிபெயர்த்துள்ளார். அத்துடன் போர்பெறீ (Porphery) என்ற பண்டைய தத்துவஞானியின் தர்க்கம் பற்றிய அறிமுக நூலையும் மொழிபெயர்த்துள்ளார். போதியசின் சாதனைகள் கிரேக்க உலகிற்கும் இடைக்காலத்திற்குமான ஒரு இணைப்பை ஏற்படுத்துவதாகக் கொள்ளப்படுகின்றது. மேலும், லத்தீன் மொழியில் தர்க்க சொல் அகராதியைத் தொகுக்க உதவியவராகவும் விளங்கினார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் மேற்கில் தர்க்கவியல் மீளத் தழைத்தபோது போதியசின் அடிப்படையில் இருந்தே வளர்க்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

போதியஸின் தனிச்சிறப்புப் பெற்ற கிறிஸ்தவ இறையியல் நூல் "The Consolation of Philosophy" என்பதாகும். இந்த நூல் அவரின் இறுதிக் காலத்தில் இராஜதுரோகம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட வேளையில் எழுதியதனால் அவர் இந்நூலில் ஒரு இறையியல் வாதியிலும் பார்க்க ஒரு தத்துவஞானியாகவே தரிசனம் தருகின்றார். இந்நூல் இடைக்காலத்தில் எழுதப்பட்ட மிகப் பிரபல்யமான நூல்களுள்

ஒன்றாக வைத்து எண்ணத்தக்கது. மிகவும் நல்லமுறையில் எழுதப்பட்டதுடன், சில பண்டைய நாகரிகக் கருத்துக்கள் கிறிஸ்தவக் கருத்துக்களுடன் இசைவான வகையில் மிகப் பொருத்தப்பாட்டுடன் இணைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. நாம் இதுவரை பார்த்த கிறிஸ்தவச் சிந்தனையாளர் எந்தளவிற்குப் பண்டைய கிரேக்க, உரோம மரபுகளுடனான தொடர்ச்சியைக் கிறிஸ்தவ மரபுகளுடன் ஏற்படுத்திக்கொள்ள முயன்றனர் என்பதைப் பார்த்திருந்தோம். அவர்களுள் புனிதர் ஒகஸ்ரினிலும் பார்க்க ஒருபடி முன்னேறியவராகப் போதியஸ் சிறப்புப் பெறுகின்றார் எனலாம்.

உரோமப் பேரரசின் வீழ்ச்சியின் பின்பாக ஏற்படுத்தப்பட்ட ஜேர்மானிய இனக்குழு அரசுகளில் நிலைத்துநின்றதும் அதிகாரம் மிக்கதுமான அரசு பிராங்கியர்களினால் (Frank) ஏற்படுத்தப்பட்ட அரசாகும். பேரரசன் ஜஸ்ரினியன் (Justinian) ஆட்சிக் காலத்தில் இத்தாலியில் ஏற்பட்டிருந்த ஒஸ்ரோகொத்தின் (Ostro Gothic) அரசும் வட ஆபிரிக்காவில் ஏற்பட்டிருந்த வாண்டல் (Vandal) அரசும் அழிக்கப்பட்டன. இதற்குச் சிறிது பின்பாக (711) ஸ்பெயினில் ஏற்படுத்தப்பட்டு இருந்த விஸிகொதிக் (Vissigothic) அரசும் அராபியரினால் இல்லாதொழிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்கு ஐரோப்பாவில் நிலைத்திருந்த ஜேர்மானிய இனக்குழுவின் பிரதான அரசாகக் கோலில் (Gaul) அமைந்திருந்த பிராங்கியரின் அரசே காணப்பட்டது. இதற்கு ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பாகக் குளோவிஸ் (Clovis) என்ற தலைவனாலே பிரங்கிய அரசு உருவாக்கப்பட்டுத் தற்போதைய பிரான்ஸ், பெல்ஜியம் கைப்பற்றப்பட்டு கி.பி. 500 அளவில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்திற்கு வெற்றிகரமாக அங்கு வாழ்ந்த மக்கள் மாற்றப்பட்டிருந்தனர். குளோவிஸ் தனது முன்னோரின் பெயரான மொரேவெச் (Merovech) என்பதனை வைத்துத் தனது வம்சத்திற்கு மெரோவிங்கியன்

வம்சம் என்று பெயரிட்டிருந்தான். ஆனால், அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் அவர்களுடைய புதல்வர்களுக்கு இராச்சியத்தைப் பிரித்துக் கொடுக்கும் வழக்கம் இருந்தமையினால், அரசியல் அதிகாரத்துக்கான போட்டிகள் இடம்பெற்று, பிரதேசக் கைப்பற்றல்களுக்கு இலக்காகிப் பலவீனமுற்று, அவர்களின் பிரதம அமைச்சர்களாக இருந்த அரண்மனை ஆட்சியாளர்களிடம் (Mayors of Palace) இறுதியில் அதிகாரம் சென்றது. இக்காலப் பகுதி முழுவதும் ஐரோப்பாவின் வரலாற்றில் 'இருண்ட காலம்' என்று வர்ணிக்கப்படுகின்றது. வர்த்தகம் வீழ்ச்சியடைந்து, நகரங்கள் தளர்வுற்று, கல்வியறிவு பெருமளவுக்கு மறக்கப்பட்ட ஒரு காலமாக இப்பகுதி விளங்குகின்றது.

## பாப்பரசர் முதலாம் கிரெகறி

இக்காலப் பகுதியில்தான் கிறிஸ்தவத் திருச்சபை நிலைமைகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு வலுவான ஒரு அமைப்பாக மேலும் வளர்ச்சியடைந்தது. ஏற்கனவே இருந்த உரோமப் பாப்பரச முறைமையையும் பெனடிக்ரைன் மடாலய முறைமையையும் ஒன்றிணைத்துப் புதிய மேற்கு ஐரோப்பிய மதக் கொள்கை ஒன்று பாப்பரசர் முதலாம் கிரெகறி (Gregory the Great 590 – 604) என்பவரால் உருவாக்கப்பட்டது. இதுவரை காலமும் கொன்ஸ்தாந்திநோபிளில் இருந்த பேரரசர்களுக்கும் கீழ்ப்பட்டவராகவே பாப்பரசர் விளங்கி வந்தார். இச்சூழலில்தான் மகா கிரெகறி மேற்கத்தைய லத்தீன் திருச்சபையைக் கூடியளவு தன்னாதிக்கமுடைய அமைப்பாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். திருச்சபைக் குருமாரில் (Latin Fathers of the Church) நான்காவது குரவராகக் கொள்ளப்படும் மகா கிரெகறி தன் முன்னோர்களான ஜெரோம், அம்புறோஸ், குறிப்பாக ஒகஸ்ரின் ஆகியோரின் வேலைகளைத் தொடர்ந்து கிறிஸ்தவ

இறையியலின் தனித்துவமான பண்பினை உருவாக்கினார். அவர் புகுத்திய பண்புகள் கீழைக் கிறிஸ்தவத் திருச்சபைக்கும் மேலைக் கிறிஸ்தவத் திருச்சபைக்கும் இடையிலான இறையியல் வேறுபாட்டினைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவதாக அமைந்தது. (The Idea of Penance and the Concept of Purgatory) இறையியல் சம்பந்தமான வேலைகளைவிட அக்காலப் பேச்சுவழக்கினைக் கொண்ட, எளிதாக விளங்கக் கூடியவற்றின் உரைநடை வழிபாட்டு முறைகளை, கிரியைகளை (Cregorian Chant) எழுதியவர்களுள் ஆரம்பகர்த்தாவாக இவர் விளங்குகின்றார். இதன் பின்னரே உரோம கத்தோலிக்கக் கிரியைகளின் மத்திய பகுதி அபிவிருத்தி அடைந்தது. இப்புது நடவடிக்கைகள் மத அடிப்படையிலும் கலாசார அடிப்படையிலும் கிரேக்க வைதீகத் திருச்சபையிலும் பார்க்கக் கூடியளவு சுதந்திரமான ஒரு அமைப்பாக மேற்கின் இலத்தீன் கிறிஸ்தவத் திருச்சபையை வளர்ச்சிப்படுத்தின.

பெரிய கிரெகறி இறையியல் துறையில் சிறப்புப் பெற்றதனைப் போலவே சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். அவருடைய காலத்தில் இத்தாலியில் பாப்பரச முறைமைக்கு அச்சுறுத்தலாக வடக்கில் இருந்த லொம்பாடிய அரசு (Arian Heretics) காணப்பட்டது. இந்த அச்சுறுத்தலைச் சமாளித்துப் பாப்பரச முறைமையை மேலும் பல பிரதேசங்களில் வளர்ச்சிப்படுத்தியவராகவும் கிரெகறி காணப்பட்டார். சாக்ஷன் இங்கிலாந்தில் கிறிஸ்தவம் பரவவும் இங்கிலாந்துத் திருச்சபை உரோமத் திருச்சபையுடன் பூரணமாக இணைந்து செயற்படவும் அத்திவாரம் இட்டவராக அவர் உள்ளார். பெனடிக்ரைன் மடாலய முறைமையில் கொண்ட ஈடுபாட்டினாலும் அதற்களித்த ஆதரவினாலும் மேற்கில் பல நூற்றாண்டுகளாகச் சிறப்புப் பெற்ற மடாலய முறையாக அது விளங்கி வந்துள்ளது. பிராங்கிய அரசுக்கும் பாப்பரச முறைமைக்கும் இடையிலான நல்லுறவு, இணைப்பு

ஏற்படுவதற்கு அத்திவாரம் இட்டவராகவும் கிரெகறி விளங்கியதுடன், லத்தீன் கிறிஸ்தவத் திருச்சபை மேலாதிக்கம், தனித்துவம் கொண்ட நிறுவனமாக மாற்றுவதற்குப் பெரிதும் அவர் பங்களிப்புச் செய்துள்ளார். அத்துடன் பிராங்கியர் வரலாற்றைக் கூறும் History of Franks என்ற வரலாற்று நூலை எழுதியவராகவும் சிறப்புப் பெறுகின்றார்.

முற்பட்ட இடைக்காலத்தில் ஏற்பட்டிருந்த குழப்பமான சூழ்நிலையில் கிறிஸ்தவ அமைப்புக்களே அறிவுத்துறையை அணையாது பேணிப் பாதுகாத்தன எனலாம். இக்கால அறிவுத்துறைச் சாதனைகள் முன்னர் போலப் புதியனவாக இல்லாவிடினும் அத்துறை சார்ந்த அபிவிருத்திகளை ஈட்டியவர்களாகத் திருச்சபைக் குருமாரே விளங்குகின்றனர். கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு முரணாகாத வகையில் அப்பணியை இவர்கள் திறம்பட ஆற்றியுள்ளனர். போதியஸ், கஸியோடொறாஸ், ஒகஸ்ரின், கிரெகறி Ecelesiastical History of the English People என்ற நூலை எழுதிய பிஷப் பேடே (Bede – 735), ஸ்பெயினில் வாழ்ந்த Etymologies எழுதிய பிஷப் இஸிதோர் (Isdore – 636) எல்லோரும் திருச்சபையைச் சார்ந்த குருமாரே. இவ்வகையில் இக்காலத்தில் அறிவுச்சுடரை அணையாது பாதுகாத்துப் பிற்பட்ட உலகிற்கு வழங்கியவர்களாகக் கிறிஸ்தவக் குருமார் சிறப்பைப் பெறுகின்றனர்.

பிராங்கிய அரசுக்கும் கிறிஸ்தவத் திருச்சபைக்கும் இடையிலான தொடர்புகள் பிராங்கிய அரசு வலுப்பெற்றதனைத் தொடர்ந்து மேலும் இறுக்கமாயின. கி.பி. 687இல் அரண்மனை ஆட்சியாளனான பெப்பின் (Pepin) தற்போதைய றைன் நதிப் பிரதேசம், பெல்ஜியத்தில் வலுவான ஆட்சியை நிலைநாட்டியிருந்தான். அவனது மகனான சார்ள்ஸ்

மாட்டெல் Charles Martel ஸ்பெயினிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இஸ்லாமியப் படையெடுப்பை 732இல் Poitiersஐ முறியடித்து, ஐரோப்பாவில் இஸ்லாமிய ஆதிக்கம் பரவாமல் தடுத்து நிறுத்தினான். தனதாட்சியின் இறுதியில் கிறிஸ்தவத் திருச்சபை உடனான உறவினை வலுப்படுத்தி, ஜேர்மானியப் பிரதேசத்திலும் கிறிஸ்தவ மதத்தையும் தனது ஆதிக்கத்தையும் பரப்பிக் கொண்டார். முக்கியமாகப் புனிதர் பொனிபேசும் (St. Boniface) அவர் சார்ந்திருந்த பெனடிக்ரைன் கோட்பாடுகளும் சார்ள்சின் ஆட்சிப் பரப்பில் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தின. சாள்ஸ் மாட்டெலின் மகனான சிறிய பெப்பின் (Pepin the Short) அரச அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காகத் திருச்சபையின் ஆதரவை வேண்டியிருந்தார். இவ்வேண்டுகோளைப் புனிதர் பொனிபேஸ் தந்தையாரின் கொள்கை ஜேர்மானியப் பிரதேசத்தில் தொடர்ந்தும் பின்பற்றப்படுவதற்காக ஏற்றுக்கொண்டார். பொனிபேஸ் உரோமிலிருந்த பாப்பரச முறைமையுடன் சாக்ஸன் இங்கிலாந்தில் மேற்கொண்ட மிஷனரிப் பணிகளினால் மிக நல்ல உறவினைக் கொண்டிருந்தார். இதே காலப்பகுதியில் பாப்பரசருக்கும் பைசாந்தியப் பேரரசருக்கும் இடையில் விக்கிரக வழிபாடு பொறுத்துத் தீவிரக் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. இந் நிலையில் லொம்பாடிய எதிர்ப்பைச் சமாளிக்கவும் பைசாந்திய மேலாதிக்கத்தில் இருந்து விடுபடவும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் கிறிஸ்தவத் திருச்சபை முற்பட்டது. இவற்றின் விளைவாக கி.பி. 751இல் பாப்பரசரின் பிரதிநிதியாகப் புனிதர் பொனிபேஸ் சிறிய பெப்பினுக்குத் அரசுரிமை அளித்ததுடன், கிறிஸ்தவத் திருச்சபையின் ஆன்மீக ஆதரவும் வழங்கப்பட்டது. இது நடைபெற்றுச் சிறிது காலத்தில் பெப்பின் லொம்பாடியர்களை வென்று பாப்பரசருக்குத் தனது நன்றிக் கடனைத் தெரிவித்துக் கொண்டார். இப்போது மேற்குலகுப் பிராங்கிய அரசு, லத்தீன் திருச்சபை அடிப்படையில் தனது சொந்த ஒற்றுமையை அடைந்துகொண்டது.

இந்த ஒற்றுமையின் உச்சக்கட்டம் பெப்பின் மகனான Carolus Magnus, சார்ளிமேன் (Charlemagne 768 – 814), கரோலிஞ்சியன் (Carolingian) வம்சத்தைத் தாபித்ததிலிருந்து இடம்பெறுகின்றது. சார்ளிமேன் இடைக்கால உலகில் ஆட்சி புரிந்த மிகப் பிரபல்யமான ஆட்சியாளன் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. உரோமப் பேரரசின் வீழ்ச்சியின் பின்பாக ஐரோப்பாவில் பரந்தொரு இராச்சியத்தை ஏற்படுத்தியவராக அவர் விளங்குகின்றார். மிகச் சிறந்த நிர்வாகியாக விளங்கிய அவர் காலத்தில் ‘‘கரோலிஞ்சிய மறுமலர்ச்சி’’ என்று குறிப்பிடும் அளவிற்கு அறிவுத்துறையில் புத்துயிர்ப்பு ஏற்பட்டது. இவற்றைவிடக் கிறிஸ்தவ மதத்தையும் திருச்சபையையும் பொறுத்து மிக முக்கியமான நிகழ்ச்சி சார்ளிமேனின் ஆட்சியில் இடம்பெற்றது. அந்த நிகழ்வுதான் கி.பி. 800ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று பாப்பரசர் மூன்றாம் லியோ (Leo III) வால் சார்ளிமேன் உரோமப் பேரரசனாக முடி சூட்டப்பட்டமையாகும். இச்சம்பவம் மத ரீதியாகவும் அடையாள ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளதுடன் பின்னாளில் ‘பரிசுத்த உரோமப் பேரரசு’ (Holy Roman Empire) என்பதன் ஆரம்பத்தைக் குறிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் முடி சூட்டு வைபவம் நிகழ்ந்த ஆண்டு வரை கொன்ஸ்தாந்திநோபிளில் இருந்து ஆட்சி புரிந்த பேரரசனே உரோமப் பேரரசின் வாரிசாக (Augustus) மேற்கில் அதிகாரம் எதுவும் இல்லாதபோதும் அரசனாகக் கருதப்பட்டு வந்தான். மேற்கில் எவரையாவது பேரரசன் என்று அழைப்பதற்குக்கூட இவர்கள் எதிர்த்திருந்தனர். ஆனால், இச்சம்பவம் மேலை உலகின் சுதந்திரத்தையும் சுய உறுதிப்பாட்டையும் பிரகடனம் செய்வதாக அமைந்தது. சார்ளிமேனின் பரந்த விவசாயச் செழிப்புப் பெற்ற ஆட்சிப் பரப்பையும் மேலைக் கிறிஸ்தவத்தையும் லத்தீன் மொழி மரபுகளையும் அடிப்படையாகக்கொண்ட தனித்துவமான கலாசாரத்தையும்

கொண்டதாக இப்பேரரசு பெருமளவுக்கு நியாயப்படுத்தப்பட்டது.

சார்ளிமேனின் மரணத்தின் பின்பாகக் கரோலிஞ்சியப் பேரரசு விரைவிலேயே வீழ்ச்சி கண்டது. சார்ளிமேனின் பின் அவன் மகனான பக்திமான் லூயி (Loius of Pious) தனது மூன்று புதல்வர்களுக்கிடையில் இராச்சியத்தைப் பிரித்துக் கொடுத்தார். இதனைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் ஆரம்பமாகிக் குடும்பச் சண்டைகளாக மாறிப் பேரரசு பலவீனப்பட்ட நிலையில் மீண்டும் ஒரு முறையாக ஐரோப்பாவில் அந்நியர் படையெடுப்புக்கள் பல திசைகளில் இருந்து ஏற்பட்டன. வடக்கிலிருந்து விக்கிங்குகளும் (Vikings) கிழக்கிலிருந்து மகியர்களும் (Magyars) தெற்கிலிருந்து கடல் வழியாக முஸ்லிம்களும் படையெடுப்புக்களை மேற்கொண்டு மேற்கு ஐரோப்பாவில் ஏற்படுத்தப்பட்ட புகழ் பெற்ற அரசு சிதறிப் போகக் காலாயினர். இதனைத் தொடர்ந்து பத்தாம் நூற்றாண்டில் புதிய ஐரோப்பாவிற்கான அரசியல் புறவுருவப் படம் உருவாகியது.

## சுருக்கம்

1. இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் கிறிஸ்தவ மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் அறிந்துகொள்ளப்படும்.

2. கிறிஸ்தவ நிறுவனங்கள் இறையியல் வளர்ச்சிக்குப் பங்காற்றிய முறைகள்.

3. கிறிஸ்தவ மதம் அரச மதமாதல் மற்றும் புனித உரோமானியப் பேரரசு கிழக்கிலும் மேற்கிலும் உருவாகிப் பல அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

## திறவுச் சொற்கள்

கிறிஸ்தவம், கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா, புனித உரோமானியப் பேரரசு, மடாலயங்கள், கரோலிஞ்சியப் பேரரசு

## உசாத்துணை நூல்கள்

பேர்டினன்ட் ஷெபீல், (1966), **ஐரோப்பிய வரலாறு**, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

Dharmaraj, J., (2002), **History of Europe (476 – 1453)**, Tensy Publications, Sivakasi.

## பயிற்சி வினாக்கள்

1. இடைக்கால ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சி பற்றி விளக்குக.

2. கிறிஸ்தவ மதத்திற்கும் உரோமப் பேரரசிற்கும் இடையிலான தொடர்புகளை விபரிக்குக.

3. மடாலயங்களின் செயற்பாடுகள் பற்றி ஆராய்க.

4. பின்வருவோரில் இருவரைப் பற்றிக் குறிப்பெழுதுக.
   (a) இயேசுகிறிஸ்து
   (b) புனிதர் அம்புறோஸ்
   (c) புனிதர் ஒகஸ்டின்
   (d) போதியஸ்
   (e) பாப்பரசர் 1ஆம் கிரெகறி

# அத்தியாயம் – 6

# வர்த்தகம், நகரங்கள் நகரமயமாதல்

## பொருளடக்கம்

6.1. அறிமுகம்
6.2. கி.பி. 1000இன் பின்னர் பட்டினங்கள் பெருகுதல்
6.3. மத்தியகால நாகரிகத்தைப் பட்டினங்கள் உச்ச நிலைக்கு உயர்த்தின
6.4. பட்டினங்கள் சுய ஆட்சியை வளர்த்தன
6.5. பட்டினங்களின் புதிய நடவடிக்கைகள் விரிவான அனுபவத்தைக் காட்டிற்று
6.6. பட்டின இயக்கத்தால் அனுபவங்கள் மாறுதல்
6.7. தனிக் கிறிஸ்தவக் குடும்பமென்ற ஐரோப்பியச் சமுதாயம் பல தனித் தேசங்களை உடையதாயிருந்தது
6.8. பட்டினவாசிகளே தேசியத்தைப் பரப்பினர்

## அத்தியாயச் சுருக்கம்

இடைக்கால ஐரோப்பாவில் முதல் ஐந்து நூற்றாண்டுகளாக நிலமானியமுறைச் சமுதாயம் காணப்பட்டது. கி.பி. 1000 ஆண்டளவில் கைத்தொழிலும் பல்வேறு வர்த்தகத் தொடர்புகள் காரணமாகவும் நகரங்கள் உருவாகின. இவை சமூகப் பண்பாடுகளை மேம்படுத்தி நகரங்கள் அரசியலில் சுயாட்சியை வளர்த்தன. பின்னர் நகரவாசிகளே தேசியம் என்ற எண்ணக்கருவை வளர்த்தனர்.

## அத்தியாயத்தின் நோக்கம்

மத்திய கால ஐரோப்பாவில் மானிய முறைமை வீழ்ச்சியடைந்தபின் கைத்தொழில் வளர்ச்சியும் வியாபாரமும் சிறப்பாக முன்னெடுக்கப்

பட்டபோது மக்கள் சங்கமாகக் கூடித் தமது வசதிக்கேற்ப வியாபாரங்களைச் செய்து வாழ்க்கைத் தரத்தை அதிகரித்துக் கொண்டனர். பின்னர் இவ்வாறான சுதந்திரமான நகரங்கள் தோன்றின. இதன்மூலம் வர்த்தகத்தின் முக்கியத்துவத்தையும் நகரங்களின் வளர்ச்சியையும் மக்களின் மனோபாவத்தையும் அறியக் கூடியதாக இருந்தது.

## கற்றல் பெறுபேறுகள்

இவ் அத்தியாயத்தைப் பொறுத்தவரையில் மாணவர் பலவிதமான நகர மக்களின் முன்னேற்றத்தைப் பற்றியும் அவர்களின் மற்றைய நாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகள் பற்றியும் பின்னர் சமாதானத்தை நிலைநாட்டியது பற்றியும் அறியக் கூடியதாகவுள்ளது.

## 6.1. அறிமுகம்

மத்தியகாலத்து முதல் ஐந்து நூற்றாண்டுகளிலே மேற்கு ஐரோப்பாவில் சேவைமானிய முறை என்ற சீரற்ற சமூக அமைப்பு இருந்து வந்தது. கி.பி. 1000 வரையில் புதிய ஓர் அமிசம் உருவாயிற்று. அது சேவைமானிய அமைப்பையும் திருச்சபைத் தாபனத்தையும் ஒரு சேரப் பாதித்தது. இதுவே பட்டினங்களின் தோற்றமாகும். வியாபாரமும் கைத்தொழிலும் உண்டாகவே பட்டினங்களில் உள்ள மக்கள் ஒரு சங்கமாகக் கூடித் தமது வாழ்க்கை முறைக்கு அவசியமான வசதிகளை உண்டாக்கி அவற்றைப் பெருக்கவும் வியாபாரிகளுக்கு மாறாக நிலத்தின் சொந்தக்காரராகத் தம்மைத் தாபித்துக்கொண்ட பிரபுக்களின் ஆதிக்கத்திலிருந்து தம்மைத் தம்மாலான எல்லாப் பலத்தையும் கொண்டு விடுவிக்க முயலவும் முயற்சி செய்தனர். பிரபுக்களென்ற இராணுவ வகுப்பாரின் கொடுங்கோன்மையிலிருந்து தம்மை விடுவிக்க அவர்கள் ஆனமட்டும் முயன்றனர்.

## 6.2. கி.பி. 1000இன் பின்னர் நகரங்கள் பெருகுதல்

உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐரோப்பா முழுவதும் நகரங்கள் தோன்ற ஆரம்பித்தன. விவசாயம் படிப்படியாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தன. பாரிஸ், மார்செயில்ஸ், டுவர்ஸ், நேப்பிள்ஸ் புளோரன்ஸ், இலண்டன், வின்செஸ்ரர் போன்ற நகரங்கள் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்தன. இங்கும் அங்குமாகச் சிதறிக்கிடந்த கோட்டைகளிலே வசித்துவந்த பிரபுக்கள், தம்மை அறியாமலே தம்மிலும் பார்க்கச் செல்வம், பண்பாடு, இராணுவப் பலம் என்பவற்றால் சிறந்து வரும் ஒரு நகர வகுப்பினர் உருவாகி வருவதை அறிந்தனர். இந்த நிகழ்ச்சியைக் கண்ட நிலமானிய முறையிலமைந்த இராணுவத் தலைவர் உடனடியாக மறைந்து போகவில்லை. மற்றவர் காணும்வகையில் தமது ஆதிக்கத்தைக் குறைத்துக் கொள்ளவுமில்லை. பொருளாதாரத்திலும் அரசியலிலும் அவர்கள் செல்வாக்கை இழந்தனர். நகர வாசிகள் தமது நகரைப் பாதுகாத்தனர். அவர்கள் தமது வளத்தையும் அறிவையும் படிப்படியாகப் பெருக்கிக் கொண்டனர்.

## 6.3. மத்தியகால நாகரிகத்தைப் நகரங்கள் உச்ச நிலைக்கு உயர்த்தின

நகரங்கள் பெருகின. புதிய புதிய நடவடிக்கைகளிலே நகரவாசிகள் ஈடுபட்டனர். அதனால் பன்னிரண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுகளிலே மத்தியகாலச் சமூகப் பண்பாடு உச்சநிலை அடைந்தது. கலையும் வாழ்க்கை முறைகளும் இக்காலத்திலே ஓர் இணைப்பைப் பெற்றனவென்றும் இத்தகையதொரு பண்பு சரித்திரத்தில் மனிதனால் மிக அருமையாகவே உருவாக்கப்படுகிறது என்றும் இக்கால ஆராய்ச்சியாளர் பலர், விசேடமாகத் தத்துவ அறிஞர்களும் கலாவிற்பன்னர்களும் கருதுகிறார்கள். நகரங்கள் வளர்ச்சியுற்ற முதற் கட்டத்திலே மத்தியகாலப்

பண்பாடு எவ்வளவு சிறப்பாக மலர்ச்சியுற்றதென்பதை இங்கு ஆராய வேண்டியதில்லை. நமது நோக்கம் மத்தியகாலப் பின்னணியில் உள்ள அமைப்புக்குள்ளே இந்த நகரங்கள் அரசியல் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் எவ்வளவு பங்கு பெற்றன என்பதைக் குறிப்பிடுவதே.

## 6.4. நகரங்கள் சுய ஆட்சியை வளர்த்தன

முதலில் அரசியல் பங்கை ஆராய்வோம். நிலமானிய முறை நகர ஆட்சிக்கு மாறாயிருந்ததனாலும் நகர வாழ்க்கைக்கு ஆபத்தை உண்டாக்கி வந்ததாலும் நகரங்கள் தன்னாட்சி முறையொன்றை உருவாக்கின. எங்கெங்கே நகரங்கள் உருவாயிற்றோ அங்கெல்லாம் தன்னாட்சி முறையும் உருவாயிற்று. பிரபுக்களிடமிருந்து உரிமைச் சாசனங்களை அவை வலிந்து பெற்றுக்கொண்டன. இதன் பயனாக முன்னராகப் பெறக்கூடிய சுதந்திரங்களைப் பெற்றன. பின்னர் சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் இவ்வாறு பெற்ற உரிமைகளை விஸ்தரித்துக் கொண்டன. விசேடமாக இத்தாலி, ஜெர்மன் ஆகிய நகரங்கள் தனிப்பட்ட குடியாட்சி முறையை உள்வாங்கின. எந்த நிலமானிய அமைப்புக்குள் இருந்து அவை தோன்றினவோ அவற்றின் செல்வாக்கிலிருந்து முற்றாய் விடுபட்டன. இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளிலே தோன்றிய நகரங்கள் அறிந்தும் அறியாமலும் அரசனுடைய அதிகாரத்தைக் கட்டியெழுப்பத் துணையாயின. தமது சுபீட்சத்துக்கு அனுகூலமான சமாதனத்தை அரசனே கொடுக்கக் கூடியவனாக இருந்தபடியால் அவனுக்கு இவை ஆதரவளித்தன. கலகம் விளைவித்து, யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டே இருந்த பிரபுக்களால் இந்தச் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது இருந்தது.

நிலமானிய முறை ஆட்சியைப் படிப்படியாக நீக்கி அரசுக்குட்பட்ட ஆட்சியொன்றை நிறுவுவதில் நகரங்கள்

பெரிதும் உதவி புரிந்தன. நிலப்பிரபுக்களைப் போலவே நகரவாசிகளும் தமது சுயநல விடயங்களைக் கருத்திலே கொண்டபோதிலும் தமது உடனடித் தேவைகளுக்கு அப்பாற்பட்ட பலனை அவர்கள் பெறக் கூடியதாக இருந்தது. ஏனெனில், நடைமுறையிலிருந்த அநாகரிகமான நிலமானிய முறைக்குப் பதிலாக உறுதியுள்ளதொரு அரசாங்கத்தை அமைப்பதற்கேற்ற பொருளாதார, சமூகச் சக்திகளின் பிரதிநிதிகளாக அவர்கள் இருந்தமையே இதற்குக் காரணமாகும். இவ்வாறான ஆட்சி மாற்றம், மத்தியமயமான முடியாட்சி என்ற உருவத்தை எடுத்தது. இது புரட்சிகரமானதொரு தாபனம். இதற்கு முக்கிய காரணமாக இருந்தவை பட்டினங்களே.

## 6.5. நகரங்களின் புதிய நடவடிக்கைகள் விரிவான அனுபவத்தைக் காட்டிற்று

நகரங்கள் பண்பாட்டுத் துறையிலும் நல்ல பங்கை வழங்கின. பட்டின எல்லைக்குள்ளே குறுகிய இடத்திலே மதில்களுக்குள் அடங்கி வாழ்ந்தபடியால் பெருந்தொகையான மக்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கிய உறவுகொண்டு வாழ வேண்டி நேரிட்டன. அதனால் அவர்கள் தத்தம் சுயநலம் காரணமாக ஒருவரோடொருவர் முரண்பட்டும் பொது நன்மைக்காக ஒருவரோடொருவர் இணைந்தும் வாழ வேண்டியிருந்தது. மேலும், புதிய புதிய நிலைமைகளுக்கேற்ற நடவடிக்கைகளை ஆலோசித்து எடுக்கவேண்டி இருந்ததால் அவர்களுடைய அறிவும் கூர்மை பெற்றது. சில நகரவாசிகள் வியாபாரத்தில் ஈடுபட்டனர். அதன் பயனாக அயற் நகரங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று செல்வத்தையும் அனுபவத்தையும் பெற்றார்கள். சீலை நெசவு செய்தோரும் தோல் பதனிட்டோரும் ஆயுதங்களைச் செய்தோரும் திருத்தமான விளை பொருட்களை உற்பத்தி செய்து கௌரவமும் அதிகாரமும் பெற்றனர்.

## 6.6. நகர இயக்கத்தினால் மனோபாவம் மாறுதல்

நகரவாசிகளுடைய வாழ்க்கை பரீட்சார்த்தமானது. மேலும், அவர்கள் செய்த கடும் வேலைக்கு நல்ல செல்வம் கிடைத்தது. அரசியல், பொருளாதாரம் என்ற விடயங்களிலேயும் அறிவுத் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் பழைய வழக்கங்களை மீறிப் புதிய முறைகளைக் காணக்கூடியதாக இருந்தது. இ∴து இவ்வாறு செல்லாமல் வேறு வகையில் செல்வதற்கு இடமேயில்லை. செல்வம் தேடவும் பிழைப்புக்கு வழி தேடவும் சுதந்திரமாகப் புதிய முறைகளைப் பயன்படுத்தியவர்கள் தத்துவம், சாத்திரம், சமயம் என்ற துறைகளிலும் அதே புதிய முறைகளைப் பயன்படுத்தியமை வியப்பன்று. மனிதன் தனது நெருக்கடியான அனுபவங்களையும் பிரச்சினைகளையும் உணர்ச்சி வகையிலும் அறிவு வகையிலும் வெளிப்படுத்துவதே தத்துவ சாத்திரமும் சமயமுமாகும். நகரங்கள் தோன்றுவதற்கு முன்னால் நிலைபேறானதொரு விவசாயச் சமுதாயமும் இருந்து வந்தது. அது தன்னுடைய போக்குக்கேற்றவாறு ஒரு தத்துவத்தையும் சமயத்தையும் உருவாக்கியிருக்கும். அது போலவே வியாபாரத்தை அடிப்படையாகக்கொண்ட சலனமுள்ள நகர சமூகம் தனது முன்னோர்களிடமிருந்து வந்த பழக்க வழக்கங்களைக் கண்டிப்பாக ஆராய்வதோடு, தனக்குச் சொந்தமானதொரு இலட்சியத்தையும் உருவாக்கியிருக்கும். இத்தகையதொரு நிலையிலே பண்பாட்டுத் துறையில் ஒரு கலப்பு உருவாகும் தன்மை காணப்பட்டது. பிற்காலத்தில் அது மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.

## 6.7. தனிக் கிறிஸ்தவக் குடும்பமென்ற ஐரோப்பியச் சமுதாயம் பல தனித் தேசங்களை உடையதாயிருந்தது

மத்திய காலத்து ஐரோப்பாவின் சிறப்பான அம்சங்களைத் தொகுத்துக் கூறிய இந்தப் பட்டியலில் நகரங்களின் எழுச்சிக்கு முந்திய ஒரு வளர்ச்சியைக் குறிப்பிட வேண்டும். ஐரோப்பா சமய வகையிலும் திருச்சபை முறையிலும் ஒரே அலகாயிருந்த போதிலும் அது பல இன மக்களை உள்ளடக்கியிருந்தது. இவர்கள் தமது முன்னோர்கள் பிற்பற்றிய பண்பாட்டைக் கைவிட விரும்பவில்லை. மேலும், தமது மொழியைக் கைவிட விரும்பாது இருந்தனர். சமயத் துறையில் ஐரோப்பா ஒன்றுபட்டிருந்தாலும் சுதந்திரமாகச் செல்ல விரும்பிய பல இனங்களையுடையதாக இருந்தது. இன்று நாம் தேசிய இனம் என்று கூறுவது போன்ற இனம் அக்காலத்திலே இல்லாதிருந்த போதிலும் இன்றைய தேசிய இனம் அக்காலத்திலே தான் உருவானதென்று கூறலாம். ஒற்றுமையான கிறிஸ்தவ சமூகத்தில் இத்தாலியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், ஜெர்மானியர் முதலிய தேசிய இனங்கள் காணப்பட்டன.

## 6.8. நகரவாசிகளே தேசியத்தைப் பரப்பினர்

மத்திய காலத்திலே தேசிய இனம் உருவாகி வந்தபோதிலும் தேசியம் என்ற வெறி அப்போது உண்டாகவில்லை. அதற்கு அனுசரணையான போட்டியும் தோன்றவில்லை. கிறிஸ்தவ அடிப்படையிலே சர்வதேச ரீதியில் உள்ள திருச்சபையோ, இராணுவத்தைச் சேர்ந்த ஒரு ஆட்சி வகுப்பை உயர்த்திக் காட்டிய நிலமானிய முறையோ தேசிய இனத்தோடு உடனடியான தொடர்பைப் பெறவில்லை. குருமாரும் பிரபுக்களும் தேசியத்துக்கு மாறானவராக இருந்தனர். இவர்கள் சலுகை பெற்ற உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களாய்

பாட்டாளி மக்களைச் சுரண்டி வாழ்பவராக இருந்தபடியால் பாட்டாளி மக்களிலும் பார்க்க உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டனர். ஆனால், நகரவாசிகளின் நிலை அ∴தன்று. இவர்கள் சாதாரண மக்களிடையில் இருந்தே தோன்றியவர்கள். எனவே, தேசிய இனத்துக்கு அடிப்படை இங்கேதான் காணவேண்டும். நாளடைவிலே நகரங்கள் தேசிய உணர்ச்சியை உருவாக்கின. நகரங்களின் எழுச்சியோடு ஐரோப்பியத் தேசிய இனங்கள் திட்டமான ஒரு பண்பைப் பெற்றன. மத்தியகால இறுதியில் ஐரோப்பிய அரங்கிலே முக்கியமான இடத்தை வகித்தன.

## சுருக்கம்

இவ் அத்தியாயத்தில் பல்வேறு நகரங்கள் எவ்வாறு கீழைத்தேய வர்த்தகத்தின்மூலம் உருவாகின என்பதையும் மானிய முறை வீழ்ச்சியடைந்தது பற்றியும் அறியக்கூடியதாக உள்ளது. மத்தியகால நாகரிகத்தையும் சுயாட்சி முறையையும் தேசியத்தையும் நகரங்கள் உருவாக்கின என்பதை அறியலாம்.

## திறவுச் சொற்கள்

வர்த்தகம், மானியமுறை, பிரபுக்கள், நகர வகுப்பினர், சமூகப் பண்பாடு, தன்னாட்சி முறை

## உசாத்துணை நூல்கள்

பேடினன்ட் ஷெபீல், (1972), **ஐரோப்பிய வரலாறு**, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை.

Rao, B.V., (2014), **World History from Early Times to A.D. 2011**, Sterling Publishers, New Delhi.

## பயிற்சி வினாக்கள்

1. கி.பி. 1000 ஆண்டளவில் நகரங்கள் உருவாகிய தன்மைகளை விளக்குக.

2. ''நகரமயமாக்கலின் மூலம் பட்டினவாசிகளின் மனோபாவம் மாறுதல் அடைந்தது'' இக்கூற்றை ஆராய்க.

3. நகரங்கள் சுயாட்சித் தன்மையை உருவாக்கிய முறையை எழுதுக.

# அத்தியாயம் – 7

# ஐரோப்பாவில் நிலமானிய முறை

## பொருளடக்கம்

7.1. அறிமுகம்
7.2. நிலமானியச் சமுதாயம்
7.3. நிலமானியப் பொருளாதாரம்
7.4. நிலமானிய அரசியல்
7.5. நிலமானிய முறையின் வீழ்ச்சி

## அத்தியாயச் சுருக்கம்

மானியமுறை அல்லது நிலமானியச் சமுதாயம் என்பது இடைக்கால ஐரோப்பாவின் முக்கிய பண்பாகும். இது மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் கரோலிஞ்சியப் பேரரசின் தளரச்சியுடன் சட்டம், ஒழுங்கு என்பன வீழ்ச்சியடைந்ததுடன் அராஜகம் தலைதூக்கியது. ஆகவே, சமூகத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பு முறை தோற்றம் பெற்றது. இச்சமுதாய முறை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் தோன்றி 10ஆம், 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் உச்ச நிலையையடைந்து 13ஆம் நூற்றாண்டுகளில் வீழ்ச்சியடைந்தது. பின்பு நிலமானிய முறை, நகரங்களின் தோற்றத்துடனும் பணப்புழக்கங்களின் ஆரம்பத்துடனும் சீர்குலைந்தது.

## அத்தியாயத்தின் நோக்கம்

மத்திய ஐரோப்பாவில் கிட்டத்தட்ட ஐந்து நூற்றாண்டுகளாக நிலவிய சமூக, அரசியல் நிலைமைகளே இங்கு தரப்பட்டுள்ளன. இவைகளின் அடிப்படைத் தன்மைகளை அறிந்துகொள்வதே இவ் அத்தியாயத்தின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறுகள்

மாணவர்கள் இவ் அத்தியாயத்தினைக் கற்கும்போது இடைக்கால ஐரோப்பாவில் நிலவிய நிலமானியச் சமுதாயக் கட்டமைப்பைப் பற்றியும் அங்கு காணப்பட்ட பிரபுக்களின் நிலங்களில் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து பல துன்பங்களை அடைந்தனர் என்பதையும் பிரபுக்கள் இந்நிலம் தொடர்பில் முக்கிய பங்களிப்புகளைச் செய்தார்கள் என்பதையும் அறியக் கூடியதாக இருக்கும்.

## 7.1. அறிமுகம்

மானியமுறை அல்லது மானியமுறைச் சமுதாயம் என்பது மேற்கு ஐரோப்பாவிலே கரோலிஞ்சியப் பேரரசின் தளர்வுடன் உருவாகிய ஒரு அரசியல், சமூக அமைப்பாகும். இது ஒன்பதாம் நூற்றாண்டளவிலே தோன்றி, பத்தாம், பதினொன்றாம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலே உச்ச நிலையை அடைந்து பதின்மூன்றாம் நூற்றாண்டிலே முடியரசுகளின் எழுச்சியோடு சீர்குலைந்தது. எனினும், தற்காலம் வரை இந்த அமைப்பில் சில அம்சங்கள் தொடர்ந்து சமுதாயத்தில் இருந்து வந்துள்ளன. புவியியல் ரீதியாக நோக்கும்போது, மானிய முறை கரோலிங்கியப் பேரரசின் இடத்திலே தோன்றிய அரசுகளிலே காணப்பட்டது. அதாவது பிரான்ஸ், ஜேர்மனி, தென் இத்தாலி, சிசிலி ஆகிய இடங்களிலும் சிலுவை யுத்தத்தில் ஈடுபட்டவர்களால் சிரியாவிலும் பரப்பப்பட்டுக் காணப்பட்டது. அரசியல் ரீதியாக நோக்கினால் மானிய முறை என்பதில் அரசு ஒன்றின் அதிகாரங்களைப் பிரித்து நிலப்பிரபுக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தமையைக் காணலாம். சமூக ரீதியாக நோக்கினால் நிலப் பிரபுக்களிலே குடியானவர் தங்கி நிற்கும் ஓர் அமைப்பையும் இராணுவ சேவைக்காகவும் பிற

சேவைகளுக்காகவும் நிலச் சொத்துக்களை வழங்கும் முறையையும் காணலாம்.

## 7.2. நிலமானியச் சமுதாயம்

சமுதாயம் என்று கூறும்போது பொதுவாகப் பெருமளவிற்குத் தனித்து இயங்கும் அல்லது பொருளாதாரத்தில் தன்னிறைவுள்ள ஒரு மக்கட் கூட்டத்தினரைக் கருதுகின்றது. அம்மக்கட் கூட்டத்தினர் ஒரு குறிப்பிட்ட அமைப்பிற்கு உட்பட்டவராகத் தமக்கெனப் பண்பாடு, பிரதேசத்தை உடையவராக இருக்கும் போதுதான் தனிச் சமுதாயமாகின்றனர். அப்படியான சமுதாயம் பல தனி மனிதர்களைக் கொண்டதாயிருந்தாலும் தனி மனிதர்களின் குறுகிய காலத்தைவிட நீண்டகாலப் பகுதியில் தொடர்ந்து இயங்கும். அச்சமுதாயம் பல மனிதர்களிடையே ஏற்படுகின்ற பொருளாதாரத் தொடர்புகளின் அடிப்படையிலே அமைக்கப்பட்டுள்ளது. அதாவது, பல மனிதர் தமக்கு ஏற்படும் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒன்று கூடி கூட்டு முயற்சியில் ஈடுபடும்போது, ஏற்படுகின்ற தொடர்புகள் இச் சமுதாயத்தின் அடிப்படையாக அமைகின்றன. Feudalism என்று ஆங்கிலத்திலே வழங்கப்படும் மானிய முறை Feudum என்ற லத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். அம்மொழியில் அங்கீகரிக்கப்பட்ட நிலச் சொந்தக்காரனிடமிருந்து இராணுவ சேவைக்காகப் பெறப்பட்ட நிலத்தை வைத்திருப்பவனை இது குறிப்பிடும். மானிய முறைச் சமுதாயம் சிறப்பாக வரலாற்றிலே அடிமை முறைச் சமுதாயத்திற்குப் பின்பும் முதலாளித்துவச் சமுதாயத்திற்கு முன்பும் இடம்பெற்ற ஒரு சமுதாயத்தையே குறிப்பிடுகின்றது. இத்தகைய சமுதாயமானது பூரணத்துவமுடைய ஒரு சமுதாயமாக ஐரோப்பாவிலே இயங்கியது. உயர் வர்க்க ஆட்சியில் வெவ்வேறு இடங்களில் வேறுபட்ட பண்புகளைக் கொண்டதாக இதையொத்த சமுதாய

அமைப்புக் காணப்பட்டது. ஐரோப்பிய மானிய முறைச் சமுதாயத்தின் அடிப்படை அம்சங்களாவன:

1. நிலப்பிரபுக்களுக்கும் விவசாய குடிமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட சில குறிப்பிடத்தக்க தொடர்புகள் வேறு சமுதாயத்தில் காணப்படவில்லை.

2. மன்னனுடைய அல்லது மத்திய அரசினுடைய நேரடி நிர்வாகத்திற்குப் பதிலாக அந்தந்த நிலப்பிரபுவின் பிரதேசத்தில் வழக்கிலிருந்த தனிநபர் நிர்வாக முறை அல்லது ஆட்சி முறை அதாவது, பொதுமக்களாகக் காணப்பட்டவர் நேராக மன்னரால் ஆளப்படாது அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்திய நிலப்பிரபுவினால் ஆளப்பட்டது. இதுவும் பிற சமுதாயங்களிலே காணப்படவில்லை.

3. இச்சமுதாயத்திலே காணப்பட்ட நிலமானிய முறை குறிப்பிட்ட சில சேவைகளுக்காக அந்தச் சேவைகள் கொடுக்கப்படும் காலம் வரை நிலங்களை மானியமாக வழங்கும் முறை. இச் சேவைகளில் முக்கியமாக இராணுவ சேவை காணப்பட்டது.

4. மானிய முறை அமைப்பிலே நிலப்பிரபுக்கள் தமக்கெனப் பிரத்தியேகப் படைகளை உடையவராக விளங்கினர். இதன் அடிப்படையில் இதன் அமைப்பில் முக்கிய இடம்பெறுகின்ற விவசாயக் குடியானவர் மீது நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது.

ஐரோப்பிய மானிய முறையின் தன்மைகளை விளங்கிக்கொள்வதற்கு முற்பட்ட ஐரோப்பிய வரலாற்றை அறிந்து கொள்வது அவசியமானதாகும். உரோமப் பேரரசுக் காலத்தில் மத்தியமயமான நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

சிறந்த பொதுப் பாதைகள் மூலம் பேரரசு இறுக்கமாக இணைக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு, வெளிநாட்டு, வர்த்தகம் செழிப்புற்றிருந்தது. விவசாய உற்பத்திப் பொருட்கள் வர்த்தகத்தில் சிறப்பிடம் பெற்றன. அதனுடன் தொடர்பாக நகரங்கள் எழுச்சி பெற்றன. இப்பரந்த பேரரசின் பல பாகங்களிடையே வர்த்தகம், பண்டமாற்று மேற்கொள்ளப்படுவதற்கான சூழ்நிலை, போக்குவரத்து வசதிகள் காணப்பட்டன. இப்படியாக ஐரோப்பா ஒரு சிறந்த சமூகப் பொருளாதார, நிர்வாக வாழ்க்கை முறையைப் பெற்றிருந்தபோது கி.பி. 5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் வடக்கில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மிலேச்சப்படை யெடுப்புக்கள் முக்கியமாக மேற்கு ஐரோப்பாவில் அன்று வரை நிலவி வந்த வாழ்க்கை முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சமாதானமற்ற சூழ்நிலையை ஏற்படுத்தின. பேரரசின் பொருளாதாரத்தில் நீடித்துச் சீரான நிலை நிலவ முடியாது போயிற்று. இன்னும் முக்கியமாக ஒருமைப்பட்ட பழைய உரோமப் பேரரசின் இடத்தில் ஒரு ஒருமைப்பட்ட மிலேச்ச அரசன்றி பல சிறு சிறு அரசுகள் தோற்றம் பெற்றன. இந்நிலைமை பேரரசில் காணப்பட்ட அரசியல், பொருளாதார நிலைமை நீடித்து நிலவ முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியது. இச்சூழ்நிலை மாற்றம் அரசியல், பொருளாதாரத் துறைகளில் புதிய தேவைகளை வேண்டி நின்றது. இப்புதிய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் புதிய சூழ்நிலையைச் சமாளிக்கவும் காலப்போக்கில் ஏற்படுத்தப்பட்ட சமூக, அரசியல், பொருளாதார அமைப்பே நிலமானிய முறை என வர்ணிக்கப்படுகின்றது. சில ஆசிரியர் இதனைப் பண்ணை முறைமை Manorialism என்கின்றனர். அதாவது, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப் புற வாழ்க்கை ஒவ்வொரு கிராமத்து மக்களும் தங்கள் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து, தனித்தியங்கி வாழும் வாழ்க்கை முறையே மானிய முறை என வர்ணிக்கப்பட்டு உள்ளது.

வலிமை மிக்க உரோமப் பேரரசு அழிந்த பின்பாக அந்த இடத்தை நிரப்புவதற்குத் தகுதியுள்ள அரசோ, அல்லது ஒரு ஒழுங்கு முறையோ காணப்படவில்லை. ஆனால, அப் பேரரசு இருந்த இடத்திலே வலிமை மிக்க அரசை ஏற்படுத்த சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. முக்கியமாக மெரோலிங்கிய, கரோலிங்கிய வம்சங்களைச் சேர்ந்த மன்னர் சிலர் மேற்கு ஐரோப்பாவை ஒன்றுபடுத்த முயன்றனர். குளோவிஸ், சார்ளிமேன் போன்ற மன்னர் தங்கள் முயற்சியில் ஓரளவு சித்தியும் கண்டிருந்தனர். ஆனால், அவர்கள் கண்ட சித்தியானது நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. எனவே, பொதுப்பட இந்த நீண்ட காலத்தைப் பார்க்கும்போது ஐரோப்பாவில் ஓர் உறுதியற்ற நிலையைத் தான் காணலாம். இக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் இரண்டாவது முறையாக மேற்கு ஐரோப்பா நோத்மன், கங்கேரியன் போன்ற மிலேச்ச மக்களின் படையெடுப்புக்களுக்கு இலக்கானது. இத்தாக்குதல்களைச் சமாளிக்க முடியாதமையால் நிலைமை மேலும் மோசமடைந்தது. இந்தச் சூழ்நிலையில் சமுதாயத்தைச் சிதைவுறாமல் காத்து அதில் ஒன்றுபட்ட தொடர்புகளை ஒழுங்குபடுத்திய பெருமை நிலமானிய முறையையே சாரும். நிலவுரிமை (Land Tenure) அடிப்படையில் ஏற்பட்ட இந்த நிலமானிய முறையே புகழ்வாய்ந்த கிரேக்க, உரோமானிய காலத்திற்கும் தற்காலத்திற்கும் இடையே ஓர் இணைப்பாக அமைந்துள்ளது.

அடிக்கடி நடாத்தப்பட்ட மிலேச்சப் படையெடுப்புகளால் சமாதானமற்ற சூழ்நிலை தோன்ற அரசியல் துறையில் ஒரு வெற்றிடம் காணப்பட்டது. ஒவ்வொரு பிரதேச ஜனக்குழுவும் பயந்து பாதுகாப்பை நாடின. ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆற்றலும் வலிமையும் பெற்ற சிலர் அங்கு வாழ்ந்த மக்களுக்குப் பாதுகாப்பை அளிக்க முன்வந்தனர். அதற்குப் பதிலுபகாரமாகத் தங்கள் சேவையினை அவர்களுக்கு வழங்கினர். காலவரையில் இப்படியான ஓர் ஒழுங்கு முறை

மானிய முறையின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. மானிய அமைப்பின் பலதரத்தவர் பற்றிய கடமைகள், உரிமைகள், ஒழுங்குபாடுகள் வழக்கின் அடிப்படையில் நிலைப்படுத்தப் பட்டன.

ஐரோப்பிய மானிய முறையின் தோற்றத்தை அறிவதற்கு உரோமானிய, ஜேர்மானிய வழக்காறுகளை விளங்கிக் கொள்ளல் அவசியமானதாகும். உரோமரிடையே ஏற்றுக் கொள்ளப்பட்ட சேவைகளைப் பெறுவதற்காகத் தற்காலிகமாகக் குத்தகைக்கு நிலத்தை ஒருவருக்கு வழங்கும் முறை வழக்கத்திலிருந்தது. இது Precarium என அழைக்கப்பட்டது. இது பின்னர் Fief என்று அழைக்கப்பட்டது. உரோம மன்னர் இராணுவ சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும் நிலமானியம் வழங்குவது நடைமுறையில் இருந்தது. அவ்வாறே ஜேர்மானிய ஜனக்குழுக்களிடையே முக்கியமாகப் பிராங்கிய ஜனக்குழுக்களிடையே Comitatus என்ற ஒழுங்குபாடு காணப்பட்டது. இது உணவு, ஆயுதம், வெற்றி கொள்ளப்பட்ட பொருட்களில் பங்கு என்பவற்றைப் பெறுவதற்காக ஒரு தலைவனின் கீழ் இயங்கும் போர் வீரர் கூட்டத்தைக் குறிப்பதாக அமைந்தது. இந்த உரோமானிய, ஜேர்மானிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து பிராங்கிய மக்களிடையே நிலக்குத்தகை முறை (Fief Holding System)யாக வளர்ச்சியடைந்தது. ஆட்சிச் சீர்குலைவு ஏற்பட்ட நிலையில் சிறு நிலப் பிரபுக்கள், போர் வீரர்கள் வலிமை மிக்க பிரபுக்களிடம் தங்களுக்குப் பாதுகாப்புத் தரும்படி வேண்டினர். அதற்குப் பதிலாகத் தங்கள் சேவைகளை வலிமை மிக்க பிரபுக்களுககு அளிக்க உடன்பாடு கண்டனர். சார்ள்மேனின் மரணத்தின் பின் மானிய முறையானது பிராங்கிய பேரரசில் பரவியது. பிற்பட்ட கரோலிஞ்சிய ஆட்சியாளர் வலிமை மிக்க மத்தியமான ஆட்சியை ஏற்படுத்த முடியாது போனார்கள். நிலச் சொந்தக்காரர், பிரபுக்கள் தங்களுக்கிடையேயும் படையெடுப்பாளர்கள் இடையேயும்

பாதுகாப்பு வேண்டினர். மத்திய அரசாங்கம் பாதுகாப்புக் கொடுக்க முடியாத நிலையில் வலிமையுள்ள பிரபுக்கள் தங்கள் அருகிலிருந்த பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டதுடன் மன்னரின் அதிகாரங்களையும் பறித்துக் கொண்டனர். இந்த நிலையில் பலமற்றவர் பலமுற்றோரைப் பாதுகாப்புக்காக நாட வேண்டியேற்பட்டது. இதன் விளைவாக ஒப்பந்த முறையிலான அமைப்பாக மானிய முறை தோற்றம் பெற்றது.

இத்தகைய ஒரு சமுதாய முறை மேற்கு ஐரோப்பா முழுவதும் பரவலாகக் காணப்பட்டபோதும் எல்லா நாடுகளிலும் ஒரே காலப் பகுதியில், ஒரே தன்மையான அம்சங்கள் கொண்டதாக விளங்கவில்லை. நாட்டிற்கு நாடு, காலத்திற்குக் காலம் அதன் தன்மைகள் பொறுத்து வேறுபாடுகள் காணப்பட்டன. பொதுவாக மேற்கு ஐரோப்பாவில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு ஒப்பந்த அடிப்படையிலான ஒழுங்குமுறையாக மானியமுறை காணப்பட்டது. பிற்பட்ட காலத்தில் இம் முறையுடன் ஒத்த சமுதாய ஒழுங்குபாடு பிற சமுதாயங்களில் காணப்பட்டதால் அவையும் மானிய முறைச் சமுதாயம் என்று அழைக்கப்பட்டன. இஸ்லாமியப் பிரதேசங்களில் ஸரஸென், ஒட்டோமன் பேரரசுகளில் இதையொத்த ஒரு முறை இயங்கியது. கிழக்காசியாவில் ஜப்பானிலும் ஐரோப்பிய மானிய முறையின் நெருங்கிய இயல்புகளை ஒத்த மானியமுறை இயங்கி வந்துள்ளது. சீனாவில் மானியமுறை ஐரோப்பிய மானியமுறை தோன்றுவதற்கு முன்பு நீண்ட காலமாக இயங்கி வந்தது. இம் முறையில் மன்னனுக்குப் பிரதான இடமிருந்தது. தென்னாசியாவின் பல்வேறு இடங்களிலும் பற்பல இராச்சியங்களிலும் மானிய முறையின் பண்புகள் சிலவற்றைக் கொண்ட பொருளாதார முறை இயங்கி வந்தது. இது ஐரோப்பிய முறைகளில் இருந்து சில அடிப்படைகளில் கூட வேறுபட்டது.

பிராங்கிய மானியமுறை 1066இல் நோர்மன் கைப்பற்றலின் விளைவாகப் பிரான்சிலிருந்து இங்கிலாந்திற்குப் பரவி அங்கு அது வளர்ச்சியடைந்து ஸ்கொத்லாந்து, வேல்ஸ், அயர்லாந்திற்குப் பரவியது. பிரான்சியப் படையெடுப்பாளர் களினாலும் தீரச்செயல் புரிபவர்களினாலும் மானிய நிறுவன அமைப்புமுறை ஸ்பெயின், இத்தாலி, சிசிலிக்குப் பரவின. ஜேர்மானிய மானியமுறை 1100ஆம் ஆண்டளவில் வலுப்பெற்று ஸ்கந்திநேவியாவிலும் பரிசுத்த உரோமப் பேரரசின் கிழக்கு எல்லைப் புறங்களிலும் பரவியது. பிரான்சில் புரட்சிக்காலம் வரையிலும் ஜேர்மனியிலும் அது நீடித்தது. இவ்வாறு நிலமானிய முறையானது 5 நூற்றாண்டுகள் ஐரோப்பிய வாழ்க்கையின் சிறப்புக் கூறாய் அமைந்திருந்தது.

## 7.3. நிலமானியப் பொருளாதாரம்

மானியமுறை அமைப்பிலே விவசாயம் தான் முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக அமைந்தது. அவ்வப் பிரதேசத்திற்குத் தேவைப்பட்ட உணவை அவர்களே உற்பத்தி செய்தனர். சுய தேவையைப் பூர்த்தி செய்யும் கிராமங்களே மானிய அமைப்பில் முக்கியம் பெற்றன. வர்த்தகம் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புக்கள் காணப்படவில்லை. நிலச் சொத்துக்கள் தான் இந்த அமைப்பில் முக்கியத்துவம் பெற்றன. சமூகத்தில் ஒருவனின் அந்தஸ்து நிலச் சொத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. கோதுமை, பார்லி, ஓட்ஸ் என்பன பயிரிடப்பட்டன. தேனீ வளர்ப்பு முக்கிய இடம்பெற்றது. வர்த்தகம் வளர்வதற்கான வாய்ப்பின்மையால் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் பொருளாதார நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெற்றன. மிகச் சிறிய அளவில் வர்த்தகம் இடம்பெற்றது. குடியானவன் பிரபுவின் நிலத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த ஒரு பகுதியைத் தான் எடுத்து மிகுதியைப் பிரபுவிற்குக் கொடுத்தான். இராணுவ சேவையை ஆற்ற வேண்டியிருப்பதால் நிலத்தில்

கட்டுண்டவன் ஒரே நேரத்தில் விவசாயியாகவும் போர் வீரனாகவும் பயிற்சி பெற்றான்.

நில உரிமை முறையை அடிப்படையாகக் கொண்ட ஒன்றித்த ஒப்பந்தங்களினால் சீரமைக்கப்பட்ட சமுதாயமாக நிலமானியச் சமுதாயம் காணப்படுகின்றது. இந்தச் சமுதாயத்தில் மன்னன் முதல் குடியானவன் வரை அனைவரும் ஒருவருக்கொருவர் ஒப்பந்தங்களினாலே பிணைக்கப்பட்டனர். இந்த ஒப்பந்தங் களின்படி ஒவ்வொரு நிலப் பெருமகனும் தனக்குக் கீழுள்ள கீழாட்களுக்குப் (Vassals) பாதுகாப்பு அளிப்பதாக உறுதி வழங்குகின்றார். பதிலாகக் கீழாட்கள் நில உரிமையாளருக்குச் சில பணிகள் புரிவதாக வாக்களிக்கின்றனர். ஒரு மனிதனுக்கு நிலத்துடன் இருந்த தொடர்புதான் அவனுடைய சமூக, அரசியல் தொடர்புகளையும் நிர்ணயித்தது. அரசியல் குழப்பத்தினால் உந்தப்பட்ட ஒன்றுபட்ட ஒப்பந்தங்கள் நில உரிமை முறையை அடிப்படையாகப் பெற்று நிரந்தரமாக்கப் பட்டபோது நிலமானிய முறை பிறந்ததெனலாம்.

## 7.4. நிலமானிய அரசியல்

இவ்வாறு தோற்றம் பெற்ற நிலமானிய முறை நாளடைவில் ஓர் அரசியல் முறையாகவும் மாறியது. நிலப்பிரபுக்கள் தங்கள் கீழிருந்தவர் மீது நிலம் சம்பந்தமான அதிகாரங்களுடன் அரசியல் அதிகாரங்களையும் செலுத்தலாயினர். இவ் வழக்கம் வேரூன்ற அரசன் – குடிமக்கள் இடையே நேரடியான தொடர்பு இல்லாமல் போயிற்று. நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் அவனுடைய நிலமானியப் பிரபுவே அரசியல் அதிகாரியுமாக இருந்தான். அவ்வகையில் மானிய முறை என்பது மத்திய மயமான அதிகாரங்களைப் பகிர்ந்தளித்துப் பிரபுக்களுக்கு வழங்கியதைக் குறிக்கின்றது. அதன் அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுப் பல்வேறு சமுதாயப் படிகளில் உள்ளவர்களிடம் விடப்பட்டது. அவ்வாறு அரசியல்

அதிகாரங்களைச் செலுத்துபவர் தம் மேலிருக்கும் மன்னனுக்கும் சில கடமைகளைச் செய்தல் வேண்டும். அதேபோல் கீழிருப்பவர் இவருக்குச் சில சேவைகளைச் செய்ய வேண்டியிருந்தது. இவற்றுடன் இணைந்த வகையில் சிக்கலான தன்மை கொண்ட நீதி பரிபாலன முறையும் வளர்ச்சியடைந்தது. ஆட்சி வீழ்ச்சி ஏற்படவிருந்த அபாயகரமான சூழ்நிலையிலே நிலையான ஆட்சியை நிறுவ வேண்டிய அத்தியாவசியம் காரணமாகவே நிலமானிய ஆட்சி தோன்றியது. நிலப்பிரபுவின் ஆதிக்கம் குடியானவர் மீது பூரணமாகப் பரவியிருந்தது. படையுதவி, திறை அளித்ததுடன் அமையாது குடியானவர் அவர்களிடமிருந்தே நீதியையும் பெற்றனர். பொதுவில் நிலப்பிரபுவே அவர்களுக்கு யாவுமாக விளங்கினான். இந்த நிலப்பிரபு அவரிலும் உயர்ந்த மன்னனுக்கோ பேரரசனுக்கோ கீழ்ப்பட்டு வாழ வேண்டியிருந்தமை பற்றி இக்குடியானவருக்குத் தெரியாது. தூரத்தேயிருந்த மன்னனோ, சக்கரவர்த்தியோ கேள்விப்பட்ட பெயராகவே இருந்தனர்.

ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவில் நிலவிய பொருளாதார, சமுதாய, அரசியல் நிலைமைக்கும் உறவுத் தொடர்புகளுக்கும் சேர்த்து அளிக்கப்பட்ட பெயரே நிலமானியச் சமுதாய அமைப்பாகும். நிலத்தை மன்னர் ஆண்டவனிடமிருந்து பெற்றார். மன்னன் தாம் பெற்ற நிலத்தில் தமக்குப் போக எஞ்சியத்தை நிலமானிய முறையில் பகிர்ந்து பிரபுக்களுக்கு மானியங்களாகக் கொடுத்தார். பிரபு நிலத்தைப் பயன்படுத்தினாலும் அது அவருடையதல்ல. பிரபு தங்கள் நிலங்களின் பெரும் பகுதியை மற்றவர்களுக்குப் பிரித்து வழங்கினார். இவர்களிடம் நிலம் பெற்றவர்கள் கீழாட்களாவர். இவர்கள் மேலும் நிலத்தை உட் குடிகளுக்கு வழங்கினர். நிலத்தில் உழைத்தவர் அடிமை ஊழியர் எனப்பட்டனர். King, Lord, Vassals, Sarfs இவர்கள் நிலத்தை விட்டு விலக

முடியாது. நிலம் கைமாறினால் அவர்களும் அதனுடன் மாறல் வேண்டும். இந்த அமைப்பு முறையில் அடிமட்டத்தில் இருந்த அடிமை ஊழியர் முக்கிய ஒரு பெரும் பிரிவினர் ஆவர். இவர்களுடைய நிலை இடத்துக்கிடம் காலத்திற்குக் காலம் வேறுபட்டிருந்தது. அவர்கள் அடிமை வாழ்விலிருந்து விடுபட இரு வழிகள் இருந்தன. ஒன்று மதகுருமாராகி உரிமையுடன் வாழ முடிந்தது. மற்றது தன் கிழாருக்குப் பொருள், பணம் கொடுத்து அவர் இசைவுடன் பண்ணையிலிருந்து விடுபட முடிந்தது.

நிலமானிய முறையின் விளைவாக ஐரோப்பாவில் எல்லா அரசுகளும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றும் மானியப் பிரிவுகளின் கீழே ஓரளவு சுதந்திரத்தை அனுபவித்து வந்தன. மத்திய மயமான அரசாங்கமோ வலிமை பொருந்திய ஒரு அரசோ உருவாக முடியாத நிலைமை காணப்பட்டது. நாடு முழுவதும் ஒரு சட்டமோ அந்தச் சட்டத்திற்கு அடிபணிதலோ இல்லாதிருந்தது. பேரளவில் ஒரு மத்திய அரசாங்கம் இருந்தபோதும் தனி மனிதனுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நேரான தொடர்பு ஒன்றும் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக ஒவ்வொரு தனிமனிதனும் தன் நிலப்பிரபுவிடம் பற்றுக்கொண்டு அவன் அரசியல் அதிகாரத்திற்கு அடிபணிந்து வாழ்ந்த வழக்கமே சமுதாயத்தை ஒன்றுகூட்டி நிலைபெறச் செய்தது. கரோலிஞ்சியப் பேரரசு சிதைந்த பிறகு ஐரோப்பாவில் ஏற்பட்டிருந்த சீர்குலைவைத் தடுத்து நிறுத்திப் பிற்காலத்தில் தேசிய அடிப்படையில் ஐரோப்பியச் சமுதாயம் வளர நிலமானிய முறை தான் காரணமாக இருந்தது எனலாம். ஒருவகையில் மத்திய மயமான ஆட்சிமுறை உருவாகாமல் தடை செய்தபோதும் மன்னன் கொடுங்கோலனாக மாறாது காக்கவும் நிலமானிய முறையால் முடிந்தது எனலாம். அரசனின் அதிகாரங்கள் ஒரு வரம்பிற்குட்பட்டதாக இருக்கச் செய்த பெருமை இந்த நிலமானிப் பிரபுக்களையே சாரும்.

சிறந்த உதாரணமாக ஆங்கில மன்னன் ஜோன் என்பவனிடமிருந்து மகாபட்டயம் (Magna Carta) வழியாக நிலப்பிரபுக்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொண்டதைக் குறிப்பிடலாம். நிலமானிய அமைப்பில் அரசனுக்கு அறிவுரை கூறவும் அரசன் சார்பில் நீதி வழங்கும் பொருட்டு பிரபுக்களும் கீழாட்களும் அரசவைக்குச் சென்று வந்த வழக்கமே நாளடைவில் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றம் தோன்றக் காரணமாக அமைந்தது. முதலில் மன்னனின் ஆணையின்படி கூடி வந்த நிலமானிய மன்றம் (Fgudal Assembly) இடைக்கால நகரங்களின் எழுச்சிக்குப் பிறகு பாராளுமன்றமாக மாறி நாட்டின் அரசாங்கத்திற்கு இன்றியமையாததாகியது.

ஐரோப்பிய மானிய முறை அமைப்பிலே திருச்சபையானது முக்கிய பங்கை வகித்தது. பக்திமிக்க பிரபுக்கள் தங்கள் மூதாதையரின் ஆத்மாவும் தங்கள் ஆத்மாவும் மறுவுலகில் நன்மை அடைவதற்காக நிலங்களைத் திருச்சபைக்குத் தானமாக அளித்து வந்தனர். இத்தகைய மரண சாசனம் மூலம் காலப்போக்கில் திருச்சபைக்கு ஏராளமான நிலங்கள் சேர்ந்தன. இப்படி வழங்கப்பட்ட தானங்கள் உள்@ர் குருமார்களாலும் மற்றைய திருச்சபை ஊழியராலும் பராமரிக்கப்பட்டன. இப்படியாகத் திருச்சபைக்கு அதிகமான நிலத் தானங்கள் கிடைக்க அவற்றைப் பராமரிக்கத் திருச்சபை ஊழியர்கள் தாங்கள் திருச்சபை மீதும் போப்பாண்டவர் மீதும் வைத்திருக்க வேண்டிய நம்பிக்கையை, இழக்கலாயினர். அதி கூடிய பொருளாதார வசதிகளை இவர்கள் அனுபவித்ததனால் திருச்சபையின் ஒழுங்கு முறைகளுக்கு மாறாகப் லௌகீகத் துறையில் கூடியளவு ஈடுபாடு கொண்டவர்களாக மாறத் தொடங்கினர். இதனால் இந்த நிலங்களைப் பாவித்து வந்த திருச்சபை அதிகாரிகளுக்கும் திருச்சபைக்குமிடையே அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டன. திருச்சபை அதிக நிலங்களைப் பெற்று மன்னனுடன் போட்டி போடுகின்ற

சந்தர்ப்பம் ஏற்பட்டது. திருச்சபையும் மானிய நிறுவனமாக மாறிக் கொண்டது. இதனால் மானியமுறை அமைப்பில் போப்பாண்டவருக்கும் மன்னருக்குமிடையே மோதல்கள் ஏற்படுவதனைக் காணமுடிகின்றது.

மானியமுறை அமைப்பிலே செல்வம் தரும் மூலமாக நிலம் மட்டுமே விளங்கியது. பொருளாதாரப் பலத்தை அதிகரிப்பதற்கு நிலம் தேவைப்பட்டது. அது மட்டுமல்ல நில விநியோகமானது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது மன்னனே நிலங்களைப் பிரபுக்கு மானியமாக வழங்கி இருந்தான். இந்த மானியங்கள் பெருகுவதற்கு இரு வழிகள் இருந்தன. ஒன்று போர்மூலம் மற்றைய மானியங்களைக் கைப்பற்றல் இரண்டாவது விவாக உறவுமூலம் பெறல். விவாக உறவு பொறுத்து பிரபுவானவன் ஏற்கனவே மணம் புரிந்திருந்தான். ஆகவே, போர்மூலம் நிலம் கைப்பற்றும் வழிதான் சாத்தியமாக இருந்தது. இதனால் இக்காலத்தில் அடிக்கடி போர்கள் இடம்பெற்றன. காலப்போக்கில் அதிக நிலங்களைப் பலத்தின் அடிப்படையில் பெற்ற பிரபு மன்னனுடனேயே போரிடும் சந்தர்ப்பங்களை இக்காலப் பகுதியில் காணலாம். பிரான்ஸ் பொறுத்து இத்தகைய போராட்டங்கள் நடைபெற்று வலிமை மிக்க மானியப் பிரபு ஒருவனே பலத்தின் அடிப்படையில் முடியாட்சி முறையை அந்நாட்டுக்கு அளிப்பதைக் காணலாம். அரசனே நாட்டின் முதன்மையான நிலப்பிரபு என்று கருதப்பட்டதனால் அவனது கடமைகளும் உரிமைகளும் இதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டன. சூழ்நிலைகளினால் அரசன் என்ற முறையில் அவன் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளும் அவனுடைய உரிமைகளும் மறைந்து போயின. இந்த உரிமைகள் யாவும் நிலப்பிரபுக்களின் மரபு வழிவரும் குடும்பச் சொத்தால் மாறி விட்டன. அவ்வாறே அவர்களது பொதுப் பணிகளையும் இப் பிரபுக்களே தங்கள் விருப்பப்படி செய்து வந்தனர். அதனால் நிலப் பிரபுக்களின் மேலாண்மையானது

இறைமையாக மாற ஏதுவாயிற்று. இதன் காரணமாக மன்னனால் நிலப்பிரபுக்களை அடக்கியாள முடியாதிருந்தது. வலிமையே பலத்தின் அடிப்படையாக விளங்கியமையால் அடிக்கடி போர் நடவடிக்கைகள், பிரச்சினைகள் பரவலாக இடம்பெற்றன.

## 7.5. நிலமானிய முறையின் வீழ்ச்சி

ஐரோப்பிய நிலமானிய முறையானது பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்பாக வீழ்ச்சியைக் கண்டது. இதன் வீழ்ச்சிக்கான அரசியல் சார்ந்த காரணங்களுள் தேசிய அரசுகளின் எழுச்சி மிக முக்கியமானதாகும். இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளிலே தேசிய அரசுகள் எழுச்சி பெற்று வலிமை மிக்க முடிமன்னர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர். (இத்தாலி, ஜேர்மனியில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை மானிய அம்சங்கள் வலுப்பெற்று இருந்தன.) நிலமானிய முறைக்கு என்றுமே எதிரான அரச பதவி வலுப்பெற்றபோது மானிய முறையானது சிதைவு கண்டது. மத்திய மயமான நிர்வாகம் வலுப்படுத்தப்பட்டு நிலப்பிரபுக்கள் அதிகாரம் அடக்கப் படுகின்றது. இக்காலப் பகுதியில் தேசிய முடியரசுகளின் எழுச்சிக்குப் பல காரணிகள் உதவியிருந்தன. அவற்றுள் முக்கியமானது பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்ட வர்த்தகப் புத்துயிர்ப்பும் வர்த்தக வகுப்பினரின் எழுச்சியும் ஆகும். ஐரோப்பாவில் காணப்பட்ட அரசியல், பொருளாதார, சமுதாயத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களில் வர்த்தகம் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டு அரசுகள் எழுச்சி பெறலாயின. இப் புதிய வர்த்தக வகுப்பினரின் எழுச்சி, அரசியல், பொருளாதார, சமுதாயத்துறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தலாயிற்று. படிப்படியாக நிலம் இதுவரை பெற்று வந்த முக்கியத்துவத்தைப் பணம் பெற்றுக்கொண்டது. இதனால்

வர்த்தக வகுப்பினர் செல்வாக்கு மிக்க ஒரு பிரிவினராக மாறத் தொடங்கினர்.

நகரங்களில் வாழ்ந்த மக்கள் நிலத்தை நம்பி வாழவில்லை. அவர்கள் வணிகம், தொழில் துறைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆகவே, நிலமானியப் பிணைப்புக்களுக்கு உட்படாமல் உரிமையுடன் வாழ்ந்தனர். நகரங்கள் மன்னனிடமிருந்து ஆவணம் பெற்றுச் சுதந்திரத்துடன் இயங்கின. நாளடைவில் மன்னன் நிலப்பிரபுக்களுக்கு இடையிலான போராட்டங்களில் இப்புதிய வர்த்தக வகுப்பினர் மன்னன் பக்கம் சேர்ந்து கொண்டனர். மன்னனுக்குப் பணவுதவி செய்வதன் மூலம் பிரபுக்களை அடக்க உதவியதோடு சமூக அந்தஸ்துப் பொறுத்துத் தங்கள் நிலையையும் உயர்த்திக் கொண்டனர். வர்த்தக வகுப்பினர் பெற்றிருந்த பண வலிமை, மன்னன் அதிகாரம் வலுப் பெறுவதற்குப் பெரிதும் துணையாக அமைந்தது.

பொருளாதார நடவடிக்கைகளிலே பணம் முக்கியத்துவம் பெற்றதைத் தொடர்ந்து மானிய அமைப்பிலே முறிவுகள் ஏற்படலாயின. குடியானவர் பிரபுவுக்குக் குறிப்பிட்ட பணம் செலுத்தி விடுதலை அடைய முடிந்தது. கைத்தொழிலும் வர்த்தகமும் புதிய வேலை வாய்ப்புக்களைக் குடியானவருக்கு வழங்கியதும் குடியானவர் நகரங்களுக்குச் செல்ல வாய்ப்புக்கள் காணப்பட்டன. அத்துடன் இக்காலப் பகுதியில் விவசாயப் பொருட்களின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து புதிய நிலங்கள் தேவைப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்டு, சதுப்பு நிலங்களை மீட்பித்தும் புது விளைநிலங்கள் பெறப்பட்டன. இந்த முயற்சிகளில் குடியானவர்களுக்கு நிறைய வேலைவாய்ப்புக் கிடைத்தது. தாங்களே காடுகளை அழித்து விவசாயம் செய்யவும் முற்பட்டனர். பழைய நிலமானியக் கட்டுக்கோப்பு முறிவடைந்து சென்றபோது இது இலகுவாக அமைந்தது. 14ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில்

ஏற்பட்ட கொள்ளைநோய் பெருமளவிலான மக்களை இல்லாமல் செய்து தொழிலாளர் பற்றாக்குறையை ஏற்படுத்தியது. அதனால் நிலமானிய முறை நடைமுறையில் சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

நிலையான இராணுவம் புதிய போர் முறைகளின் அறிமுகம், வெடி மருந்தின் கண்டுபிடிப்பு, சிலுவைப் போர்களில் நிலப்பிரபுக்களின் பங்கு இவைகள் எல்லாம் மானிய முறையின் வீழ்ச்சிக்கு மேலும் வழி வகுத்தன. ஆட்பல எண்ணிக்கையிலும் பார்க்க ஆயுத பல மேலாதிக்கம் மானிய முறையின் வீழ்ச்சிக்கும் பிரபுக்களின் அதிகார ஒழிப்புக்கும் வலிமைமிக்க தேசிய முடியரசுகளின் எழுச்சிக்கும் வழி வகுத்தன.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்பாக மீண்டும் வர்த்தகம் விருத்தி அடைந்து நகரங்களில் பணப்பரிமாற்றம் முக்கியத்துவமடைய நிலமானிய முறை சீர்குலையத் தொடங்கியது. நிலம் முக்கியம் இல்லாதபோது நிலக் குத்தகையின் அடிப்படையிலமைந்த அரசியல், பொருளாதார அமைப்பு முறையான மானிய முறையும் சீர்குலைந்தது. வர்த்தகம் முக்கியத்துவம் பெற முதலாளித்துவ சமுதாயம் வளரத் தொடங்கியது. இதுவரை நிலத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகாரம் செலுத்தி வந்த ஒரு வர்க்கத்தின் தனி முதன்மை நிலை வேறு ஒரு வர்க்கத்திடம் கைமாறத் தொடங்குகின்றது. பணப்புழக்கம் அதிகரிக்க அதனை நட்டஈடாகக் கொடுத்து நிலப்பிரபுவின் ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்தும் சுதந்திரக் குடியானவனாக மாறும் வாய்ப்பும் ஏற்பட்டது. இப்படியான தேசிய முடியரசுகளின் எழுச்சி, வர்த்தகப் புத்துயிர்ப்பு, பணப்பரிமாற்றம், புதிய ஆயுதங்களின் வருகை, சிலுவைப்போர்கள் போன்ற காரணிகளால் மானியமுறை அமைப்புச் சீர்குலைந்தது. நிலம்

இதுவரை பெற்ற முக்கியத்துவத்தை இழக்க ‘‘முதல்’’ அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டது.

## சுருக்கம்

இந்நிலமானிய முறை, இடைக்கால ஐரோப்பாவில் காணப்பட்ட சமூக, பொருளாதார, அரசியற் கட்டமைப்பாகும். இது பிரபுக்களுடனும் நிலச் சுவாந்தர்களுடனும் விவசாயக் குடிமக்களுடனும் தொடர்புற்றிருந்தது. பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் இது பரவிக் காணப்பட்டது. வர்த்தக நகரங்களின் வளர்ச்சியுடனும் பணப் புழக்கத்தின் அதிகரிப்பினாலும் பண்டமாற்று முறை வீழ்ச்சியடைந்தது. நாணயப் பொருளாதாரம் வளர்ச்சியடைய வங்கிகள் அதிகரித்ததும் நிலப்பிரபுவின் ஆதிக்கம் வீழ்ச்சியடைந்து சுதந்திரக் குடியானவனாக மாறினார். புதிய ஆயுதங்களின் வருகை, சிலுவைப் போர்கள் என்பவற்றினால் மானிய முறை சீர்குலைந்தது – ‘‘நிலம்’’ முக்கியத்துவம் இழந்தது – ‘‘பணம்’’ அவ் இடத்தைப் பிடித்துக் கொண்டது.

## திறவுச் சொற்கள்

மானிய முறை, நிலப் பிரபுக்கள், மன்னன், வர்த்தகம், வெடி மருந்து, முடியரசு

## உசாத்துணை நூல்கள்

Fisher, HAL, (1962), **History of Europe**, Edward Arnold and Co., London.

பேர்டினன்ட் ஷெபீல், (1966), **ஐரோப்பிய வரலாறு,** கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

சத்தியசீலன் சமாதிலிங்கம், (1994), நாகரிகங்களுக்கு ஒரு அறிமுகம் - I, அகிலம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

Rao, B.V., (2014), **World History from Early Times to A.D. 2011,** Sterling Publishers (Pvt.) Ltd., New Delhi.

## பயிற்சி வினாக்கள்

1. நிலமானிய முறையை விளக்குக.
2. மத்திய ஐரோப்பாவில் நிலமானியச் சமுதாய முறையின் அடிப்படை அம்சங்களை விளக்குக.
3. நிலமானியப் பண்புகளைப் பற்றிச் சிறு குறிப்பெழுதுக.
4. நிலமானிய அமைப்பில் பிரபுக்களின் பங்களிப்புகள் யாவை?

# அத்தியாயம் – 8

# நூற்றாண்டுப் போர் (1337 – 1453)

## பொருளடக்கம்

8.1. அறிமுகம்
8.2. பின்னணி
8.3. வம்சக்குழப்பங்கள் 1314 – 1328
8.4. போரின் ஆரம்பத்தில் இங்கிலாந்து மற்றும் பிரான்சின் அரச சபையின் குடும்பத் தொடர்புகள்
8.5. போர் 1328 – 1337 (போர்க் காலங்களில்)
8.6. போரின் ஆரம்பம் 1337 – 1360
8.7. முதலாவது சமாதானம் 1360 – 1369
8.8. ஐந்தாம் சார்ள்ஸ் மூலம் பிரான்சு வெற்றி பெறல் 1369 – 1389
8.9. இரண்டாவது சமாதானம் 1389 – 1415
8.10. ஐந்தாம் ஹென்றியின் கீழ் இங்கிலாந்தின் வெற்றிகள்
8.11. அகின்கோர்ட் போரைப் பற்றிப் பதினைந்தாம் நூற்றாண்டின் விபரிப்பு
8.12. பிரான்சு மீண்டெழுதல் 1429 – 1453
8.13. முக்கியத்துவம்
8.14. ஆயுதங்கள்
8.15. போரும் சமூகமும்

## அத்தியாயச் சுருக்கம்

இங்கிலாந்திற்கும் பிரான்சிற்குமிடையே நீண்ட காலமாக இந் நூற்றாண்டுப் போர் நடந்தது. இது 116 வருடங்கள் நான்கு கட்டங்களாக இடம்பெற்றது. அவை குலங்களிற்கிடையே

முரண்பாடாக இருந்தாலும் இங்கிலாந்து தேசியத்தைத் தூண்டியது. புதிய இராணுவ ஆயுதங்களை இப்போர் அறிமுகப்படுத்தியது. நெப்போலியன் காலத்திற்கும் இப் போர் நீண்டு சென்றது. இரண்டு முறை சமாதானங்கள் நிலவின. விவசாயிகளின் கிளர்ச்சி 1381இல் நடைபெற்றது. இப்போர் தேசிய அரசுகள் உருவாகுவதற்கும் காரணமாக அமைந்தது.

## அத்தியாயத்தின் நோக்கம்

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் இந்நூற்றாண்டுப் போர் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இப் போர் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையில் 116 வருடங்கள் நடந்தது. இதில் குலங்களிற்கு இடையேயான போட்டியும் நாட்டுப்பற்றும் காணப்பட்டது. உயர் வகுப்பான பிரபுக்களும் இப்போரில் ஈடுபட்டனர். இங்கிலாந்திற்கும் பிரான்ஸிற்கும் இடையிலான போர் நீண்டு நிலைத்திருந்ததை அறியக் கூடியதாக இருந்தது. அவர்களின் சமாதான முயற்சிகளையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## கற்றல் பெறுபேறுகள்

- இவ் அத்தியாயத்தைக் கற்பதன் மூலம் இடைக்கால ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் 116 வருடங்கள் நீண்ட போரை நடாத்தியதற்கான காரணங்களை அறியமுடியும்.

- இங்கிலாந்தும் பிரான்சும் தமது அரச வம்சங்களினதும் குலங்களினதும் முக்கியத்துவத்திற்காகவும் பிரபுக்களினதும் மற்றும் சலுகை படைத்தவர்களின் பாதுகாப்பிற்காகவும் போராடினர். பிரான்ஸின் பல பிரதேசங்களை இங்கிலாந்து கைப்பற்றும் நோக்கமாக இப் போர் நடைபெற்றது.

- பாரம்பரிய போர் முறையின்படியும் நவீன இராணுவ ஆயுதங்கள் மூலமும் போர்கள் நடாத்தியதை அறியக்கூடியதாக இருந்தது.

## 8.1. அறிமுகம்

நூற்றாண்டுப் போர் என்ற சொல்லிற்கு அமைவாக, நீண்ட போராக இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையில் 116 வருடங்கள் (1337 – 1453) வரை போர் நடைபெற்றது. இது இங்கிலாந்து அரசர்கள், பிரான்ஸின் சிம்மாசனத்திற்காக அடிப்படையில் சண்டை போடப்பட்டதாகும். பல சிறிய கால இடைவெளிக்குப் பின்னும் இரு நீண்ட சமாதானக் காலங்களுக்குப் பின்னும் இறுதியாக ஆங்கிலேயர்கள் கரையஸ்பேலேயைத் தவிர பிரான்சிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.

ஆகவே, போர் தொடர்ச்சியான சண்டையாக இருந்தது. அத்துடன் இது பொதுவாக மூன்று அல்லது நான்கு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. எட்வார்டியன் போர் | – | Edwardian War (1337 – 1360) |
| 2. கரோலைன் போர் | – | Caroline War (1369 – 1389) |
| 3. லங்காஸ்ரியன் போர் | – | Lankastrian War (1415 – 1429) |
| 4. ஜோன் ஒவ் ஆர்க்கின் வருகைக்குப் பின் ஆங்கிலே யர்களின் மெதுவான வீழ்ச்சி | – | Slow Decline of English after Joan of Arc (1429 – 1453) |

இப் போர் பல காரணங்களால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஆரம்பத்தில் குலங்களிற்கிடையேயான முரண்பாடுகளாக இருந்தாலும் இப் போர் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துத் தேசியத்தைத் தூண்டுவதாக இருந்தது. இராணுவ முறையில் இப் போர் புதிய ஆயுதங்களையும்

தந்திரங்களையும் அறிமுகப்படுத்தியதோடு, நிலமானிய இராணுவத்தின் பழைய முறையான காலாற் படைகளின் ஆதிக்கத்தை இல்லாதொழித்தது. மேற்கு உரோமானியப் பேரரசில் இருந்து மேற்கு ஐரோப்பாவில் முதல் முறையாக இப் போரில் இராணுவமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆரம்பகாலக் குடியானவர்களின் பங்களிப்பை மாற்றியமைத்தது. எல்லாவற்றிற்குமாக, இடைக்கால யுத்த வரலாற்றில் நீண்ட காலத்தை எடுத்த மிக முக்கியமான ஒரு போர் என்று அடிக்கடி சொல்லப்படுகின்றது.

## 8.2. பின்னணி

இச்சண்டையின் பின்னணி 400 வருடங்களுக்கு முற்பட்டது என்கின்றனர். கி.பி. 911இல் இளைய கரோலிஞ்சியன் சார்ல்ஸ், வைக்கிங் ரோலோ என்பவரைத் தனது சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியான நோர் மண்டியில் குடியேற அனுமதித்தமையாகும். (Normandy Region in France) கி.பி. 1066இல் "நோர்மன்கன்" படையெடுப்பாளர் வில்லியத்தின் தலைமையின் கீழ் (The Duke of Normandy) இங்கிலாந்தைக் கைப்பற்றினர். ஹேஸ்ரிங்க்ஸ் என்ற போரில் ஆங்கிலோ – சக்சன்களைத் தோற்கடித்தனர். அதைத் தொடர்ந்து, ஆங்கிலோ – நோர்மன் அதிகாரக் கட்டமைப்பை உருவாக்கினர். முக்கியமாக எதிர்கால நடவடிக்கைகளை அறிந்து கொள்வதற்கு, ரோலோவுடன் ஆரம்பித்து, நோர்மன் தலைவர்கள் பிரான்சு அரசனுக்குக் கப்பம் கட்டினர். அதற்குப் பின்பு அவர்கள் இங்கிலாந்து அரசர்களானார்கள்.

இங்கிலாந்தில் உள்நாட்டுக் குழப்பம் மற்றும் அமைதியின்மையைத் தொடர்ந்து அராஜகம் ஏற்பட்டது. (1135 – 1154 A.D. – The Anarchy) ஆகையால் அன்ஜீவின் (Angevin) அரசர்கள் ஆங்கிலோ நோர்மன் வம்சத்தை

வென்று விட்டனர். அன்ஜீவின்கள் அதிகாரத்தின் உச்சியில், இங்கிலாந்தையும் நோர்மன்டியையும் அத்துடன் மெயின், அன்சு, ரொறெயின், கஸ்கனி, செயின்ற்றேன்ஞ் மற்றும் அக்குற்றெயின் பிரதேசங்களையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட நிலங்கள் சிலவேளைகளில் அஞ்சீவின் சாம்ராச்சியம் எனப்பட்டது. பிரான்சு அரசனிற்குக் கப்பம் கட்டிக் கொண்டிருக்கும் இங்கிலாந்து அரசன், பிரான்சு அரசனையும் விட பிரஞ்சுப் பிரதேசங்களை நேரடியாக ஆட்சி செய்தான். இச் சூழ்நிலை தொடர்ந்த முரண்பாட்டிற்கு வழிவகுத்தது. மூன்று தீர்மானத்திற்குரிய போர்கள் மூலம் பிரான்ஸ் இச்சூழ்நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

1. நோர்மண்டியைக் கைப்பற்றல் (1214)
2. செயின்ற் ரோஞ் போர் (1242)
3. புனித சார்டோஸ் போர்கள் (1324)

ஆகையால், இங்கிலாந்தின் அதிகாரங்களை இக்கண்டத்தில் காஸ்கனியின் (Gascony) சிறிய மாகாணங்களிற்குக் குறைத்ததுடன் நோர்மண்டியின் முடிக்குரிய உயர் பதவி (Jewel) முற்றாக இழக்கப்பட்டது. 14ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் பல இங்கிலாந்தின் உயர் குடி மக்கள் தங்கள் மூதாதையர்கள் நோர்மண்டி போன்ற செழிப்பான கண்டப் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததுடன் இவைகள் தமது மூதாதையர்களின் பிரதேசம் என்றும் அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்வதற்குத் தூண்டப்பட்டனர்.

விசேடமாக, நூற்றாண்டுப் போர் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையில் நடந்த தொடர்ச்சியான போர் என பல வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். பிணக்குகளும் நேரடிப் போரும் அடிக்கடி காணப்பட்டன. நெப்போலியன்

காலத்திற்கும் அது தொடர்ந்தது. இது உலக சாம்ராச்சியத்திற்குரிய போராக ஐரோப்பாவிற்கு அப்பாலும் எடுத்துச் செல்லப்பட்டது.

## 8.3. வம்சக்குழப்பங்கள் 1314 – 1328

இவ் வம்சக்குழப்பங்கள் பிரான்சில் இந்நூற்றாண்டுப் போர் நடைபெறும் வரைக்கும் காணப்பட்டது. பல நூற்றாண்டு காலமாக இடைவிடாது தொடர்ந்து நேரடித் தலைவராக மூத்த மகன் பதவிவகித்து வந்தான். இடைக்கால ஐரோப்பாவில் இது நீண்ட தொடர்ச்சியான வம்சமாக இருந்தது. 1314இல் நேரடித் தலைவனான நான்காம் பிலிப் அரசன் மூன்று வாரிசுகளை விட்டுவிட்டு இறந்து விடுகிறான். பத்தாம் லூயி, ஐந்தாம் பிலிப் மற்றும் நான்காம் சார்ல்ஸ் ஆவார்கள். மூத்த மகனும் அரச பதவிக்குரியவருமான பத்தாம் லூயி 1316இல் அவரின் இறப்பிற்குப் பின் பிறந்த மகனான முதலாம் ஜோனை விட்டு விட்டு இறந்து விடுகிறான். மகன் 1ஆம் ஜோனும் இறந்து விடுகிறான். மகள் ஜோனாவின் தந்தை யாரென்று தெரியாது. ஜோனிற்குப் பதிலாக நான்காம் பிலிப்பின் மகன், ஐந்தாம் சார்ல்ஸ் பதவியேற்கின்றான்.

பிரான்சின் பெண்கள் அரச பதவி ஏற்பதற்கு இக் கருத்துத் தொடர்ச்சியாக இருந்து கொண்டு வருகின்றது. 1322இல் பிலிப் இறந்தபொழுது அவரின் மகளுக்கு அரச பதவி கொடுக்கப்பட வில்லை. நான்காம் பிலிப்பின் மூன்றாவது மகன் அரச பதவிக்கு வருகின்றான்.

1324இல் பிரான்சைச் சேர்ந்த நான்காம் சார்ல்ஸ்சும் இங்கிலாந்தைச் சேர்ந்த இரண்டாம் எட்வேட்டும் கஸ்கனி என்ற இடத்தில் புனித சார்டோஸ் என்ற குறுகிய போரை நடாத்தினார்கள். இப் போரின் பெரிய நிகழ்வு என்னவெனில் கரோனில் (Garonne) காணப்படும் ஆங்கிலேயர்களுடைய

கோட்டையான லா ரியோலே (La Reole) வைக் குறுகிய காலத்திற்கு முற்றுகையிட்டதாகும். கொன்ற் பிரதேசத்தின் பிரபுவான எட்மண்ட வூட்ஸ்ரொக்கின் தலைமையில் ஆங்கிலப் படைகள் மற்றும் பிரஞ்சுப் படைகளின் பீரங்கிகள் ஒரு மாத காலமாகக் குண்டுகள் வீசிய பின்பு அடிபணியக் கட்டாயப் படுத்தப்பட்டன. ஆனால், மீண்டும் படைகளைத் திரட்டுவோம் என்றார்கள், அது நடைபெறவில்லை. இப் போர் இங்கிலாந்திற்கு முற்றுமுழுதான தோல்வியாகும். அத்துடன், முன்பு அக்குற்ரைனின் (Aquitaine) பெரிய ஆட்சிப் பிரதேசமாக Duchy இருந்தது. இப்போது போர்டுவாக்ஸ் (Bordeaux) குறுகிய கடற்கரைப் பிரதேசமாக மட்டுமே ஆங்கிலேயர்களிடம் இருந்தது.

இந்த இழந்த நிலங்களை மீண்டும் பெறுவது தான் ஆங்கிலேய இராஜதந்திரத்தின் முக்கிய நோக்கமாகும். இப்போரினால் இரண்டாம் எட்வேட்டிற்கு ஆங்கிலப் பிரபுக்கள் மத்தியில் எதிர்ப்பு உண்டாயிற்று. அது அவரைக் கொலைக்கு இட்டுச் சென்றது. (1327) அதற்குப் பின்பு இளைய மூன்றாம் எட்வேட் பதவிக்கு வருகின்றான். நான்காம் சார்ள்ஸ் பிறக்க முன்பே பெண் பிள்ளை எனத் தீர்மானித்த மகளை விட்டுவிட்டு 1328இல் இறக்கின்றார். இத்துடன் கப்ரின் வம்சத்தின் மூத்த தலைமுறை முடிவிற்கு வந்தது. இது பிரஞ்சு அரசாட்சிக்கு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியது.

இரண்டாம் எட்வேட்டின் விதவையான நான்காம் சார்ள்சின் சகோதரி இசபெல்லா இளைய இளவரசன் என்றபடியால் முடிக்குரிய இளவரசனைத் திறமையாகக் கட்டுப்படுத்தி வந்தாள்.

மூன்றாம் எட்வேட் சார்ள்சின் மருமகனாவான். அவனுடைய நெருங்கிய ஆண் உறவு அத்துடன் கப்ரின் வம்சத்தின் மூத்த வழித் தோன்றல் ஆவான். நான்காம் பிலிப்பின் வழிவந்த

உயிருடன் இருக்கும் ஒரே ஆண் வாரிசு ஆங்கிலேயரின் நிலமானியச் சட்டத்தின்படி மூன்றாம் எட்வேட் பிரான்சின் சட்டப்படி அரசனாகின்றான்.

## 8.4. போரின் ஆரம்பத்தில் இங்கிலாந்து மற்றும் பிரான்ஸின் அரச சபையின் குடும்பத் தொடர்புகள்

பிரஞ்சுப் பிரபுக்கள் எப்படியிருந்தும் வெளிநாட்டில் அரசனாவது தடுக்கபட்டது. ஒரு காலத்தில் இங்கிலாந்து அரசனாகவும் இருந்தான். புராதன சாலிக் சட்டப்படி (Salic Law) அரச பதவி பெண்களுக்கோ அல்லது பெண்க@டாகவோ கொடுக்கப்படக் கூடாது என்றது. ஆகையால், கப்ரின் வம்சத்தின் மூத்த உறுப்பினரான நான்காம் சார்ள்சிற்குப் பின், வலோயசின் பிலிப் நான்காம் சார்ள்சின் இறப்பிற்குப் பின் அரச பதவியைப் பொறுப்பேற்றார். பிரான்சின் பார்வையில் சட்டப்படி அரச முடிக்குரியவர், அத்துடன் சார்ள்சின் விதவைக்குப் பெண் குழந்தை பிறந்தவுடன் அரச பதவியேற்பதற்கு அனுமதியளிக்கப்பட்டார். ஆறாவது, பிலிப் ஆக முடி சூடிக்கொண்டார். இவர் கப்ரின் வம்சத்தின் படைப் பிரிவைச் சேர்ந்தவரும் முதலாவது வலோயிஸ் குடும்பத்தைச் சேர்ந்தவருமாவார்.

பத்தாம் லூயியின் மகளான நவரேப் பிரதேச இரண்டாம் ஜொகான் சட்டப்படி பிரஞ்சு அரச பதவியை ஏற்க முடியும். ஆனால், அவரை அவ் அரச பதவியை அனுபவிக்க ஆதரவு செய்யவில்லை. நவரே இராச்சியம் பெண்களுக்கு எதிரானது அல்ல ஆகையால், ஒப்பந்தத்தின் மூலம் அவளின் புருசனை எவொரொக்சைச் சேர்ந்த பிலிப்பும் இராச்சியத்தின் அரசுரிமை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். எப்படியிருந்தும் அதே ஒப்பந்தம் பிரான்சில் ஆறாம் பிலிப் பதவி ஏற்பை ஏற்றுக்கொள்ளும்படி ஜோனையும் அவளது கணவனையும் வற்புறுத்தியது. அத்துடன் அவளின் பாரம்பரிய பிரான்சு

ஆட்சிப் பிரதேசங்களான சம்பேனனையும் பிரியையும் பிரஞ்சு அரசனுக்குத் தரம் குறைந்த தோட்டங்களுக்கு மாற்றீடாக ஒப்படைக்கும்படியும் வற்புறுத்தினர். எவரொக்சினுடைய (Evreux) ஜொகனும் பிலிப்புக்கும் ஒரு மகன் இருந்தான். அவன் நவரேயைச் சார்ந்த இரண்டாம் சார்ள்ஸ் ஆவான். 1332இல் பிறந்த சார்ள்ஸ், மூன்றாம் எட்வேட்டை, ஒரே பெற்றோருக்குப் பிறந்த நான்காம் பிலிப் ஆக ஈடு செய்யப்பட்டு பத்தாம் லூயிக்கு அடுத்ததாக, இருந்தும் எட்வேட், புனித லூயி, நான்காம் பிலிப், மற்றும் நான்காம் சார்ள்சிற்கு அடுத்ததாக உள்ள ஆண் அரசனாகக் காணப்பட்டான்.

## 8.5. போரின் போது 1328 – 1337 (போர்க்காலங்களில்)

பிலிப்பின் பதவியேற்பிற்குப் பின்பு ஆங்கிலேயர்கள் கஸ்கனியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். கஸ்கனியில் ஏற்றுமதிக்கு உரிய உப்பும் வைனும் உற்பத்தி செய்யப்பட்டது. அத்துடன், சிறந்த இலாபத்தையும் ஈட்டியது. அது ஒரு இங்கிலாந்திற்குரிய பிரஞ்சு ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாகக் காணப்பட்டது. அப்பிரதேசம் யாருக்குரியது என்பது இரண்டு நாடுகளுக்கும் தர்க்கத்திற்குரியதாக இருந்தது. ஆறாம் பிலிப் சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ளும்படி எட்வேட்டை வற்புறுத்தினான். ஆனால், அப்பாவால் இழக்கப்பட்ட நிலங்களைத் திருப்பித் தரும்படி கேட்டுக் கொண்டான். இணக்கப்பாடு 1329இல் ஒருவராலும் எட்டப்படவில்லை. ஆனால், 1331இல் அவன் நாட்டில் மோசமான பிரச்சினைகளை எதிர்கொண்டான். எட்வேட் பிலிப்பை, பிரான்சின் அரசனாக ஏற்றுக் கொண்டான். பிரஞ்சு அரச பதவி வேண்டாம் என்றான். அதன் விளைவாகக் கஸ்கனியை இங்கிலாந்து வைத்துக் கொண்டது. அதற்குப் பதிலாக எட்வேட் பிரஞ்சு அரச பதவியை விட்டுக் கொடுத்தார்.

1333இல் மூன்றாம் எட்வேட் பிரன்சு அலூட் கூட்டணியுடன் ஸ்கொட்லண்டைச் சேர்ந்த இரண்டாம் டேவிட்டுடன் ஸ்கொற்றிஸ் சுதந்திரத்திற்கான இரண்டாவது போரிற்குச் செல்கின்றான். இங்கிலாந்தின் கவனம் வட பகுதியில் இருக்கும்போது பிலிப் மீண்டும் கஸ்கனியைப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் பார்க்கின்றான். எப்படியிருந்தும் போர் இங்கிலாந்திற்கு விரைவான வெற்றியைக் கொடுத்தது. எட்வேட் மற்றும் எட்வேட் பலியலினாப் ஜுலையில் நடந்த ஹில்டன் போரில் டேவிட் தோற்கடிக்கப்பட்டுப் பிரான்சிற்கு வற்புறுத்தலினால் அனுப்பி வைக்கப்படுகின்றான். 1336இல் பிலிப், டேவிட்டை மீண்டும் ஸ்கொற்றிஸ் அரசனாக்குவதற்கும் கஸ்கனியைக் கைப்பற்றுவதற்குப் படையெடுப்பது எனத் திட்டமிடுகின்றான்.

## 8.6. போரின் ஆரம்பம் 1337 – 1360

ஆங்கிலக் கால்வாயின் கரையோரப் பிரதேசக் குடியிருப்புக்களைப் பிரஞ்சுக் கப்பல்கள் தாக்கியபடியால் இந்நாடுகளிற்குமிடையில் போர் உருவானது. அத்துடன் 1337இல் பிலிப் கஸ்கனிப் பிரதேசத்தை மீளப் பெறக் கேட்டபோது நிலமானியச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எட்வேட் பிரபுக்களின் தேவைகளைக் கவனிக்கவில்லை எனப்பட்டது. மூன்றாம் எட்வேட் உண்மையில் தான் தான் பிரஞ்சு அரச பதவிக்குத் தகுதியுடையவன் என்றும் ஆல் செயின்ற்ஸ் டேயில் (All Saints Day) லிங்கன் போதகரான ஹென்றி பேர்கஸ் (Henry Burghersh) இங்கிலாந்து அரசனிற்காகப் பாரிஸைச் சென்று அடைகின்றான். அங்கு போர் பிரகடனப்படுத்தப்பட்டது.

போர் ஆரம்பித்தபோது பிரான்சில் கிட்டத்தட்ட 17 மில்லியன் மக்களும் இங்கிலாந்தில் 4 மில்லியன் மக்களும்

காணப்பட்டன. அத்துடன் ஐரோப்பாவின் பெரும்பாலான நைற்றுகள் (Knights) பிரான்சிலேயே காணப்பட்டனர்.

போரின் ஆரம்ப காலங்களில் மூன்றாம் எட்வேட், கீழ்ப் பிரதேச பிரபுக்களுடனும் பிளண்டர் இன பறங்கியருடனும் கூட்டுறவு வைத்திருந்தார். இரண்டு தாக்குதல்களிற்குப் பின்பு 1340இல் கூட்டணி உடைந்து விட்டது. ஜேர்மனி இளவரசர்களுக்கு உதவித் தொகை வழங்கியும் வெளிநாட்டில் இராணுவத்தைப் பராமரிப்பதற்கான செலவுகள் எல்லாம் மொத்தமாக இங்கிலாந்து அரசின் கஜானாவை வெறுமையாக்கி விட்டது. இது எட்வேட்டின் தன்மானத்தை மிகவும் மோசமாகப் பாதித்தது. ஜெனோசிக் கப்பல்களையும் மாலுமிகளையும் பாவிப்பதன்மூலம் கொஞ்சக் காலத்திற்கு ஏகபோகத்தை அனுபவித்தனர்.

பல நகரங்கள் அடிக்கடி தாக்கி அழிக்கப்பட்டன. இது இங்கிலாந்துக் கடற்கரையில் அழிவையும் பயத்தையும் ஏற்படுத்தியது. போர் நடந்து கொண்டிருக்கும்போது பிரான்ஸ் இங்கிலாந்திற்குள் படையெடுத்துக் கைப்பற்றி விடும் என்ற பயம் தொடர்ந்து காணப்பட்டது. பின்ராஸின் கடலாதிக்கத்தின் காரணமாக இங்கிலாந்து பிளன்டேர்சுடன் செய்த கம்பனி வர்த்தகமும் கஸ்கனியின் வைன் வர்த்தகமும் இங்கிலாந்தில் பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தியது. எப்படியிருந்தும் 1340இல் இங்கிலாந்து இராணுவம் தரையிறங்குவதை முறியடிக்குமபோது “சுலைஸ் போரில்” பிரஞ்சுக் கப்பற்படை முற்றுமுழுதாக அழிக்கப்பட்டது. இதற்குப் பின்பு இங்கிலாந்துப் படை ஆங்கிலக் கால்வாயை ஆதிக்கம் செலுத்திப் பிரஞ்சுப் படையெடுப்புக்களைத் தடுத்து நிறுத்தியது.

1341இல் பிறிற்றனிக் கோமகன் (Duchy of Brittayn) பதவிக்கான போட்டிகள் உருவாகி பிரிற்றனிக்கான அரச பதவிப் போர் தொடங்கியது. இதில் எட்வேட்

மொன்போட்டுக்காக ஜோனை ஆதரித்தும் பிலிப் புலொயிஸ்சின் சார்ள்சையும் ஆதரித்தனர். அடுத்து வந்த சில வதுடங்களுக்குப் பிறிட்டனிக்காக மாறி மாறிப் போர் நடந்து கொண்டிருந்தது. பல தடவைகள் ''வான்ஸ்'' நகரம் கை மாறியது. மேலும், கஸ்கனிக்கான பிரச்சாரமும் நடந்து கொண்டிருந்தது. இரு தரப்பிற்கும் கூட்டு வெற்றி கிடைத்தது.

ஜுலை 1346இல் எட்வேட் ஆங்கிலக் கால்வாய்க்குக் குறுக்காகப் பாரிய படையெடுப்பொன்றை நடாத்தி கொற்ரென்ரினில் தரை இறங்குகிறார். இங்கிலாந்து இராணுவம் ஒரே நாளில் கையினைக் (Caen)ஐக் கைப்பற்றி விட்டது. இது பிரான்சிற்கு அதிசயமாக இருந்தது. ஏனெனில், தாம் அதை நீண்ட நாட்களுக்கு வைத்திருக்கலாம் என எதிர்பார்த்தார்கள். பிலிப் அவரை எதிர்ப்பதற்குப் பாரிய இராணுவத்தைத் திரட்டினான். எட்வேட்டும் வடக்கிலிருந்து கீழ்ப் பிரதேசங்களை நோக்கி படையெடுக்க நினைத்தான். போகும்போது பிரதேசங்களைக் கைப்பற்றி வைத்திருத்தலுக்குப் பதிலாகக் கொள்ளையடித்துச் சென்றான். பிலிப்பை அவரால் வெற்றி கொள்ள முடியவில்லை. போருக்குத் தயாராக இருந்த எட்வேட்டின் படைகளைப் பிலிப்பின் இராணுவம் தாக்கியது. புகழ் பெற்ற கிரேசிப் போர் (Battle of Grecy) பிரான்ஸிற்கு முழு அனர்த்தத்தையும் கொடுத்தது. இங்கிலாந்திற்கு அப் புகழ் சென்றது. எட்வேட் எதிர்ப்பு இல்லாத வடபகுதிக்குச் சென்று ஆங்கிலக் கால்வாயில் அமைந்த கலைஸ் (Calais) என்ற நகரைத் தாக்கி 1347இல் அதைக் கைப்பற்றுகின்றான். இது இங்கிலாந்திற்கு ஒரு இராஜதந்திர வெற்றியாக அமைந்தது. இதனால் இங்கிலாந்து தமது படைத் துருப்புக்களைப் பிரான்சில் பாதுகாப்பாக இருப்பதற்கு உதவியது. அதே வருடம் இங்கிலாந்து, நவிலேர் குறொஸ் (Neville's Cross) என்ற போரில் ஸ்கொட்லந்தை வென்றது. இதன் மூலம்

இரண்டாம் டேவிட்டைக் கைப்பற்றி ஸ்கொட்லண்டின் அச்சுறுத்தல் குறைக்கப்பட்டது.

1348இல் நடந்து கறுப்பு இறப்பு (Black Death) ஐரோப்பாவையே நாசமாக்கியது. அதற்குப் பின் 1356இல் இங்கிலாந்து பொருளாதார ரீதியாக மீண்டெழுந்தது. எட்வேட்டின் மகனும் ‘‘கறுப்பு இளவரசன்’’ (Black King) எனப் பெயர் போன வேல்ஸ் இளவரசன், கஸ்கனியில் இருந்து பிரான்ஸிற்குப் படையெடுத்து இங்கிலாந்தின் ‘‘பொயிற்றேர்ஸ் போரில்’’ பாவித்த தந்திரங்களை மீண்டும் கிரேசிப் போரில் பாவித்து, இங்கிலாந்து பாரிய வெற்றியடைந்தது. பிரான்ஸின் புதிய அரசனை இரண்டாம் ஜோன் கைப்பற்றினான். ஜோன் எட்வேட்டுடன் சண்டை நிறுத்த ஒப்பந்தம் செய்தான். அவன் இல்லாதபோது அரசாங்கத்தின் பெரும்பகுதி வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. அவ் வருடத்தின் பிற்பகுதியில் இரண்டாம் இலண்டன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன்மூலம் இங்கிலாந்து ‘‘அக்குற்றைன்’’ என்ற பிரதேசத்தைப் பெற்றதுடன் ஜோனும் விடுவிக்கப்பட்டார்.

இச் சூழ்நிலையில் பிரான்ஸ் நாட்டுப் பகுதிகள் முழுக்கக் குழப்பமாகக் காணப்பட்டது. போரின்போது பயிற்றப்பட்ட படை வீரர்களின் செயற்பாடுகள் மிகவும் தரக் குறைவாகக் காணப்பட்டன. 1358இல் ஜக்குயூரி (Jacquerie) என்று அழைக்கப்படும். விவசாயிகளின் கிளர்ச்சி உருவாகியது. எட்வேட் அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி, பிரான்சிற்கான மூன்றாவதும் இறுதியுமான படையெடுப்பை நிகழ்த்தி அரசைக் கைப்பற்ற நினைக்கின்றான். ஆனல், ஒரு பிரான்ஸ் இராணுவமும் அவனுக்கு எதிராகப் போர்க் களத்தில் இருக்கவில்லை. டுபைனிடமிருந்து (Dauphin) பாரிசை அல்லது றெயிம்சைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆனால், பிற்காலத்தில் ஐந்தாம் சார்ள்ஸ் அதனைப் பெற்றுக் கொண்டான்.

அவன் கலந்தாலோசித்து 1360இல் பிரிட்டனி ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டான். இங்கிலாந்து இப்போரின் கட்டத்தில் பிரிட்டனி, அக்குற்ரைன், கலைஸ், பொன்தியூ ஆகிய பிரதேசங்களின் அரைவாசியையும் பிரான்சின் கப்பம் கட்டும் அரசுகள் கூட்டாகவும் ஒன்றிணைந்து இங்கிலாந்தின் சாதகமான சூழ்நிலையில் பிரான்ஸில் குழப்பங்கள் காணப்பட்டன.

## 8.7. முதலாவது சமாதானம் 1360 – 1369

ஜோனினுடைய மகன் முதலாம் லூயி (Due – d'Anjau) ஜோனிற்குப் பதிலாக இங்கிலாந்திற்குக் கைதியாக அனுப்பப்பட்டான். 1362இல் தப்பி விட்டான். இரண்டாம் ஜோன், துணிகரமாகத் தன்னை விடுத்துக் கொண்டு, கைதியாக இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தான். அவன் 1364இல் கௌரவக் கைதியாக இருந்தான். அத்துடன், ஐந்தாம் சார்ல்ஸ் அவனை வெற்றி கொண்டு பிரான்சின் அரசனாக முடி சூடுகின்றான்.

பிரிக்ரிக்னி ஒப்பந்தம் எட்வேட்டின் பிரஞ்சு அரச பதவியைத் துறக்க வைக்கின்றது. அதேவேளை, அக்குற்றைனின் அவனின் எல்லைகளைப் பாரிய அளவு விரிவுபடுத்துகின்றது. அத்துடன், அவன் கலைஸ்சைக் கைப்பற்றுவதையும் உறுதிப்படுத்துகின்றது. உண்மையில் எட்வேட் பிரான்சின் அரச பதவிக்கான தன்மையை ஒரு நாளும் இழந்ததில்லை. அத்துடன், சார்ல்ஸ் தான் பதவிக்கு வந்தவுடன் புதிய பிரதேசங்களை மீண்டும் பிறிக்ரிக்னி ஒப்பந்தத்தின் மூலம் எட்வேட், பிரஞ்சு அரச பதவியைத் துறந்தான். அதேநேரம், அது அக்குற்றைனில் அவனின் எல்லைகளை விரிவுபடுத்தி

அவன் கலைய்சினது (Calais) கைப்பற்றுதலை உறுதிப்படுத்தினான். உண்மையில், எட்வேட் அரச பதவியைத் துறக்கவில்லை. அத்துடன், சார்ள்ஸ் பதவி ஏற்றவுடன் எட்வேட்டின் புதிய பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றிக் கொள்வதென்றான். 1369இல் 3ஆம் எட்வேட் பிறிக்ரிக்னியின் ஒப்பந்தத்தைச் சரியாகப் பின்பற்றவில்லை என நடித்து, சார்ள்ஸ் மீண்டும் ஒரு போரைப் பிரகடனப்படுத்தினான்.

## 8.8. ஐந்தாம் சார்ள்ஸ் மூலம் பிரான்சு வெற்றிபெறல் 1369 – 1389

**டினான் என்ற இடத்தில் டியூ குஸ்கிளின்:**

ஐந்தாம் சார்ள்சின் ஆட்சியில் ஆங்கிலேயர்கள் படிப்படியாகப் பின்தள்ளப்பட்டார்கள். ஔரே போரில் (Battle of Auray) பிரித்தானியர்களுக்குச் சாதகமாக அமைந்தும் பிரிட்டனிக் கோமகன்கள் இறுதியாகப் பிரான்சு அரியணையுடன் சமரசத்திற்குப் போனார்கள். பிரிரொன் போர்வீரரான பேற்றண்ட், டியூ குஸ்கிளின், நூற்றாண்டுப் போரில் வெற்றி பெற்ற பிரஞ்சுப் படைத் தளபதிகளில் ஒருவனாவான்.

இவ் வேளையில், கறுப்பு இளவரசன் (Black Prince) 1366இலிருந்து ஸ்பெயினுடன் போரிட்டுக் கொண்டிருந்தான். மேலும், அவனுக்குச் சுகயீனம் காரணமாக 1371இல் தலைமைப் பதவியிலிருந்து விலகி இருந்தான். இத்தருணத்தில் பிரான்சிடம் சாதகமான சந்தர்ப்பங்கள் இருந்தும் மூன்றாம் எட்வேட்டிற்கு வயது மூப்பினால் போரிட முடியவில்லை. காஸ்ரைலைச் சேர்ந்த பெட்ரோவின் இரு மகள்களான "கொன்ஸ்ரன்சும் இசபெல்லாவும் கறுப்பு இளவரசனின் சகோதரர்களான கோன்றைச் சேர்ந்த ஜோனையும் லாங்லியைச் சேர்ந்த எட்மட்டையும் திருமணம் முடித்தனர். டியூ குஸ்கிளினதும் பிரஞ்சினதும் ஆதரவுடன் 1370இல்

றஸ்மராவைச் சேர்ந்த ஹென்றியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டான். ஒரு புறத்தில் பிரான்சிற்கும் கஸ்ரைலிற்கும் இடையில் போர் வெடித்தது. மறுபுறம் போத்துக்கல்லுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் போர் மூண்டது.

ஜோன் சண்டோஸ், பொயிற்றுவின் செனச்சல் என்போர் களத்தில் இறந்ததுடன் கப்ரல் டீ புச் கைப்பற்றப்பட்டதுடனும் இங்கிலாந்து தனது படைத் தளபதிகளைப் பிரான்சில் இழந்து விட்டது. டீயூ குஸ்கிளின் பல தொடர்ச்சியான கவனமான படை முன்னெடுப்புக்களைச் செய்து, பெரிய ஆங்கிலேயப் படைத் தளபதிகளை விலக்கி (ஒதுக்கி) 1372இல் பொயிற்றர் நகரத்தையும் 1377இல் பேர் கிராக் நகரத்தையும் மற்றும் பல நகரங்களையும் கைப்பற்றினான். ஆங்கிலேயர்கள் டீயூ குஸ்கிளினிற்குப் பல அழிவுகளை ஏற்படுத்த முயற்சித்தனர். ஆனால், டீயூ குஸ்கிளின் தப்பித்துக் கொண்டான்.

கறுப்பு இளவரசன் 1376இலும் மூன்றாம் எட்வேட் மகன் போர் டீயூக்சைச் சேர்ந்த ரிச்சேர்ட் இங்கிலாந்து அரியணையைக் கைப்பற்றினான். பின்பு டீயூ குஸ்கிளின் 1380இல் இறந்து விட 1389இல் போர் தவிர்க்க முடியாதவாறு தற்காலிக சண்டை நிறுத்தத்திற்கு இட்டுச் சென்றது. மீண்டும் போர் ஆரம்பிக்க முதல் சமாதானம் பல தடவைகள் நீடிக்கப்பட்டது.

## 8.9. இரண்டாவது சமாதானம் 1389 – 1415

பிரான்சில், இங்கிலாந்தைச் சேர்ந்த நான்காம் ஹென்றி, போர்ச் செயற்பாடுகளைத் திட்டமிட்டிருந்தும் குறுகிய ஆட்சிக்காலம் ஆகையால் அவற்றைச் சிறந்த முறையில் செயற்படுத்த முடியாமல் இருந்தது. அதேவேளை பிரஞ்சு அரசன் ஆறாம் சார்ள்சுக்குப் பித்துப் பிடித்திருக்கும்போது, அதிகாரத்திற்கான திறந்த போட்டி அவருடைய மச்சானை (Cousin) பேர்கண்டியைச் சேர்ந்த ஜோனிற்கும் அவனின்

சகோதரரான ஒர்லியன்சைச் சேர்ந்த லூயியிற்குமிடையில் ஆரம்பமானது. லூயியினுடைய கொலைக்குப் பின்பு ஆர்மக்னாக் குடும்பம் ஜோனிற்கு எதிராக அரசியல் அதிகாரங்களை எடுத்துக்கொண்டது. 1410இல் இரு தரப்புக்களும் உள்நாட்டுப் போரில் இங்கிலாந்தின் உதவியை நாடி நின்றார்கள்.

இக்காலகட்டத்தில் அயர்லாந்து மற்றும் வேல்ஸ்சில் நடைபெற்ற எழுச்சி ஸ்கொட்லண்டின் புதுப்பிக்கப்பட்ட புதிய எல்லைப் போர் மற்றும் இரண்டு தனியான உள்நாட்டுப் போர்கள் என்பன இணைந்து இங்கிலாந்து உள்நாட்டுக் குழப்பங்களுக்குள்ளாகி இருந்தது. இரண்டாம் ரிச்சட்டின் அதிக ஆட்சிக்காலம் அயர்லாந்தின் குழப்ப நிலைகளுடன் காணப்பட்டது. குழப்பங்களை அவர் தீர்க்கவில்லை. அத்துடன் அரச பதவியையும் வாழ்க்கையையும் அவர் தனது மச்சானான ஹென்றியிடம் இழந்துவிட்டார். 1399இல் ஹென்றி அதிகாரத்தைத் தானே எடுத்துக்கொண்டான். பின்பு வேல்ஸ்சில் ஒனவன் கிளின்டவர் என்ற கிளர்ச்சி 1415 வரை ஒடுக்கப்படவில்லை. வட, வெல்ஸ் (North Welsh) பல வருடங்களாகப் பூரண சுதந்திரம் அடையாமல் காணப்பட்டது. ஸ்கொட்லாண்டில், இங்கிலாந்து ஆட்சி மாற்றம் காரணமாக விரைவாகப் புதிய தொடர்ச்சியான எல்லைத் தாக்குதல்கள் நடைபெற்றுப் படையெடுப்பின்மூலம் 1402இல் எதிர்த்தாக்குதல் நடாத்தப்பட்டது. அத்துடன் ஹொமில்டன் ஹில் (Homildon Hill) போரில் ஸ்கொட்லாந்து இராணுவம் அழிக்கப்பட்டது. நொதம்பர்லாண்ட் பிரபுவிற்கும் ஹென்றிக்குமிடையிலான மோசமான பிளவு, வட இங்கிலாந்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு நீண்ட கொடிய போர் நடைபெற்றது. ஆனால், அது 1408இல் பெர்சி (Percy) குடும்பத்தை முற்றுமுழுதாக அழித்ததன்மூலம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. இக்காலகட்டம் முழுவதும் இங்கிலாந்தை ஸ்கன்டினேவியன் மற்றும் பிரான்சுக் கடற்கொள்ளைக்காரர்கள்

மீண்டும் மீண்டும் தாக்கினர். இதனால் கப்பற்படையும் வர்த்தகமும் பாரிய அழிவுக்குள்ளாகின. இப்பிரச்சினை களினால் பிரான்சுடனான பிளவுகள் 1415 வரை தீர்வுகளைக் கொடுக்கவில்லை.

## 8.10. ஐந்தாம் ஹென்றியின் கீழ் இங்கிலாந்தின் வெற்றிகள்

1415 – 1435 காலப்பகுதி பிரான்சை விழுங்கிய 1415 – 1429 நூற்றாண்டுப் போரின் இறுதிப் போர்க் காலமாகும். இது நூற்றாண்டுப் போரின் மிகவும் புகழ் பெற்ற காலமாகும். 1399இல் நான்காம் ஹென்றி அரச பதவிக்கு உயர்ந்ததிலிருந்து போர்ப் பிரகடனத்திற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. எப்படியிருந்தும் அவனது மகன் ஐந்தாம் ஹென்றிக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. 1414இல் அவரது ஆதரவிற்காகப் பிறிற்றினிப் பிரதேசத்தை ஆர்மக்னாக்கின் வழங்குதலை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, இரண்டாம் ஹென்றியின் ஆட்சியின் போதிருந்த பிரதேச அந்தஸ்துகளைத் திருப்பித் தரும்படி வற்புறுத்தினார். 1415இல் அவர் இராணுவப் படைகளுடன் ஹர்போர் (Harbour) என்ற இடத்தில் தரையிறங்கி அப்பிரதேசத்தைக் கைப்பற்றினான். பாரிசிற்கு நேரடியாகத் தரையிறங்க நினைத்தபோதும் பிரான்சில் ஆங்கிலேயர்கள் குடியிருந்த கலையிஸ்சை நோக்கிப் படையெடுப்பை நிகழ்த்தினார். கிரேசியில் நடந்த படையெடுப்பில் பின்தள்ளப்பட்டுக் குறைந்த செயற்பாடுகளுடன் சொம்மிற்கு வடக்கேயுள்ள அகின்கோட் (Agicourt) போரில் பாரிய பிரஞ்சு இராணுவத்திற்கெதிராகப் போராட வேண்டியிருந்தது. அவருக்குச் சாதகமான சூழ்நிலைகள் இருந்தும் முழுவெற்றியும் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் பிரான்ஸ் பல ஆர்மக்னாக் (Armognac) தலைவர்களின் இழப்புடன் பிரான்சின் தோல்வி தவிர்க்க முடியாதிருந்தது (Catastrophic).

## 8.11. அகின்கோர்ட் போரைப் பற்றிப் பதினைந்தாம் நூற்றாண்டின் விபரிப்பு

1417இல் ஹென்றி கேயின் 1419இல் றோவான் ஆகிய நோர்மண்டியின் பல பிரதேசங்களைக் கைப்பற்றி, இரண்டு நூற்றாண்டுகளில் முதன் முறையாக இங்கிலாந்திற்கான நேர்மண்டியை உருவாக்கினான். “1419இல் பயமற்ற டியூக் ஜோனின் கொலைக்குப் பின்பு பாரிஸ் நகரை வைத்திருந்த பேர்கண்டி அரசுடன் சாதாரண கூட்டுறவு வைத்திருந்தான். 1420இல் ஹென்றி அரசனை ஆறாம் சார்ள்ஸ் சந்தித்து, றோயிஸ் ஒப்பந்தத்தை மேற்கொண்டான். (Treaty of Troyes) அதன் மூலம் ஹென்றி, சார்ள்சின் மகளான கதரீனைத் திருமணம் முடித்து, பின் ஹென்றியின் வாரிசுகள் பிரான்சின் அரசுரிமையைப் பெற்றார்கள். ஏழாம் சார்ள்ஸ் (Dauphin) தகுதியற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்பட்டார். அவ் வருடத்தின் பிற்பகுதியில் ஹென்றி பாரிசிற்குள் நுழைந்து எஸ்ரேற் - ஜெனரல் மூலமாக அவ் ஒப்பந்தம் தள்ளுபடி செய்யப்பட்டது. ஹென்றி பிரான்சில் வளர்ச்சியடைந்தான். ஆனால், 1422இல் மெயோக்ஸ் (Meaux) என்ற இடத்தில் இறந்தான். விரைவில் சார்ள்சும் இறந்து விட்டான். ஹென்றியின் சிறிய மகன், ஆறாம் ஹென்றி உடனடியாக, இங்கிலாந்தினதும் பிரான்சினதும் அரசனாக முடிசூடிக் கொண்டான். ஆனால், அர்மக்னாக்கள் சார்ள்சின் மகளுக்கு விசுவாசமாக இருந்ததுடன், மத்திய பிரான்சில் அப்போர் தொடர்ந்தது.

1429 வரைக்கும் ஆங்கிலேயர்கள் தொடர்ந்து இராணுவ வெற்றியை அனுபவித்தார்கள். அவ்வருடம் பிராங்கோ - ஸ்கொற்றிஸ் இராணுவம், ஜோன் பஸ்ரோல்ப்[f] தலைமையில் அமைந்த உதவி வாகனத்தைத் தனிமைப்படுத்தினர். உதவி வழங்கும் வாகனங்களை ஆர்ச்சேசைச் சுற்றி வட்டமாக நிறுத்தி, பாரிய இராணுவத்தைப் பின்னடையச் செய்தது. இது

இங்கிலாந்தின் இறுதி வெற்றிகளில் ஒன்றாகக் கணிக்கப்பட்டது. "ஹென்றிங்ஸ் போர்" (The Battle of the Herrings) அவ்வருட இறுதியில் லொரைன் பிரதேசத்திலிருந்து பிரான்சைக் காப்பாற்ற பெண் விவசாயி வடிவில் தோன்றியவர் ஆர்க் பிரதேசத்தைச் சேர்ந்த ஜோன் ஆகும் (John of Arc).

## 8.12. பிரான்சு மீண்டெழுதல் 1429 – 1453

1424இல் ஆறாம் ஹென்றியின் மாமன்மார்கள் குழந்தைப் பிரதிநிதி ஆட்சி தொடர்பாகச் சண்டை போட்டார்கள். ஹம்பெரி என்ற குழுசெஸ்டர் பிரதேச ஆட்சியாளர், ஹைனோட் பிரதேச பெண் பிரபுவான ஜாக்குலினைத் திருமணம் செய்து, ஹொலண்டிற்குப் படை எடுத்துத் தனது முன்னைய ஆட்சிப் பிரதேசங்களை மீட்டெடுத்து, பேர்கண்டிப் பிரபுவான மூன்றாம் பிலிப்புடன் நேரடி மோதலில் ஈடுபடுத்தப்பட்டார்.

1428இல் ஒர்லியன்களை முற்றுகை இடுவதன்மூலம் போரை மீண்டும் தொடர்வதற்கு ஆங்கிலேயர்கள் தயாராக இருந்தனர். நனரை முற்றுகையிடுவதற்கு அவர்களின் படைகள் போதாமல் இருந்தது. ஆனால், பெரிய பிரஞ்சுப் படைகள் அமைதியாக இருந்தன. 1429இல் ஜோன் ஒவ் ஆர்க் தான் ஆங்கிலேயர்களை வெளியேற்றுவதற்குக் கடவுளிடமிருந்து கனவுத் தரிசனம் பெற்றதாக டுப்பினைத் திருப்திப்படுத்தித் தன்னை முற்றுகைக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டாள். அவள் உள்@ர் படைகளின் மன உறுதியை மேம்படுத்தி, ஆங்கிலேயர்களின் தற்காலிகக் கோட்டைகளைத் தாக்கி ஆங்கிலேயர்களின் முற்றுகையை விலக்குமாறு வற்புறுத்தினாள். ஜேனினால் உற்சாகமூட்டப்பட்டதால் லொயரில் (Loire) இருந்த ஆங்கிலேயர்களின் பல உறுதியான பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டன. அதற்குப் பின்பு கிட்டத்தட்ட

8000 உறுதியான பிரஞ்சு இராணுவம் பாற்றேயில் (Patay) உள்ள ஆங்கிலேயர்களின் கூடாரங்களைத் தாக்கி அழித்தன. அத்துடன் சுறூஸ்பெரியின் முதலாம் பிரபு, ஜோன்ரல்பொற் மற்றும் ஜோன்பஸ்ரோப் என்ற பாடைத் தளபதிகளால் 3000 இராணுவப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பிரான்சின் போர்களில் நிலத்தில் அடைந்த முதலாவது பெரிய வெற்றியாகும். இவ் வெற்றி டுப்பின் றெயிம் (Reims) பிரதேசத்திற்கு அணி வகுப்பில் சென்று ஏழாம் சார்ள்ஸ் என்ற பெயரில் முடிசூடுவதற்கு வழி வகுத்தது.

1430இல் பேர்கண்டியர்கள், ஜோனைக் கைப்பற்றி விட்டார்கள். பின்பு ஆங்கிலேயர்களுக்கு விற்கப்பட்டு, கொல்லப்பட்டார். பிரஞ்சுக்காரர்களின் முன்னேற்றம் பேச்சுவார்த்தை மூலம் குறைக்கப்பட்டது. ஆனால், 1435இல் மூன்றாம் பிலிப்பின் தலைமையில் பக்கம் சார்ந்து, அராஸ் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டு (Treaty of Arras) பாரிசிற்குப் பிரான்ஸ் அரசனிடம் திரும்பி வந்தார்கள். பேர்கண்டியினுடைய விசுவாசமற்ற தன்மை அடிக்கடி மாறிக் கொண்டிருந்தது. ஆனால், தாழ் பிரதேசங்களில் (Low Countries) தமது ஆட்சிப் பரப்புக்களை விரிவாக்குவதில் கவனம் செலுத்தியபடியால் பிரான்சில் தலையிடுவதற்குச் சிறிய சக்தி அவர்களிடம் இருந்தது. போரினால் ஏற்பட்ட நீண்ட சண்டை நிறுத்த ஒப்பந்தங்கள் (Truce) சார்ள்சிற்குத் தனது இராணுவத்தையும் அரசையும் மீளக்கட்டி அமைப்பதற்கு அவகாசம் கொடுத்தது. i.e. நிலமானிய இராணுவம் நவீன தொழில் சார்ந்த இராணுவமாக மாற்ற அமைக்கப்பட்டு உயர்தரமான சிறந்த தேவைகளுக்குப் பயன்படுத்தவும் பிரான்சு அரசை மையப்படுத்தவும் உதவியது.

பொதுவாகச் சிறந்த உயர் தந்திரோபாயம் நிறைந்த இங்கிலாந்துப் படைகள் ஆற்றல் மிக்கவையாக விளங்கின.

(Polent factor) உதாரணமாக ஜோன் ரல்போற் விரைவான தாக்குதலில் விசேட திறமை பெற்றவர், றை (Ry) (1436) மற்றும் நோர்மண்டியில் அவ்ரான்சஸ் என்ற (1439) பிரதேசங்களில் பிரஞ்சுப் படைகளை முற்றாக வெளியேற்றினர். ரொல்பொற் இக்காலகட்டத்தில் மிகவும் துணிகரமான ஒரு போராளியாகவும் நாற்பது போர்களிலும் சிறிய சண்டைகளிலும் வெற்றி பெற்றார். போர் நீண்ட நாட்களுக்கு நீடித்தது. காவலர் ரிச்மவுண்ட்ரின் கூற்றுப்படி ''ஆங்கிலேயர்களும் அவர்களின் தளபதிகளும் எல்லாருக்கும் மேலாக ''கரால்பொற்'' உயர்தரத்திற்கான (Superiority) மதிப்பினைச் சிறப்பாகப் பெற்றிருந்தார்கள்''.

1449இல் ரூவன் (Roven) பிரதேசத்தை மீண்டும் பிரான்ஸ் கைப்பற்றி விட்டது. 1450இல் கிளமொன்ற் கோமான் மற்றும் மொன்போற் குடும்பத்தைச் சேர்ந்த ரிச்மண்ட் பிரபு ஆர்தர் டீரிச்மொன்ற் என்போர் இங்கிலாந்து இராணுவத்தைக் கைப்பற்றி, மிக்னிப் போரில் காயின் (Coen) என்ற பிரதேசத்தை விடுவித்துத் தோற்கடித்தனர். இங்கிலாந்து இராணுவம் கிளர்மன் இராணுவத்தைத் தாக்க எண்ணிய ரிச்மண்ட்டின் படைகளால் இரு பக்கங்களிலும் இங்கிலாந்துப் படைகளால் தாக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டது. பிரஞ்சுப் படைகள் ஜுலை 6இல் சேர்போக்கை (Cherbourg) கைப்பற்றியது. அத்துடன் 1451இல் போர்டுவக்சை (Bordeaux)யும் பேயோனையும் (Bayonne) கைப்பற்றின. கஸ்கனியை (Gascony) மீண்டும் கைப்பற்றுவதற்கு, ரல்போட் எடுத்த முயற்சி ஆரம்பத்தில் உள்நாட்டு மக்களால் விரும்பப்பட்டது. 1453இல் கஸ்ரிலோன் போரில் (Battle of Castillon) ஜீன் புறூவே (Jean Bureau)யினாலும் அவனின் பீரங்கியினாலும் நசுக்கப்பட்டது. அங்குரல்போட் சிறிய ஆங்கிலோ காஸ்கன் படைகளுக்குத் தலைமை தாங்கிய

போது மூடிய இராணுவ முகாமில் முன்பக்கத் தாக்குதலில் ரொல்பொற் தோற்கடிக்கப்பட்டார். நூற்றாண்டுப் போரின் இறுதிப்போராக இது கருதப்பட்டது.

## 8.13. முக்கியத்துவம்

நூற்றாண்டுப் போர் என்பது அக்கால இராணுவ வளர்ச்சியாகும். ஆயுதங்கள் தந்திரோபாயங்கள், இராணுவக் கட்டமைப்பு போரைப் பற்றிய சமூகத்தின் கருத்துகள் என்பன மாற்றம் அடைந்தன. ஏனெனில், போரிற்கான தேவை, தொழில்நுட்பவியலின் வளர்ச்சி மற்றும் போர் புகட்டிய பாடங்கள் தெரியவந்தன.

பிரான்சை விட, இங்கிலாந்து அதி நவீன அரசாகக் கருதப்பட்டது. மையப்படுத்தப்பட்ட அதிகாரம் பாராளுமன்றம் வரி விதிக்கும் அதிகாரத்துடன் காணப்பட்டது. இராணுவ எழுத்தாளர் கேர்ணல் அல்பிரட் பேர்ணின் (Burne) கருத்துப்படி இங்கிலாந்து தெரிவு செய்யும் முறைகளில் புரட்சியை ஏற்படுத்தியிருந்தது. நிலமானிய அமைப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்டதற்குப் பதிலாகப் பணம் கொடுத்து இராணுவம் தெரிவு செய்யப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்குத் இராணுவப் பயிற்சி பெற்ற படைத்தளபதிகள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டார்கள். இந்த “நவீன இராணுவம்” குறிப்பிட்ட காலத்திற்குத் தேவையாக இருந்தது. பல சீமான்கள் படை எடுப்பிற்குப் போக மறுத்தார்கள். ஆட்சியைப் பாதுகாப்பதுதான் நிலமானிய முறை என்றனர். அத்துடன் ஆரம்பத்திலிருந்தே இங்கிலாந்தில் இராணுவ வளர்ச்சி காணப்பட்டது.

நூற்றாண்டுப் போரிற்கு முன்பு பாரிய குதிரைப் படைதான் இராணுவத்தில் சக்தி வாய்ந்ததாகக் கருதப்பட்டது. ஆனால், இப் பேரின் முடிவில் இந்நம்பிக்கை மாறிவிட்டது. பாரிய

குதிரைப் படைகள் நீண்ட அம்பினாலும் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வைத்திருப்பவர்களினாலும் மாற்றீடு செய்யப் பட்டதுடன் கிரைசி மற்றும் அகின்கோட் பிரதேசங்களில் இங்கிலாந்து வெற்றியடைவதற்குத் தந்திரோபாயங்கள் உதவின. ஸ்கொட்லாந்திலிருந்து ஆங்கிலேயர்கள் இலகுவான தற்காப்புக் கவச வாகனம் மேலேறி அமர்ந்து துருப்புக்கள் போரிடுவதற்காகக் கலைந்து செல்லல் போன்ற முறைகளைக் கற்றுக்கொண்டனர். நூற்றாண்டுப் போரின் இறுதியில் அதிகமாகச் செலவு செய்து சிறந்த பயிற்சியளித்த குதிரைப் படைகள் எல்லாம் மறைந்துபோயின.

சாதகமான சாமர்த்தியங்கள் காணப்பட்டாலும் இராணுவ எழுத்தாளரான தளபதி புல்லரின் கருத்துப்படி, பிரான்ஸ், இங்கிலாந்தை விட பெரிய பிரதேசமாகவும் நான்கு மடங்கு சனத்தொகையைக் கொண்டும் காணப்பட்டது. ஆங்கிலேயர்கள் பிரான்ஸைக் கைப்பற்றுவது கடினமாகும்.

இங்கிலாந்துத் தளபதிகளுக்குத் தீர்வு காணமுடியாத பிரச்சினையாக இருந்தது. முற்றுகைப் போர்முறை காலம் காலமாக இருந்தது. படைகளை நிறுத்திப் பிரதேசங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அதிக நிலங்கள் தேவைப்பட்டது. காலம் போகப் போக இது இங்கிலாந்தின் விசேட அதிகாரங்களைக் குறைத்தது. ஓர்லியன் பிரதேசத்தில் சலிஸ் பெரியின் இராணுவம் 5000 போர் வீரர்களைக் கொண்டிருந்தது. நகரில் முதலீடு செய்வதற்குப் போதுமற்றதாக இருந்ததுடன் எண்ணிக்கையில் பிரஞ்சுப் படைகளை விடக் குறைவாக இருந்தது. நகரத்திற்கு உள்ளும் வெளியிலும் பிரஞ்சுப் படைகளை விடக் குறைவாக இருந்தது. தோல்வியின் விளைவாக பிரான்ஸ், தமது உறுதியைக் குலைத்த சில பகுதிகளை மாத்திரம் மீளப் பெற வேண்டி இருந்தது. ஓர்லியன் பிரதேசத்தில் ஜோன் ரல்போட் பிரபு ஆகியோரின் மூர்க்கமான பிரச்சாரங்கள் மற்றும் அவரின்

படைகள் அங்கு தங்குவது தவிர்க்க முடியாததானாலும் பிரான்ஸில் ஆங்கிலேயர்களின் முயற்சியின் முடிவைப் பேர்கண்டிய ஒப்பந்தத்தின் முடிவு எடுத்துக்கூறியது.

இப்போர் தேசிய உணர்வுகளைத் தூண்டியது. நிலம் என்ற வகையில் இது பிரான்சை அழித்தது. அத்துடன் பிரான்சு தேசியத்தைத் தூண்டியது. நூற்றாண்டுப் போர், பிரான்சின் நிலமானிய அமைப்பு முறையிலிருந்து மைய அரசு முறைக்கு விரைவாக மாற்றீடு செய்தது. இப்போர் ஆங்கிலேய மற்றும் பிரான்சு அரசர்களுக்கிடையில் மாத்திரம் அல்லாது மக்களுக்கிடையேயும் நடந்த ஒரு போராகும். பிரஞ்சுக்காரர்கள் இங்கிலாந்திற்குப் படையெடுத்து ஆங்கில மொழியை அழித்து விடுவார்கள் என இங்கிலாந்தில் தொடர்ந்து வதந்தி காணப்பட்டது. இதன் காரணமாகத் தேசிய உணர்வு இரு நாடுகளிலும் மேலோங்கியது.

போரின் இறுதிக் காலத்தில், அரசியல் மற்றும் போர்க் களத்தில் முக்கிய பங்களிப்புச் செய்தவராகப் பேர்கண்டிப் பிரபு எழுச்சி பெற்றதைக் காணமுடியும். அத்துடன் இது தெற்கு நெதர்லண்டுடன் தற்போதைய பெல்ஜியம் கம்பளி உற்பத்திக்குப் பெயர் பெற்றது. அடிக்கடி மாறிக் கொண்டிருக்கும் உறவுகளின் காரணமாகப் போர்க்காலம் முழுக்க அவர்களுக்கே சொந்தமான கம்பளித் தொழிற்சாலையை விருத்தி செய்து வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பை அதிகரிப்பதற்கு ஆங்கிலேயர்களை ஊக்குவித்தது.

## 8.14. ஆயுதங்கள்

இப்போரில் புதிய ஆயுதங்கள் இல்லாத வேளையில் ஆங்கிலேயர்களின் புகழ் பெற்ற யேமன் வில்லாளியின் (Archer) நீண்ட வில் (Long Bow) பாவிக்கப்பட்டது. இது போர்க்காலம் முழுக்கச் சிறந்த பங்களிப்பைச் செய்தது. இவ்

ஆயுதங்கள் போர்களிலும் சிறு சிறு சண்டைகளிலும் ஆங்கிலேயர்களுக்குச் சிறந்த சாதகமான விளைவுகளைக் கொடுத்தது.

பிரஞ்சுக்காரர்கள் பிரதானமாகக் குறுக்கு அம்பிலேயே (Cross Bow) தங்கியிருந்தார்கள். அத்துடன் ஜினோசி எனும் பணத்திற்காக அமர்த்தப்பட்ட கூலிப் படைகளிலும் தங்கியிருந்தார்கள். குறுக்கு அம்பு பாவிக்கப்பட்ட காரணம், அதைச் செயற்படுத்துவதற்குக் குறைந்த பயிற்சி அல்லது திறமை தேவைப்பட்டது. எப்படியிருந்தும் மெதுவாகத் தான் மீள ஏற்ற முடியும் (Reload). பாரமானது, மழையினால் இலகுவில் பழுதாகி விடும். அத்துடன் நீள் அம்பின் (Long Bow) சரியான செயற்பாட்டுமுறை இதற்கு இல்லை. இதனை விரைவாக மீள ஏற்ற முடியும். நீண்ட அம்பைப் பயன்படுத்துவதற்கு ஆங்கில வில்லாளி அதிக பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அதைப் பாவிப்பதற்குப் பாரிய சக்தி தேவை. இது பிரித்தானிய தீவுகளில் அதிக பாவனையில் இருந்தது. இதை ஒரு ஆயுதமாகப் பாவிப்பதற்கு ஆங்கிலேயர்களுக்குத் திறமையும் இருந்தது. அதை பாவனைக்குக் கொண்டு வந்தது இராஜதந்திர முயற்சியாகும். ஆங்கிலேயரான ஸ்கொட்லண்ட்காரர்களுடன் தொடர்ந்து இக்கருவி மூலம் தோற்கடிக்கப்பட்டது. நீண்ட அம்பு எப்பொழுதும் ஆங்கில இராணுவத்தைவிட அதிக எண்ணிக்கையில் இருக்கும். போர் முடிவிற்கு வரும்போது திறமையான நீண்ட அம்பு எய்துபவர்கள் குறைந்து விட்டனர். ஆகையால் நீண்ட அம்பைப் பாவிப்பவர்கள் இல்லாதபடியால் அதன் பயன்பாடு குறைந்து விட்டது. அத்துடன் நூற்றாண்டுப் போரில் பல புதிய ஆயுதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1375களிலேயே துப்பாக்கித் தூள், துப்பாக்கிகள், பீரங்கிகள் என்பன சிறந்த பங்களிப்பைச் செய்திருந்தன. இப் போரின்

இறுதிப் போரான ‘‘கஸ்ரிலோன்’’ போரில்தான் ஐரோப்பிய வரலாற்றில் முதன்முதலாகப் பீரங்கிப் படைதான் ஒரு தீர்மானிக்கும் காரணியாக இருந்தது.

## 8.15. போரும் சமூகமும்

இந்தப் புதிய ஆயுதங்களின் அறிமுகத்தினால் போர்க் காலங்களில் பிரபுக்கள் ஒரு தீர்மானிக்கும் காரணியாக இருக்க முடியவில்லை. ஒரு காலத்தில் ஆயுதம் தாங்கிய காவற் படைக்கு (Knights) கிடைக்க வேண்டிய அதிகாரங்கள், வெகுமதிகள், அந்தஸ்துகள் என்பன நீண்ட அம்புகள் மற்றும் துப்பாக்கிகள் வைத்திருந்த விவசாயிகளுக்குச் சென்றது. இராணுவக் கூட்டுச் சேர்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. பணத்திற்காக வேலை செய்வதற்காக, தமது பிரபுக்கள் அழைக்கும்போது நிலமானியப் பிரபுக்கள் சென்று விடுவர். போரின் முடிவில் பிரான்சும் இங்கிலாந்தும் குறிப்பிட்ட கால இராணுவத்தை உருவாக்குவதற்காகப் போதுமான பணத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. மேற்கு உரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்ததில் இருந்து முதற் தடவையாக இந்த இராணுவம் மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் உருவாகியது. இந்தக் குறிப்பிட்ட கால இராணுவம் முற்றுமுழுதான அரசனின் அதிகாரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தியது. தமது இராச்சியத்தை வெளிப்படையெடுப்பாளர் களிடமிருந்து பாதுகாப்பதற்கு மட்டும் அல்லாமல், அரசனை உள்ளக அச்சுறுத்தல்களிலிருந்தும் மற்றும் மக்களைக் கண்காணிப்பதற்குமாக உருவாக்கப்பட்டது. அது இடைக்கால ஒழுங்கமைப்புகளை மாற்றி மையப்படுத்தப்பட்ட தேசிய அரசுகளை உருவாக்குவதற்கான ஆரம்பகால வளர்ச்சியில் ஒரு பெரிய படியாகும்.

நூற்றாண்டுப் போரின் பெரிய போரான கிரைசிப் (Crecy) போருடன் வீரமரபுக் காலகட்டம் (Age of Chivelry) முடிவிற்கு வந்தது. இதற்கு மாறாக இக்காலத்தில் வீரமரபு மீட்டெடுக்கப்பட்டு அத்துடன் இப் போரில் போரிட்டு வீரமரணம் அடைவது மரியாதை என்று கருதினார். அதிக எண்ணிக்கையிலான வீரர்கள் காணப்பட்டாலும் வீரமற்றவர் களுடன் போராடுவதற்கு ஆங்கிலேயர்கள் மன்னிப்புக் கோரினர். அவர்களுக்கு வேறு வழியில்லாமல் இவ் அருவருப்பான விடயத்தை ஆங்கிலேயர் அல்லாதவர்களுக்கு விட்டுவிட்டார்கள். இது பிரஞ்சுக்காரர்களுக்கு ஒரு பாடமாக அமைந்ததுடன் அதை அவர்கள் அதிக விலை கொடுத்து நீண்ட நாட்களுக்குப் பின் அறிந்து கொண்டனர். பிரஞ்சுக்காரரும் ஆரம்பத்தில் வீரமற்றவர்களாகத்தான் இருந்தார்கள். இவ் வீரத்தன்மையான எண்ணங்கள் வளர்வதற்குக் காரணம் 12ஆம் நூற்றாண்டு வீர சாகச புராணங்களின் ஆழமான தாக்கமாகும். போர்க்களங்களில் இக் காவற் படையினர் அக் கதாபாத்திரங்களைக் கற்பனை செய்து கதாபாத்திரங்களைப் போர்க் களங்களில் நடித்தனர்.

ஒரு கண் மூடியபடி பேற்றண்ட் டியூ, கியூஸ்கிளின் போர்க்களத்திற்குச் சென்றதாகக் கூறினார். அதாவது, எனது மனைவியின் மரியாதைக்காக வேண்டி மூன்று ஆங்கிலேயர்களைக் கொல்லும் வகையில் எனது ஒரு கண்ணைத் திறக்கமாட்டேன் எனக் கூறினார். இப்படைவீரர்கள் பிரான்சில் இரண்டாம் ஜோன் அரசனைக் கைது செய்தபோது எஸ்ரேற் ஜெனரல் (உயர் பதவி அதிகாரி) அரசனின் அதிகாரத்தினைத் தனது கையில் எடுத்துக்கொள்ள முயற்சித்தார். எஸ்ரேற் ஜெனரல் என்பவர் மதகுரு, பிரபு, நகர மக்கள் ஆகிய மூன்று குழுக்களின் பிரதிநிதியாவார். பாரம்பரியமான பிரான்ஸின் ஆலோசனைக் குழுவில் ஒருவர் நான்காம் பிலிப் (த பெயர்) பின் தலைமையில் பிரான்ஸ் (Leree) அரசனால் அறவிடப்பட்ட பிரதான வரியைச்

சேர்ப்பதற்கு அல்லது விலக்குவதற்கு உயர் அதிகாரி (Estate) உரிமையுடையவர். எற்றனி மார்சல் (Eternne Marcel) என்ற வர்த்தகரின் தலைமையின் கீழ் Great Ordinance (பெரிய சட்டம்) என்ற ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி Estate General (உயர் அதிகாரி) அரசனை வற்புறுத்தினான். இங்கிலாந்தின் "மக்ன் கார்ட்டா"வைப் (Magna Carta) போன்று Great Ordinanceஉம் (பெரிய சட்டம்) (1) உயர் அதிகாரி (Estate) வரி அறவிடுவதையும் செலவு செய்வதையும் மேற்பார்வை செய்வார். (2) சுதந்திரமான அரசனின் அழைப்பில் ஒழுங்கான இடைவெளிகளில் சந்திப்பது (3) குறிப்பிட்ட நீதி அதிகாரங்களை அமுல்படுத்துவது மற்றும் (4) அரச நடவடிக்கைகளில் பாரிய பங்களிப்புச் செய்வது ஆகிய சட்டங்களைக் கொண்டிருந்தது.

இவ் அதிகாரங்களைப் பிரபுக்கள் அதிகமாக எடுத்துக் கொண்டார்கள். எப்படியிருந்தும் ஜக்கூறி (Jacquerie) என்ற விவசாயிகளின் கிளர்ச்சியை 1358இல் தோற்றுவித்தது. பிரபுக்களின் உயர் வரி அறவிடுவதனாலும் கட்டாயத் தொழிலாளர் கொள்கைகளினாலும் கோபமடைந்த விவசாயிகள் கூட்டம் வட பிரான்சில் கொலைகளிலும் எரியூட்டுதல்களிலும் ஈடுபட்டனர். இதற்குப் பலியானவர்களுள் ஒருவராக எய்ற்றினி மார்சல் காணப்பட்டார். அத்துடன் அவரின் தலைமைத்துவம் இல்லாமல் Estate Generalகள் பிளவுபட்டனர்.

நூற்றாண்டுப் போரின் விளைவாக இங்கிலாந்திலும் அரச அதிகாரங்களின் விரிவாக்கம் தொடர்பாகப் பல கேள்விகள் எழுந்தன. பிரான்ஸைப் போன்று இங்கிலாந்திலும் மூன்றாம் எட்வேட் இறந்தபின் அவனின் பேரன் உடனடியாக அரச பதவிக்கு வரமுடியாமல் ஒரு இடைவெளி காணப்பட்டது. அது அரசனுக்கு எதிரான ஆபத்தான கிளர்ச்சியை உருவாகியது. இது விவசாயிகளின் கிளர்ச்சி என்றும் (Peasant's Revolt) வற்

ரெய்லரின் கிளர்ச்சி (Wat Tayler's Rebellion) என்றும் அழைக்கப்பட்டது. இது 1381இல் நடந்தது.

போரிற்காக உயர் வரி செலுத்துவதற்காகவும் பிரபுக்களினால் இங்கிலாந்து விவசாயிகள் பண்ணை ஆட்களாக (Serfdom) தரம் குறைத்தலுக்குமாக ஒரு இலட்சம் விவசாயிகள் இலண்டன் மாநகரில் கண்டனப் பேரணி நடாத்தினார்கள். இங்கிளர்ச்சிக் கும்பல் கொலைகள் செய்து அரச அதிகாரிகளினதும் வரி அறவிடுவோரினதும் வீடுகளுக்குத் தீ வைத்தார்கள். இரண்டாம் றிட்சேட்டாகிய இளைய அரசன் தனது அரண்மனைக்கு வெளியில் விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்தபடியால் வன்முறைகள் குறைந்தன. அதேவேளை இளைய அரசனுக்குப் பதிலான முகரான் 'வற் ரெய்லர்' புரட்சியின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டார். அத்துடன் இரண்டாம் ரிச்சட் விவசாயிகளை அவர்களின் கிராமங்களுக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் எல்லோரும் சென்ற பின் இரண்டாம் ரிச்சட் வரிகளை மீண்டும் உயர்த்தினான்.

## சுருக்கம்

- தொடர்ச்சியாக இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையில் கி.பி. 1337இல் இருந்து 1453 வரைக்கும் நடந்த இந்நூற்றாண்டுப் போரானது இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையில் உடனடியான மற்றும் நீண்ட கால விளைவுகளைக் கொடுத்தது.

- போர்கள் காரணமாகப் போர் வீரர்கள் மற்றும் மக்களின் இறப்புக்களும் இழப்புக்களும் இங்கிலாந்தை வறுமையாக்கியது.

- அத்துடன் வெற்றி பெற்ற பிரான்ஸ் அரசன் கலையஸ்ஸைத் தவிர (பிரான்சில் ஒரு பிரதேசம்) முழு பிரான்சையும் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தான்.

- பிரபுக்களிடையே பிளவுகள் ஏற்பட்டு அடுத்த அரசன் யார் என்ற போட்டியும் ஏற்பட்டது.

## திறவுச் சொற்கள்

பேர்கண்டி, ஸ்கொட்லண்ட், நிலமானிய முறை, துப்பாக்கிகள், நான்காம் பிலிப்

## உசாத்துணை நூல்கள்

பேர்டினன்ட் ஷெபீல், (1972), **ஐரோப்பிய வரலாறு,** இலங்கை கல்வித் திணைக்களம், கொழும்பு.

Dharmaraj, J., (2002), **History of Europe (476 – 1453)**, Tensy Publications, Sivakasi.

## பயிற்சி வினாக்கள்

1. நூற்றாண்டுப் போரின் பின்னணியை விளக்குக.

2. இப் போரின் கட்டங்களைக் கூறி அவற்றை விளக்குக.

3. இங்கிலாந்து அரசர்கள் இப்போரை எவ்வாறு கையாண்டார்கள்?

4. இப் போரினால் ஏற்பட்ட சமூக மாற்றங்களை ஆராய்க.

# அத்தியாயம் – 9

# இடைக்காலக் கற்றலும் பல்கலைக்கழகங்களும்

## பொருளடக்கம்

9.1. அறிமுகம்
9.2. தோற்றமும் ஆரம்ப வரலாறும்
9.3. ஐரோப்பாவில் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சி
9.4. பல்கலைக்கழகப் பீடங்கள்
9.5. மாணவர் சமூகம்

## அத்தியாயச் சுருக்கம்

இடைக்காலங்களில் கல்வியைப் பற்றிச் சாதாரண மனிதர்கள் சிந்தித்ததே இல்லை. அவன் தனது நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ இலக்கிய வளர்ச்சியிலோ அல்லது வேறு நிகழ்வுகளிலோ அக்கறை காட்டுவதில்லை. அரசர் சார்ளமேன் மற்றும் தேவாலயங்களின் உதவியுடன் கல்வி ஊக்குவிக்கப்பட்டது. ஒவ்வொரு தேவாலயங்களும் மடலாயங்களும் பள்ளிக்கூடங்களை நடாத்தின. மாணவர்களைப் போதகர்களாகப் பயிற்றுவிப்பதில் ஆர்வம் காட்டினர்.

## அத்தியாயத்தின் நோக்கம்

இடைக்கால ஐரோப்பாவில் எவ்வாறு பல்கலைக்கழகக் கல்வி தோன்றியது பற்றியும் அவற்றின் வளர்ச்சியைப் பற்றியும் அறிந்து கொள்வதே இவ் அத்தியாயத்தின் நோக்கம்.

## கற்றல் பெறுபேறுகள்

1. இடைக்கால ஐரோப்பாவில் பல்கலைக்கழகங்களின் தோற்றத்தைப் பற்றி மாணவர் அறிந்திருப்பர்.
2. கல்வி வளர்ச்சியில் தேவாலயங்களின் பங்களிப்புப் பற்றி அறிவர்.
3. பல்கலைக்கழகப் பீடங்கள் பற்றி அறிந்திருப்பர்.

## 9.1. அறிமுகம்

உயர் கல்வி நடவடிக்கைகளை ஒரு கூட்டுத்தபானம் இடைக் காலங்களில் செயற்படுத்திக் கொண்டிருந்தது. 11ஆம் நூற்றாண்டில் கல்வி நிலையில் மாற்றங்கள் உருவாகின. மக்கள் கற்பதில் ஆர்வம் காட்டினர். ஏனெனில், அரச மற்றும் தேவாலய சேவைகளில் மக்கள் சிறந்த முக்கிய பதவிகளைப் பெறக்கூடியதாக இருந்தது. பொதுவாக மேற்கு ஐரோப்பிய கல்வி நிலையங்கள் என்று கூறக்கூடிய பல்கலைக் கழகங்களில் தற்கால இத்தாலி, சிசிலி, நேப்பிள்ஸ் இராச்சியங்கள், இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போத்துக்கல் மற்றும் ஸ்கொற்லண்ட் போன்ற நாடுகளில் காணப்பட்டன. 11ஆம், 15ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் கலை, சமயம் சார்ந்த உயர் ஒழுக்கமுடைய கல்வி, சட்டம், மருத்துவம் என்பன கற்பிக்கப்பட்டன.

இப்பல்கலைக்கழகங்கள் மிகவும் பழமை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயப் பாடசாலைகளில் இருந்தும் மடாலயப் பாடசாலைகளில் இருந்தும் தோன்றின. ஆனால், இவைகள் உண்மையான பல்கலைக் கழகங்களாக எப்பொழுது தோன்றின என்பதை வரையறுப்பது கடினம்.

மாணவர்கள், ஆசிரியர்கள் என்போரின் ஒத்துழைப்புடன் உருவாகிய கல்விக் குழுக்களைத்தான் ஆரம்பத்தில் Universitas என அழைக்கப்பட்டது. பின்பு அது பல

வடிவங்களாகியது. 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுயமாக இயங்குகின்ற ஆசிரியர் மற்றும் அறிவாளிகள் குழுக்களை அடையாளம் கண்டு சமூக அல்லது சமய நிர்வாகத்தினால் இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

நவீன கலத்தின் ஆரம்பத்திலிருந்து, மேற்கத்தைய பாணியைக் கொண்ட இக்கட்டமைப்புப் படிப்படியாக இடைக்கால மேற்கு இலத்தீனிலிருந்து உலகம் முழுவதும் பரவியது. இறுதியாக மற்ற எல்லா உயர் கல்வி நிறுவனங்களையும் மாற்றீடு செய்து எல்லாவற்றையும் விடச் சிறந்த உயர் கல்விக்கு முன்மாதிரியாக அமைந்தது.

## 9.2. தோற்றமும் ஆரம்ப வரலாறும்

பொதுவாகப் பல்கலைக்கழகங்கள் சாதாரண நிறுவனமாக இடைக்காலக் கிறிஸ்தவ அமைப்பிலேயே காணப்பட்டன. மேற்கு ஐரோப்பியர்கள் பைசாந்திய மற்றும் முகமதிய நாகரிகங்களுடன் தொடர்பு வைத்தபோது உயர் கல்விக்கான விருப்பம் அதிகரித்தது. பல்கலைக்கழகங்கள் ஆரம்பிப்பதற்கு நூறு வருடங்களுக்கு முன்பாகவே ஐரோப்பிய உயர் கல்வி முறை கிறிஸ்தவ தேவாலயப் பள்ளிக் கூடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு சந்நியாசிமார்களும் கன்னியாஸ்திரிகளும் வகுப்புகளை நடாத்தினர். இவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள்.

12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய சமூகங்களில் அதிகரித்து வரும் நகரமயமாதலில் கிறிஸ்தவ மதப் போதகரின் தேவை அதிகரித்தது. கிரிகேரியன் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து பாதிரிமார்கள், தேவாலயச் சட்டம் மற்றும் ஞானஸ்நானம் என்பவற்றைக் கற்பிப்பதற்குத் தேவாலயப் பாடசாலைகளை உருவாக்கி, பாதிரிமார்களுக்குத் தேவாலயச் சட்டங்களைச் சொல்லிக் கொடுத்ததுடன், சமய

நிர்வாகத்தில் உள்ள உலகாயுத விடயங்களையும் சமயம் சார்ந்த கலந்துரையாடல்களையும் நிதிகளைத் தகுந்த முறையில் கையாள்வதைப் பற்றியும் பயிற்றுவித்தனர். பாப்பரசர் ஏழாம் கிரகரி நவீன பல்கலைக் கழகங்களை வளர்ப்பதில் பல கருத்துக்களைத் தெரிவித்தார் (Critical). ஏனெனில், 1079 தேவாலயக் கட்டளையின்படி (Papal Decree) தேவாலயப் பாடசாலைகளை நிறுவி, அவை பின்பு முதலாவது ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களாக மாறின.

இறையியல் தொடர்பான கட்டமைப்பின் வளர்ச்சியில் கற்றல் அவசியமாக இருந்ததுடன் ஆசிரியர்களும் கௌரவம் பெற்றனர். கல்வியின் தேவை விரைவில் தேவாலயப் பாடசாலைகளின் திறனை மிஞ்சி விட்டது. ஒரு ஆசிரியர் தான் இவ்வளவு வேலைகளையும் நடாத்தினார். அத்துடன் தேவாலயப் பாடசாலை மாணவர்களுக்கும் பறங்கியர் களுக்குமிடையில் சிறிய நகரங்களில் பதற்றம் ஏற்பட்டது. அதனால தேவாலயப் பாடசாலைகள் பொலக்னா, உரோம், பாரிஸ் போன்ற பெரிய நகரங்களுக்கு இடம்பெயர்ந்தன.

செயட் பரீட் அலற்றாஸ் என்பவர் மதரசாக்களுக்கும் (இஸ்லாமிய ஆரம்பப் பாடசாலை) ஆரம்ப ஐரோப்பியக் கல்லூரிகளுக்குமிடையில் பல ஒற்றுமைகளை அவதானித்தார். மேலும், முதலாவது ஐரோப்பியப் பல்கலைக்கழகம், இஸ்லாமிய ஸ்பெயின் நாட்டினதும் சிசிலியில் உள்ள எமிரோற்றினதும் தாக்கத்தைக் கொண்டிருந்தது என ஆதாரத்துடன் கூறினர். ஜோர்ஜ் மக்தசி, ரொப் ∴ஹப், நோர்மன் டானியல் ஆகியோர் இதைக் கேள்விக்கு உள்ளாக்கினர். இஸ்லாமிய உலகில் இருந்து கிறிஸ்தவ ஐரோப்பாவிற்கு உண்மையாகக் கடத்தப்பட்டதா என்பதற்கு ஆதாரங்கள் போதாது என்றும் அத்துடன் இஸ்லாமியக் கல்லூரிக்கும் ஐரோப்பியப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் காணப்படும் கட்டமைப்பு, முறையியல்கள்,

நடைமுறைகள், பாடநெறிகள் மற்றும் சட்ட அந்தஸ்துகளின் வேறுபாடுகளை முதன்மைப்படுத்தினர்.

## 9.3. ஐரோப்பாவில் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சி

ஹேஸ்ரிங்ஸ் ரஸ்டால் இடைக்காலப் பல்கலைக்கழகங்களின் தோற்றம் பற்றி நவீன புரிந்துணர்வுகளை அறிவித்தார். மேற்கு ஐரோப்பிய நாடுகள் பைசாந்திய மற்றும் முகமதன் நாகரிகங்களுடன் தொடர்பை ஏற்படுத்தியபோது உயர் கல்வியின் தேவை அதிகரித்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் உயர் கல்வி நிலையங்கள் ஐரோப்பாவில் உருவாகின. ஆரம்பகாலப் பல்கலைக்கழகங்கள் பின்வருமாறு, பொலக்னாப் பல்கலைக்கழகம் (1088), பாரிஸ் பல்கலைக்கழகம் (1150), ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் (1168), மொடீனாப் பல்கலைக்கழகம் (1175), பொலன்சியா பல்கலைக்கழகம் (1208), கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் (1209), சலமன்கா பல்கலைக்கழகம் (1218), மொன்ற்பிலர் பல்கலைக்கழகம் (1220), பதுவா பல்கலைக்கழகம் (1222), நேப்பிள்ஸ் பல்கலைக்கழகம் (1224), துளைன்ஸ் பல்கலைக்கழகம் (1229), ஓர்லியன்ஸ் பல்கலைக்கழகம் (1235), செய்னாப் பல்கலைக்கழகம் (1240), வியன்னாப் பல்கலைக்கழகம் (1365), கெய்டில்பேர்க் பல்கலைக்கழகம் (1386), செயினற். அண்ரூஸ் பல்கலைக்கழகம் (1413) என்பன ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தனியார் கூட்டுத்தாபனங்களாக ஆரம்பிக்கப்பட்டன.

## 9.4. பல்கலைக்கழகப் பீடங்கள்

பல்கலைக்கழக வளாகங்களில் அதிக இளைஞர்கள் கூடினர். இவர்கள் பிரபல்யமான அறிஞர்களிடமிருந்து விரிவுரைகளைக் கேட்டார்கள். பாரிஸ் பல்கலைக்கழகத்தில் அதிகளவாக 50,000 மாணவர்கள் கலை, சமயச் சட்டம், மருத்துவம் மற்றும்

இறையியல் என்பவற்றில் கல்வி கற்றனர். இப் பல்கலைக்கழகத்தை நிறுவியவரான பீற்றர் அபேலாட் என்பவர் பிரபல்யமான ஆசிரியரும் ஆய்வாளருமாவார். அவரின் பீடத்தில் மிக அதிகளவான மாணவர்கள் கல்வி கற்றனர். இறையியலில் அவருடைய "Yes" and "No" என்ற நூல் தேவாலய நிர்வாகத்தினால் தடை செய்யப்பட்டது.

சலர்னோ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் பிரபல்யமாகியது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் செயற்பட ஆரம்பித்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிரபல்யமான ஆசிரியர்களாக பீற்றர் அபேலார்ட்டும் மற்றும் ஆய்வாளர்களாக றோஜர் பக்கன், தோமஸ் அக்குனாஸ் போன்றோர் காணப்பட்டனர். சமுதாயத்தின் கல்வி வாழ்க்கையில் தேவாலயம் அதிகாரம் செலுத்தியது. அத்துடன் புனித தோமஸ் அக்குனாஸ் (1225 – 1274) தலைசிறந்த மெய்யியல் வாதியாகவும் இறையியல் வாதியாகவும் திகழ்ந்து கல்விப் புலமையில் சிறந்து விளங்கினார்.

நவீன காலங்களைப் போன்று அக்காலத்தில் பல்கலைக் கழகங்களுக்குப் பெரிய கட்டிடங்கள் இருக்கவில்லை. பல வேளைகளில் மாணவர்கள் நிலத்தில் இருந்துதான் படித்தார்கள். பாடநூலை ஆசிரியர் விளக்கத்துடன் மெதுவாகச் சொல்லச் சொல்ல மாணவர்கள் எழுதினார்கள். அவர்களுடைய அறிவு வகுப்பறைக் கலந்துரையாடல்கள் மூலமும் விவாதங்கள் மூலம் சோதிக்கப்பட்டது.

புராதன உரோமப் பாடசாலைகளில் சுதந்திரக் கலைகளாக இலக்கணம், தர்க்கம், கேத்திர கணிதம், எண்கணிதம், வானசாஸ்திரம், இசை என்பன கற்பிக்கப்பட்டன.

மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்குப் பின்பு பரீட்சை மூலம் அவர்கள் தேறிய பின்புதான் முதல் கலைமாணிப் பட்டம் கிடைக்கப் பெறும். கற்பிப்பதற்குத் தகுதியான பின்பு சில வருடங்களுக்குப் பின் முதுமாணிப் பட்டக் கற்கைக்குச் செல்லலாம். இப் பட்டப்பின் படிப்பின் மூலம் அவர்கள் நிரந்தர ஆசிரியர்களாகின்றனர். சில பல்கலைக் கழகங்கள் மிகத் திறமையான கல்வியாளருக்குக் கலாநிதிப் பட்டத்தை வழங்கின.

## 9.5. மாணவர் சமூகம்

மாணவர்கள் பட்டம் பெறுவதற்கு மாத்திரம் பல்கலைக் கழகங்கள் செல்வதில்லை. அத்துடன் தொழில்வாய்ப்பிற்கும் தயாராகுகின்றனர். பல்கலைக் கழகங்கள் பௌதீக, பொருளாதார வசதிகளைக் கொடுக்காதபடியால் மாணவர்கள் பல கஸ்டங்களை எதிர்நோக்கினர். இவ்வளவு கஸ்டங்களை அனுபவித்தாலும் மாணவர்கள் தங்களைக் கல்விக்காக அர்ப்பணித்தனர். அக்கால மாணவர்களும் தற்போதைய மாணவர்களைப் போன்று புதிய மாணவர்களுடன் சகஜமாகப் பழகி ஆசிரியர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு மற்றும் limericks எழுதி முரடர்களுடனும் சண்டை பிடித்தனர்.

## முடிவுரை

இடைக்காலப் பல்கலைக்கழகங்கள், மக்களின் உயர்கல்வி மற்றும் கலாச்சார நிலையங்களாகச் செயற்பட்டன. சிவில் மற்றும் தேவாலயச் சட்டங்கள் தேசிய அரசு என்ற கோட்பாட்டை வளர்த்தது. விஞ்ஞான மாணவர்களால் விஞ்ஞானச் சிந்தனைகள் வளர்க்கப்பட்டன. றோஜர் பெக்கன் (Roger Becon) என்பவர் மற்றவர்களின் அவதானங்களைவிட முதன்மை அறிவை வலியுறுத்தினார். மேலும், கலை, இறையியல், தத்துவம், சட்டம், மருத்துவம் போன்ற துறைகளில் திறமையான

ஆசிரியர்களைத் தயார்படுத்துவதுடன் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

## சுருக்கம்

1. இடைக்கால ஐரோப்பாவில் கல்வியைப் பற்றிய சிந்தனை உருவானது.
2. கிறிஸ்தவத் தேவாலயங்களிலும் மடாலயங்களிலும் மாணவர்கள் விசேடமாகக் கற்றனர்.
3. பொலக்னாப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து பாரிஸ், மிலான் போன்ற பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றன.
4. தலைசிறந்த ஆசிரியர்கள் காணப்பட்டனர்.
5. சட்டம், இறையியல், மருத்துவம் போன்ற பீடங்கள் காணப்பட்டன.
6. மாணவர்கள் பல கஸ்டங்களை அனுபவித்தாலும் அர்ப்பணிப்புடன் கல்வி பயின்றனர்.

## திறவுச் சொற்கள்

தேவாலயம், பொலக்னாப் பல்கலைக்கழகம், இறையியல், ளெலகீகம், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம்

## உசாத்துணை நூல்கள்

அருந்தவராஜா, க., (2004), **ஐரோப்பா**, அஞ்சு வெளியீடு, நல்லூர்.

அருந்தவராஜா, க., (2005), **ஐரோப்பிய வரலாறு (பிற்பட்ட இடைக்காலத்தினது),** அஞ்சு வெளியீடு, நல்லூர்.

சத்தியசீலன், ச., (1994), **நாகரிகங்களுக்கு ஓர் அறிமுகம்,** அகிலம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

மங்களரூபி, சி., (2014), **உலக நாகரிகங்கள்,** சிவா வெளியீடு, யாழ்ப்பாணம்.

மங்களரூபி, சி., (2018), **ஐரோப்பிய வரலாறு,** சிவா வெளியீடு, யாழ்ப்பாணம்.

Rao, B.V., (2014), **World History from Early Times to A.D. 2011**, Sterling Publishers (Pvt.) Ltd., New Delhi.

Dharmaraj, J., (2002), **History of Europe (476 – 1453)**, Tensy Publications, Sivakasi.

## பயிற்சி வினாக்கள்

1. இடைக்கால ஐரோப்பாவில் பல்கலைக்கழகங்களின் தோற்றத்தை விளக்குக.

2. இப் பல்கலைக்கழகங்கள் மூலம் மாணவர்கள் பெற்றுக்கொண்ட நலன்களை ஆராய்க.